* 7801—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சு களுக்கு மத்திய அரசில் பணிபுரியும் நர்சுகளுக்கு வழங்கப்படுவது போல் இரவுப் பணி படி (Night Duty Allowance) வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

* 8194—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்த மருத்துவர்களுக்கு அரசு மாதா மாதம் கொடுத்துவரும் உதவித் தொகை சங்கராபுரம் தொகுதியிலுள்ள சித்த மருத்துவர்களுக்கு தரப்படவில்லை என்பதை அரசு அறி யுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது அளிக்கப்படும்?

1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அய்ய லூரில் அரசு மருத்துவமனை கட்டப்படுமா என்று இருக்கிறது. ஆகவே, இவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்போடு இந்த ஆண்டு மட்டும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங் கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையமும் துவக்கப்படுவதற்காகத்தான் அந் தப் பணம் கொடுக்கப்படுகிறது. கட்டிடம் கட்டுவதற்காக அந் தத் தொகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கையை கவனித்து இந்த ஆண்டோ அல்லது வருகிற ஆண்டுகளிலோ படிப்படியாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கிற முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவுப் பணி படி.

* 7801—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சு களுக்கு மத்திய அரசில் பணிபுரியும் நர்சுகளுக்கு வழங்கப்படுவது போல் இரவுப் பணி படி (Night Duty Allowance) வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

* 8194—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்த மருத்துவர்களுக்கு அரசு மாதா மாதம் கொடுத்துவரும் உதவித் தொகை சங்கராபுரம் தொகுதியிலுள்ள சித்த மருத்துவர்களுக்கு தரப்படவில்லை என்பதை அரசு அறி யுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது அளிக்கப்படும்?

1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அய்ய லூரில் அரசு மருத்துவமனை கட்டப்படுமா என்று இருக்கிறது. ஆகவே, இவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்போடு இந்த ஆண்டு மட்டும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங் கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையமும் துவக்கப்படுவதற்காகத்தான் அந் தப் பணம் கொடுக்கப்படுகிறது. கட்டிடம் கட்டுவதற்காக அந் தத் தொகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கையை கவனித்து இந்த ஆண்டோ அல்லது வருகிற ஆண்டுகளிலோ படிப்படியாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கிற முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவுப் பணி படி.

* 7801—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சு களுக்கு மத்திய அரசில் பணிபுரியும் நர்சுகளுக்கு வழங்கப்படுவது போல் இரவுப் பணி படி (Night Duty Allowance) வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

* 8194—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்த மருத்துவர்களுக்கு அரசு மாதா மாதம் கொடுத்துவரும் உதவித் தொகை சங்கராபுரம் தொகுதியிலுள்ள சித்த மருத்துவர்களுக்கு தரப்படவில்லை என்பதை அரசு அறி யுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது அளிக்கப்படும்?

[1990 மே 11

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட பதிவு பெற்ற, 60 வயதுக்கு மேற்பட்ட சித்த வைத்தியர்களிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை. எனினும், ஓய்வூதியம் பெற விண்ணப்பங்கள் வரப்பெற்றால், பரிசீலிக்கப்படும்.

9.50 மணி

திரு. எம். முத்தையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விண்ணப்பங்கள் வரவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நானே விண்ணப்பத்தை பதிவு செய்து, அரசுக்கு அனுப்பி இருக்கிறேன். நான் சித்த வைத்தியர் சங்கத்தின் தலைவனாக இருக்கிறேன். என்ன காரணத்தால் அது வரவில்லை என்பது தெரியவில்லை. அந்த விண்ணப்பம் கைக்கு வந்து சேர்ந்த பிறகாவது, அவர்களுக்கு உதவித் தொகை வழங்கு வதோடு, அவர்களுக்கு லைசன்ஸ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமானால் அவர்கள் 'பி' அல்லது 'சி' என்ற நிலையில் பதிவு பெற்றவர் களாக இருக்க வேண்டும். வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் 6,000-க்கு உட்பட்டு இருக்க வேண்டும். இந்த மூன்று தகுதிகள் இருக்குமானால் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களான திரு. சுப்பராயலு நாயுடு, திரு. சுந்தரராஜன் ஆகிய இருவரும் விண்ணப்பித் திருந்தார்கள். இவர்கள் 'பி' அல்லது 'சி' நிலை பெறாத காரணத்தால் இவர்கள் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. வேறு எந்த விண்ணப்பங்களும் வரவில்லை என்று ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்புகள் வந்திருக்கின்றன. இந்தத் தகுதிக்கு உட்பட்டு யாராவது விண்ணப்பித்திருந்தால், அதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் கொடுத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். முத்தையன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த சித்த வைத்தியம் மூலமாக சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகள் எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வியாதிகள் எல்லாம் எப்படிக் குணமாகும் என்று கேட்கிறீர்களா? அமைச்சரவர் களிடம் என்ன கேட்கப் போகிறீர்கள்?

1990 மே 11]

திரு. எம். முத்தையன்: குணப்படுத்தும் அருமையான சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் சித்த வைத்திய மருத்துவக் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் போட்டு, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் சித்த வைத்தியக் கல்லூரிகள் 2 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற ஆசிரியர்கள் சித்த வைத்தியத்திலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்றவர்கள்தான். பட்டம் பெற்று, அதற்குரிய தகுதியைப் பெற்றவர்களைத்தான் அதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்தல்.

*2339—திரு. கே. ரமணி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மின் வாரியம், நெய்வேலி அனல் மின் திட்டம் ஆகிய நிறுவனங்களில் காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்வது பற்றி தொழிலாளர் நல இலாக்கா சார்பில் ஒரு குழு ஆய்வு செய்தது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தெரியும்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனல் மின் நிலையங்கள் மற்றும் நெய்வேலி அனல் மின் நிலையம் ஆகியவற்றில் நிலவும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை பற்றி ஆராய்வதற்காக 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குழு ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அதன் பல்வேறு அனல் மின் நிலையங்கள் பற்றி குழுவால் அளிக்கப்பட்ட அறிக்கையினை ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு ஆராய்ந்து தனது பரிந்துரையினை அரசுக்கு அளித்தது. அப்பரிந்துரையின் அடிப்படையில் சுமார் 20 பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான செயற் குறிப்பினை அரசு பரிசீலித்து வருகிறது.

1990 மே 11]

திரு. எம். முத்தையன்: குணப்படுத்தும் அருமையான சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் சித்த வைத்திய மருத்துவக் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் போட்டு, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் சித்த வைத்தியக் கல்லூரிகள் 2 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற ஆசிரியர்கள் சித்த வைத்தியத்திலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்றவர்கள்தான். பட்டம் பெற்று, அதற்குரிய தகுதியைப் பெற்றவர்களைத்தான் அதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்தல்.

*2339—திரு. கே. ரமணி:

மாண்புமிகு செய்தி மற்றும்தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மின் வாரியம், நெய்வேலி அனல் மின் திட்டம் ஆகிய நிறுவனங்களில் காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்வது பற்றி தொழிலாளர் நல இலாக்கா சார்பில் ஒரு குழு ஆய்வு செய்தது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தெரியும்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனல் மின் நிலையங்கள் மற்றும் நெய்வேலி அனல் மின் நிலையம் ஆகியவற்றில் நிலவும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை பற்றி ஆராய்வதற்காக 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குழு ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அதன் பல்வேறு அனல் மின் நிலையங்கள் பற்றி குழுவால் அளிக்கப்பட்ட அறிக்கையினை ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு ஆராய்ந்து தனது பரிந்துரையினை அரசுக்கு அளித்தது. அப்பரிந்துரையின் அடிப்படையில் சுமார் 20 பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான செயற் குறிப்பினை அரசு பரிசீலித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, குழுவின் முடிவுகளை அரசு ஆய்வு செய்து வருவதாக, பரிசீலித்து வருவதாக அமைச்சரவர்கள் இங்கே தெரிவிக்கிறார் கள். இது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்? குறிப்பாக மின்சார வாரியத்தில் 15,000 முதல் 20,000 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட் டிருக்கிறார்கள். அங்கே 25,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. எனவே நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபட் டிருக்கும் அந்தத் தொழிலாளர்களை காலி இடங்களில் நிரப்ப அரசு மின்சார வாரியத்தை வலியுறுத்துமா, அதை நடைமுறைப் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. நிர்வாகத்திலே வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்திலே போடப் பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதிகமான விவரங்களைச் சபையில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம்.

*4410—திரு. கோ. வீரையன்:
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக செய்யப்பட்டு இருக்கும் நிர்வாக ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இச்சட்டம் தொழிலாளர் ஆணையரால் அமுல்படுத் தப்பட்டு வருகிறது. தொழிலாளர் துறையின் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் போன்ற அலுவலர்கள் இச்சட்ட அமுலாக் கத்தினைக் கண்காணித்து வருகிறார்கள் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

9–55 மணி

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள் இந்த கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்

[1990 மே 11

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குழுவின் முடிவுகளை அரசு ஆய்வு செய்து வருவதாக, பரிசீலித்து வருவதாக அமைச்சரவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். இது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்? குறிப்பாக மின்சார வாரியத்தில் 15,000 முதல் 20,000 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே 25,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. எனவே நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் அந்தத் தொழிலாளர்களை காலி இடங்களில் நிரப்ப அரசு மின்சார வாரியத்தை வலியுறுத்துமா, அதை நடைமுறைப் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. நிர்வாகத்திலே வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்திலே போடப்பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதிகமான விவரங்களைச் சபையில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம்.

*4410—திரு. கோ. வீரையன்:
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக செய்யப்பட்டு இருக்கும் நிர்வாக ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இச்சட்டம் தொழிலாளர் ஆணையரால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் துறையின் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் போன்ற அலுவலர்கள் இச்சட்ட அமுலாக்கத்தினைக் கண்காணித்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–55 மணி

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்

1990 மே 11]

பட்ச ஊதியச் சட்டத்தை அமலாக்குவதற்கான நிர்வாக ஏற்பாட்டை கமிஷனர் அவர்கள் கவனித்து வருகிறார்கள், துணை ஆய்வாளர்கள் எல்லாம் கவனித்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி கவனிப்பார்களேயானால் அந்தக் கட்டுமானப் பணியாளர்களிடமிருந்து குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படவில்லையென்று முறையீடுகள் அரசுக்கு ஏதாவது வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் எத்தனை வந்திருக்கின்றன? அதன் மீது எடுக்கப்பட்ட, தீர்க்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் அரசின் சார்பாக குறைந்தபட்ச ஊதியத் திட்டத்தின் கீழ் 70 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டபோது ஆரம்பத்திலேயே இந்தத் தொழிலாளர்களையும் சேர்த்திருக்கின்றார்கள். குறிப்பாக பல்வேறு ஆண்டுகளில் இவர்களுடைய ஊதியம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. 1957 ஆம் ஆண்டும், அதன் பிறகு 1 965 ஆம் ஆண்டும் அதன் பிறகு 1976 ஆம் ஆண்டும், அதன் பிறகு 1983 ஆம் ஆண்டும், தற்போது 1988 ஆம் ஆண்டிலே அவர்களுடைய ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டபோது குறைந்தபட்சமாக 23.72, அதிகபட்சமாக 43.72 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் எங்காவது குறிப்பிட்ட இந்த இந்தப் பகுதியில் இருக்கிறது என்று சொன்னால் ஆய்வாளர்களை விட்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளச் சொல்ல முடியும். அவர்கள் கேட்ட கணக்கு இப்பொழுது கையிலே இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்பாரேயானால் அதற்கு விரிவான பதிலை அளிக்க முடியும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக 1988 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டபோது ரூ. 23.72, உயர்ந்தபட்சம் ரூ. 43.72 என்று நிர்ணயிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே பணிபுரியக் கூடிய பெண் ஊழியர்களுக்கு மிகக் குறைவான ஊதியம் கொடுக்கப்படுகிறதே. இதிலே ஆண், பெண் என்று வித்தியாசப்படுத்தி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ஒரே மாதிரி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அப்படி வித்தியாசப்படுத்திக் கொடுக்கிறார்களா என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறையே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே இதுபோல் நடைபெறுகிறது என்று ஆதாரப்பூர்வமாக குற்றம் சாட்டுவாரே-

யானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் தனிப்பட்ட முறையிலே நிர்ணயிக்கப்படவில்லை. அனைவருக்கும் ஒருமனதாகத்தான் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் நிரந்தரம்.

*5590. திரு. இளம் வழுதி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் அரசுத் துறை தொழிலாளர்களை உடனே நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணி புரியும் தொழிலாளரை நிரந்தரம் செய்ய 1981-ம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளரை நிரந்தரப்படுத்து தல்) சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம் மாநில அரசின் அனைத்துத்துறை தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துமாறு தொழிலாளர் ஆணையர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி யுள்ளார். தொழிலாளர்களிடமிருந்து அவர்களாகவே விண்ணப் பங்களைப் பெற்று, சரிபார்த்து நிரந்தரமாக நிர்வாகத்தினருக்கு ஆணையிடவும், சட்ட விதிகளின்கீழ் நிர்வாகத்தினரிடமிருந்து விவரங்கள் பெற்று சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளை மீறு வோருக்குத் தண்டனை வழங்கவும் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளனர்.

தொழிற்சாலை ஆய்வகத்துறை, இச்சட்டத்தை தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளில் அமுல் படுத்தப்படுகிறது. தொழிலாளர்கள், சட்டப்படி நிரந்தமாக் கப்பட்டுள்ளனராவென தொழிற்சாலை ஆய்வாளர்கள்

யானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் தனிப்பட்ட முறையிலே நிர்ணயிக்கப்படவில்லை. அனைவருக்கும் ஒருமனதாகத்தான் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் நிரந்தரம்.

*5590. திரு. இளம் வழுதி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் அரசுத் துறை தொழிலாளர்களை உடனே நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணி புரியும் தொழிலாளரை நிரந்தரம் செய்ய 1981-ம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளரை நிரந்தரப்படுத்துதல்) சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம் மாநில அரசின் அனைத்துத்துறை தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துமாறு தொழிலாளர் ஆணையர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி யுள்ளார். தொழிலாளர்களிடமிருந்து அவர்களாகவே விண்ணப் பங்களைப் பெற்று, சரிபார்த்து நிரந்தரமாக நிர்வாகத்தினருக்கு ஆணையிடவும், சட்ட விதிகளின்கீழ் நிர்வாகத்தினரிடமிருந்து விவரங்கள் பெற்று சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளை மீறு வோருக்குத் தண்டனை வழங்கவும் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளனர்.

தொழிற்சாலை ஆய்வகத்துறை, இச்சட்டத்தை தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளில் அமுல் படுத்தப்படுகிறது. தொழிலாளர்கள், சட்டப்படி நிரந்தமாக் கப்பட்டுள்ளனராவென தொழிற்சாலை ஆய்வாளர்கள்

1990 மே 11]

ஆய்வு செய்யும்போது சரிபார்க்கின்றனர். சட்டப்படி நிரந்தரம் செய்யாத நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்கு நடவடிக்கை தொடரப்படுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய 1981ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் சட்டம் வகை செய்கிறது என்று இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இச்சட்டத்தின்படி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்களா என்று தொழிற்சாலை ஆய்வாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை நிலை என்னவென்றால் நாம் தடுக்கிலே புகுந்தால் கோலத்திலே புகுந்துவிடுகின்ற சாமர்த்தியமான அதிகாரிகள், தொடர்ந்து வேலை செய்தால்தானே வேலையை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று சட்டமிருக்கிறது. எனவே அவ்வப்போது 'பிரேக்' கொடுத்துவிடுவோம் என்று தொழிலாளர்களுக்கு 'பிரேக்' கொடுத்துவிடுகிறார்கள். எனவே இந்த நிலையை மாற்றுகின்ற வகையிலே, 'பிரேக்' கொடுத்தாலும், 'பிரேக்' கொடுக்கப்படாவிட்டாலும் 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால், 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்திருந்தால் அவர்களை நிரந்தரம செய்ய அரசு ஆணை பிறக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இப்பொழுது நடைபெற்ற கூட்டங்களிலெல்லாம் ஒரு பெரிய ஆய்வு செய்து இன்றைக்கு அரசின் சார்பாக ஒரு சட்டமே இயற்ற இருக்கிறார்கள். அப்படி ஒரு சட்டம் இயற்றப்படுமேயானால் நிச்சயமாக அத்தனை தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்த முடியுமே தவிர மற்ற இடங்களில் 480 நாட்கள் தொடர்ந்தால் போல் வேலை செய்தவர்களை..... இந்த அரசின் சார்பாக இன்றைக்குக் கூட உதாரணமாகக் கூட சொல்லலாம்—பால் பண்ணையிலே ஈரோட்டில் இருக்கின்றவர்களை, ஒரு 100 பேர்களை இன்றைக்கு நிரந்தரப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படி ஒரு சில இடங்களில்தான் செய்ய முடியுமே தவிர அனைத்து இடங்களிலும் செய்யப்படவேண்டுமானால் இதற்கென தனியாக ஒரு சட்டத்தைஇயற்ற வேண்டும்.

10.00 மணி

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 நாட்கள் வேலை செய்து இருந்தால், மத்திய அரசாங்கம் நிரந்தரம் செய்கிற சட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறது. எனவே இதைக் கருத்திலே கொண்டு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இளம்வழுதி: கேள்வியை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 நாட்கள் மட்டும் வேலை செய்தால் என்று இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்துக் கொள்ளக் கூடாது; ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், அதில் வேலை செய்கின்ற ஒப்பந்தத் தொழிலாளியையே நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இல்லை. அதனால் தான் இதை நல்ல முறையிலே நிலைப்படுத்த முடியவில்லை. அதற்காக மத்திய அரசு இப்போது புதிய சட்டம் ஒன்றை இயற்ற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயமுத்தூர் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி.

* 2599—திரு. மு. இராமநாதன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோயமுத்தூர் மெட்ரோபாலிடன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்ற ஓர் அமைப்பை உருவாக்கிட அரசு ஆய்வு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் மின்சார வேகத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகரத்தில் மெட்ரோபாலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்ற அமைப்பு உருவானால் தான் நகரத்தினுடைய வளர்ச்சி, நகரத்தினுடைய பல்வேறு திட்டங்கள் செழிப்படையும் என்பதை அரசு அறிந்து இனி யாவது அப்படி ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு அரசு, முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இளம்வழுதி : கேள்வியை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 நாட்கள் மட்டும் வேலை செய்தால் என்று இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்துக் கொள்ளக் கூடாது; ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், அதில் வேலை செய்கின்ற ஒப்பந்தத் தொழிலாளியையே நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இல்லை. அதனால் தான் இதை நல்ல முறையிலே நிலைப்படுத்த முடியவில்லை. அதற்காக மத்திய அரசு இப்போது புதிய சட்டம் ஒன்றை இயற்ற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயமுத்தூர் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி.

* 2599—திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயமுத்தூர் மெட்ரோபாலிடன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்ற ஓர் அமைப்பை உருவாக்கிட அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் மின்சார வேகத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகரத்தில் மெட்ரோபாலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்ற அமைப்பு உருவானால் தான் நகரத்தினுடைய வளர்ச்சி, நகரத்தினுடைய பல்வேறு திட்டங்கள் செழிப்படையும் என்பதை அரசு அறிந்து இனி யாவது அப்படி ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு அரசு, முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் விரிவடைவதற்கு, கோவை உள்ளூர் திட்டப் பகுதி அரசாணை எண் 1502 நாள் 21—6—1974 மூலம் இந்தத் திட்டம் கோவை மற்றும் புறநகரப் பகுதிகள் சீராகவும், ஒருங்கிணைந்து வளர்ச்சி அடையவும் 1974ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது. அதன் அடிப்படையில் மாநகராட்சியின் தனி அலுவலர் தலைவராகப் பொறுப்பேற்றும், மாநகராட்சி அதிகாரி செயலர் மற்றும் உறுப்பினராகப் பொறுப்பேற்றும், அந்தப் பகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருந்தும் உருவாவதற்காக அரசினுடைய பரிசீலனையில் தற்போது இருக்கின்றது. இந்தக் குழுமத்தின் மூலம் கோவை மற்றும் புறநகரப் பகுதிகள் வளர்ச்சி அடைவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையிலும், நிர்வாக வசதியை முன்னிட்டும் கோவை நகராட்சி 80 கோட்டங்களாக தற்போது பிரிக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே நகர அமைப்பினுடைய விதிகளின்படி வீடுகள், கட்டிடங்கள் உட்பட கட்டவும், இணைப்புச்சாலைகள் புறவழிச் சாலைகளை ஒழுங்குபடுத்தவும், அடிப்படை சுகாதார வசதிகளைச் செய்யவும் மெட்ரோபாலிட்டன் அத்தாரிட்டி என்பது அவசர அவசியமாக இருக்கின்ற காரணத்தினாலே அமைச்சர் அவர்கள் விரைந்து அந்த அமைப்பின் மூலம் வளர்ந்து வரக்கூடிய மாநகரத்தினுடைய சகலபணிகளையும் விரைவாக அமல்படுத்தது வதற்கு செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்றும், அதை விரைந்து செயல்படுத்துவதற்கு உத்ரவு பிறப்பிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அத்தனைப் பணிகளையும், இந்தக் கோவை உள்ளூர் திட்டப் பகுதி தற்போது செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

(அ) கண்ணகி கோயில் விழாவின்போது கேரள அரசின் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்பும் எண்ணூரில் உள்ள காசி விசுவநாதர் கோயில் புயலால் சேதம் அடைந்துள்ளது குறித்தும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகியினுடைய கோயிலில் விழா நடத்த வேண்டும் என்று, அந்த விழாவுக்காக ஏற்பாடு செய்து இருக்கிற விழாக் குழு சார்பில் நீண்ட நாட்களுக்கு முன்னால் நம்முடைய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, நம்முடைய அரசின் சார்பில் கேரள அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்த விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால் விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால் விழாக் குழுவினர் ஏற்பாடு செய்தபடி கண்ணகிக்கு விழா எடுக்கின்ற நிலையில் 3 நாட்கள் அந்த விழாவை ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். முதல் நாள் கண்ணகிக்கு விழா என்றும், இரண்டாவது நாள் சித்திரை முழு நிலவு விழா என்றும், மூன்றாவது நாள் மாரி விழா என்றும்—இப்படி மூன்று விழாக்களை 3 நாட்களுக்கு அமைத்து அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து ஆயிரக் கணக்கான மக்கள் கூடுகின்ற வாய்ப்பை உருவாக்கி இருக்கின்றார்கள். ஆனால் ஏற்பட்டு இருக்கிற நிலை என்னவென்றால், கேரள அரசின் சார்பில் பல கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக அங்கே, தமிழ் நாட்டிலே இருந்து தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பேனர்கள் கூடக் கட்டக் கூடாத அளவுக்கு நிலைமைகளை அங்கே இருக்கிற காவல் துறையினர் உண்டாக்கி இருக்கிறார்கள்.

10-05 மணி

நான் இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். இந்தக் கண்ணகி கோயிலைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சுற்றுலா மையமாக இருக்கிற தேக்கடிக்கு மிகமிக அருகிலே இருக்கிற காரணத்தாலே நாம் இந்தக் கண்ணகி கோயிலை எந்த அளவுக்கு நமமுடைய அரசு சார்பில் விரிவு படுத்தி, பெருமைப்படுத்துகிற நிலையை உண்டாக்குகிறோமோ அந்த அளவிற்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற ஒரு வாய்ப்பு நமக்கு உருவாகும். தேக்கடிக்கு அருகிலே இருக்கிற காரணத்தாலே ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான அயல் நாட்டினர் தேக்கடிக்கு வந்து போகிறார்கள். இந்தத் தேக்கடிக்கு வருகிறவர்கள் இப்படிப்பட்ட ஒரு கோயில் கண்ணகிக்கு இருக்கிறது என்பதும், கண்ணகியினுடைய பெருமைகளை நிலை நாட்டுகின்ற வகையில் அவர்களுக்கு எடுத்துக் கூறப்படுமானால் சுற்றுலா வருபவர்கள் அதைப் பார்க்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்குவதற்கு நமக்கு வசதி இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 11] [திரு. எஸ். ஆர். இராதா]

இன்னொன்று, இந்தக் கோயிலுக்குக் கேரளாவிலேயிருந்து, தேக்கடியிலேயிருந்து போக வேண்டுமென்று நிலை இருந்தாலும் கூட, நம்முடைய அந்தப் பகுதியிலே இருக்கிற இந்த விழா நடத்துகிற கூடல் ராமசாமி அவர்களும், அந்தப் பகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் கோபால் அவர்களும் தமிழ்நாட்டினுடைய மலைப் பகுதியிலே கூட ஒரு வழியை உருவாக்கிக் கொள்ளலாம் என்று ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலே கூட நாம் நடவடிக்கை எடுத்து அந்தக் கோயிலினுடைய சிறப்பை நாம் பெருமைப்படுத்துவதன் மூலமாக இன்னும் பல்வேறு வகையில் நாம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

அதே நேரத்தில் கண்ணகிக்கு எடுக்கின்ற அந்த விழாவை மிகப் பெரிய விழாவாக எடுக்கின்ற அந்த வாய்ப்பு இருக்கிறது. எனவே, அரசின் சார்பில் மூன்று நாட்கள் அனுமதிக்கப்பட வேண்டிய அந்த விழாவிற்கு ஒரேயொரு நாள் மட்டும் கேரள அரசு அனுமதித்து, அதற்குப் பின்னால் இரண்டு நாட்கள் அனுமதி கிடையாது என்று சொல்லி, பல்வேறு வகையிலே நெருக்கடிகளை உண்டாக்கி, இடர்ப்பாடுகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அதை நம்முடைய அரசு கவனத்திலே கொண்டு அதைத் தீர்ப்பதற்கான, போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளை நாம் மேற்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை என்ற வகையில் நான் மாண்புமிகு முதல்வரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக, இப்படிப்பட்ட பழம் பெருமை வாய்ந்த கோயில்கள் என்று சொல்கிற நேரத்தில் அதைக் காக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற முறையில் நான் இங்கே வற்புறுத்திக் கூறுவேன். நேற்று முன்தினம்கூட எண்ணூர் ஹைரோடிலே இருக்கிற காசி விஸ்வநாதர் ஆலயம் கடலரிப்பாலே பாதிக்கப்பட்டது. இந்தப் பாதிப்பை முன்னாலேயே நாம் கவனித்திருந்தால் அந்தக் கோயிலைக் காப்பாற்றி இருக்கலாம். ஆனால் என்ன காரணத்தினாலோ அந்தக் கோயில் பாதி கடலுக்குப் போய்விட்டது. என்றாலும் இப்படிப்பட்ட கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் இவை பழங்காலத்துக் கோயில்கள். புதிய புதிய கோயில்கள் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இந்தப் பழைய கோயில்களையாவது காப்பாற்றி இதிலேயிருந்து பழங்கால நம்முடைய பெருமைகளை எடுத்துச் சொல்கிற ஒரு வாய்ப்பையாவது உருவாக்கிக் கொள்ளலாம்.

நான் இன்னொன்றையும் இங்கே எடுத்துச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். நேற்றைய தினம் மத்திய அரசு மனமுவந்து நம்முடைய புயல் பாதிப்புக்காக 35 கோடி ரூபாய்க்கு நமக்கு அனுமதி கொடுத்து இருப்பதாக ஒரு செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில், பல்வேறு இடங்களிலே பாதிப்புகள்

ஏற்பட்டிருக்கின்றன. செய்யூர், மாக்காளம் போன்ற இடங்களிலே உப்பளங்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட பாதிப்புகளில் இந்த எண்ணூர் கோயில் போன்ற —காசி விஸ்வநாதர் கோயில் போன்ற இந்த நிலைகளையும் இந்தப் பாதிப்புகளோடு கவனித்து அரசு இப்படிப்பட்ட பழங் காலப் பெருமைகளைச் சொல்கிற இவைகளைக் காப்பாற்ற வேண்டும்.

கேரள அரசோடு கொஞ்சம் கனிவோடும், அதே நேரத்தில் கொஞ்சம் கண்டிப்பாகவும் சொல்லி, இந்தக் கண்ணகி விழாவை மூன்று நாட்கள் நடத்துவதற்கு அனுமதிப்பதோடு, தொடர்ந்து நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் கோயிலுக்குச் சென்று வந்து, அங்கே வழிபடுவதற்கும், கண்ணகியினுடைய பெருமையைக் காப்பாற்றுவதற்கும் வழி செய்ய வேண்டுமென்று, ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினமே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இதுகுறித்து ஒரு குறிப்பினை இங்கே எழுப்புவதற்கும், அதற்கான விளக்கம் நான் தர வேண்டுமென்றும் கூறியதற்கிணங்க சில தகவல்களைத் கேரள அரசின் அதிகாரிகளிடமிருந்து நான் பெற்றுள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார், நம்முடைய பழம் பெரும் சின்னங்கள், வரலாறுகள், இவைகளெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஒரு நிலையை. அதே அக்கறையோடு தான் இந்த அரசு கண்ணகிக்குச் சிறப்புச் செய்கின்ற வகையிலும், **கண்ண**கியை மையமாக வைத்து எழுந்த சிலப்பதிகாரத்திற்குச் சிறப்புச் செய்கின்ற வகையிலும் பூம்புகாரையே உருவாக்கியிருக்கிறது.

10-10 மணி

அதைப்போலவே நம்முடைய பழம் பெருமை, நம்முடைய பண்பாடு இவைகளைக் காக்கின்ற வகையில் வள்ளுவர் கோட்டம் நிர்மாணிக்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுப் பெருமை, விடுதலை வரலாறு, அதிலே முதல் தளநாயகனாக இருந்த பாஞ்சாலங்குறிச்சி வீரனுக்கு, கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. அண்மையில் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல வள்ளுவருக்குக் குமரி முனையில் சிலையெடுக்கவும், ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, நம்முடைய பழம் பெருமையைக் காப்பது என்பதில் இந்த அரசைப் பொறுத்தவரையில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை. அவர்கள், காசி விசுவநாதர் கோயில்,

TRUTH ALONE TRIUMPHS

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு இந்த அரசால் எடுக்கபபடாத காரணத்தால், இந்த மழையில் இரண்டாகப் பிளந்து விட்டது, ஒரு பழைய சின்னம் இப்படி பாதிக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். காசி விசுவநாதர் கோயில் 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது அல்ல. அது நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு ஆலயம்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைச் சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அரசு என்று தான் குறிப்பிட்டேனே தவிர, இந்த அரசு, அந்த அரசு என்று குறிப்பிடவில்லை. பொதுவாக அரசு என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த அரசு என்று குறிப்பிடாமலே அந்த அரசைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி. எனவே, கண்ணகி கோயிலைப் பொறுத்த வரையில் எனக்கு வந்துள்ள தகவல்—கூடலூர் இராமசாமி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியெல்லாம் சொன் னார்கள். அங்கே ஒட்டப்பட்ட சுவரொட்டி அனுமதிக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே, இந்த அவையில் இதுகுறித்துப் பிரச்சினை எழுந்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரும், நானும் ஏற்ற விளக்கங்களை எல்லாம் இங்கே தந்திருக்கிறோம். இதற்கிடையில் கேரளத்திற்கும் தமிழகத் திற்கும் இடையில் கசப்புணர்வு ஏற்படாத வகையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். நானும் கேரள முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதாக இருக்கிறேன் என்றெல்லாம் அன் றைக்குக் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால், அங்கே இந்தத் திருவிழாவை ஒட்டி, அந்தக் கோயிலைப்பற்றிக் குறிப்பிடும்போது, அங்கே ஒட்டப்பட்ட சுவரொட்டியில் கூடலூரில் உள்ள கண்ணகி ஆலயம் என்று எழுதி ஒட்டப்பட்ட காரணத்தால், அதைக் கேரள அரசின் சார்பாக மறுத்து இருப்பதாகத் தான் எனக்கு தகவல் வந்தது. அந்தக் கூற்று எவ்வளவு சரியானது என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும், இதுபோன்ற மிக உணர்ச்சி கரமான பிரச்சினைகளில் நாம் கசப்புணர்வை இன்னொரு மாநிலத்திற்கு இடையே உருவாக்கக்கூடாது என்ற அடிப்படை யில் தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல் வேறு அல்ல.

7–5–1990 அன்று இந்த அவையிலே கண்ணகி கோயில் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டு, கேரள அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களோடு பேசி அந்த அடிப்படையில் கண்ணகி கோட்டத்திற்கு, விழாவிற்குச் செல்பவர்களுக்குத் தடை இல்லாமல் பார்த்துக் கொள்வதாகக் கேரள அரசினுடைய செயலாளர் அவர்கள் நம்முடைய செயலாளருக்கு உறுதி அளித் தார்கள். இந்த 3 நாள் விழாவிற்கு துணை செய்ய கேரள

அரசைக் கேட்டிருக்க வேண்டும் என்ற வாதம் இங்கே வைக்கப் பட்டிருக்கிறது. அதைக் குறித்து, நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் குறிப்பைத் தந்தவுடன், நேற்று மீண்டும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு இதுபற்றிப் பேசப்பட்டது. கேரள அரசு இந்தப் பிரச்சினை குறித்து இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உடனடியாக அறிக்கை கேட்டு மேற்கொண்டு ஆவன செய்வதாகத் தெரிவித்தது. அதற்கிடையில், நம்முடைய அரசின் பொதுத் துறைச் செயலாளர் தொலைபேசி மூலமாக நேரடியாக இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு பேசினார்.

கண்ணகி கோயில் விழா என்பது ஆண்டிற்கு ஒரு நாள் மட்டுமே, அதாவது சித்திரை முழு நிலவு அன்று கொண்டாடப் படுகிறது என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்து இருக்கிறார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும் இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசி இருக்கிறார். அப்போது இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தமிழ் மொழி தெரிந்த அர்ச்சகரை அமர்த்தி, தேவையான வழிபாடுகளைச் செய்யவும், குடிநீர் தேவைப்பட்ட அளவிற்கு வருகிற பக்தர்களுக்கு விநியோகம் செய்யவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், எந்தவிதமான புகாருக்கும் இடம் இல்லாமல் அனைத்து வசதிகளும் விழாவிற்கு வருகிற பக்தர்களுக்குச் செய்து கொடுப்பதாகவும் இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லி இருக்கிறார்.

பொதுவாகத் தமிழகத்திலிருந்து செல்கிற மக்கள் இந்த விழாவை 3 நாட்கள் தொடர்ந்து கொண்டாட வேண்டுமென்று விரும்பினாலும், கேரள மாநில அரசு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இந்த விழா ஒரு நாள் மட்டும் எடுக்கப்பட இயலும் என்றும், ஏனென்றால் பல ஆண்டுகளாக இந்த முறைதான் அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது என்றும், பக்கத்தில் சிறுத்தைப் புலிகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்பதால் இரவில் தங்குவது என்பது அவ்வளவு நல்லதல்ல என்று கருதப்படுவதாலும் 3 நாட்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது தங்களுக்கு மிகுந்த சிரமம் என்பதைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

10-15 மணி

அதிலே அங்கே மூன்று நாட்கள் விழா நடக்குமேயானால், அங்கே பூஜை செய்கின்ற காரியங்களைச் செய்யக் கூடியவர்களுக்கு அதிக வருமானம் கூட கிடைக்கக்கூடும் என்ற அடிப்படையில்கூட இதுபோன்ற வேண்டுகோள்களை அந்த விழாவினையொட்டி திரும்பத் திரும்ப எழுப்பி வருவதாகவும் ஒரு தகவல் கூறப் பட்டு இருக்கிறது. எனினும் எந்த வகையிலே பார்த்தாலும், உணர்ச்சியோடு பின்னிக் கிடக்கின்ற ஒரு சம்பவம் இது. இந்தப்

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

பிரச்சினையில் நாம் நம்முடைய அணுகுமுறையை—எதிர்க் கட்சித் தலைவரே குறிப்பிட்டதைப் போல கனிவோடும் துணி வோடும் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, கனிவோடு பேசி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, கண்ணகி ஆலயம் தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே இருக்குமாறு செய்ய எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அந்தப் பிரச்சினை தீருமானால், இதுபோன்ற திருவிழாப் பிரச்சினைகள் வருவதற்கே இடம் இல்லை என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

(ஆ) **சேரன்மாதேவித் தொகுதியில் பொட்டல் கிராமத்தில் மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப் பெறாதது குறித்தும் சில இடங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து.**

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதியில் கள்ளிடைக்குறிச்சிக்கு அருகே உள்ள பொட்டல் கிராமத்தில் சுமார் 400 மக்களுக்கு ரேஷன் கார்டுகள் இதுவரையில் வழங்கப்படவில்லை. அதற் கடுத்தாற்போல், பாப்பாகுடி யூனியனில் பனையங்குறிச்சி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ரேஷன் கடை கிடையாது. அங்கே யிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே இடைகால் என்ற ஊருக் குப் போய்த்தான் மக்கள் இன்றைக்கு ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அங்கே அவர்கள் போய்க் கேட்பதற்குள் பொருட்கள் தீர்ந்துவிடுகின்றன. அதேபோல் பாப்பாகுடி யூனியனில் புதுப்பட்டி அருகே உள்ள காசிநாதபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இவர்கள் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புதுப்பட்டி என்ற கிராமத் திற்குப் போய் பொருட்கள் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

கடயம் யூனியனில் தெற்கு மடத்தூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த புங்கம்பட்டி என்ற கிராமத்தில் ரேஷன் கடை இல்லை. 5 கிலோ மீட்டர் போக வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுப் பார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி கள்ளிடைக்குறிச்சி கிராமம், பொட்டல் உட்கடை கிராமத்தில் இதுவரையில், 3-5-1990 வரையில், 134 பேர்கள் தங்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள் வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார் கள். அது உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு வெகு விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரச்சினையில் நாம் நம்முடைய அணுகுமுறையை—எதிர்க் கட்சித் தலைவரே குறிப்பிட்டதைப் போல கனிவோடும் துணி வோடும் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, கனிவோடு பேசி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, கண்ணகி ஆலயம் தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே இருக்குமாறு செய்ய எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அந்தப் பிரச்சினை தீருமானால், இதுபோன்ற திருவிழாப் பிரச்சினைகள் வருவதற்கே இடம் இல்லை என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

(ஆ) சேரன்மாதேவித் தொகுதியில் பொட்டல் கிராமத்தில் மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப் பெறாதது குறித்தும் சில இடங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதியில் கள்ளிடைக்குறிச்சிக்கு அருகே உள்ள பொட்டல் கிராமத்தில் சுமார் 400 மக்களுக்கு ரேஷன் கார்டுகள் இதுவரையில் வழங்கப்படவில்லை. அதற் கடுத்தாற்போல, பாப்பாகுடி யூனியனில் பனையங்குறிச்சி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ரேஷன் கடைகிடையாது. அங்கே யிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே இடைகால் என்ற ஊருக் குப் போய்த்தான் மக்கள் இன்றைக்கு ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அங்கே அவர்கள் போய்க் கேட்பதற்குள் பொருட்கள் தீர்ந்துவிடுகின்றன. அதேபோல் பாப்பாகுடி யூனியனில் புதுப்பட்டி அருகே உள்ள காசிநாதபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இவர்கள் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புதுப்பட்டி என்ற கிராமத் திற்குப் போய் பொருட்கள் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

கடயம் யூனியனில் தெற்கு மடத்தூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த புங்கம்பட்டி என்ற கிராமத்தில் ரேஷன் கடை இல்லை. 5 கிலோ மீட்டர் போக வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுப் பார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி கள்ளிடைக்குறிச்சி கிராமம், பொட்டல் உட்கடை கிராமத்தில் இதுவரையில், 3–5–1990 வரையில், 134 பேர்கள் தங்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள் வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார் கள். அது உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு வெகு விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 மே 11

அடுத்து பனையங்குறிச்சி, காசிநாதபுரம், புங்கம்பட்டி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகள் இல்லை. அருகிலே உள்ள கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், பல கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அங்கே பகுதி நேரக் கடைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்து, அதற்குப் பின்னர் தேவைப்பட்டால், அங்கே பகுதி நேரக் கடைகளைத் திறக்கலாம் என்று அரசினுடைய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. சாத்தியக் கூறுகள் இருக்குமானால், குறிப்பிட்ட இடங்களில் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புயலால் ஏற்பட்டுள்ள சேதங்களையொட்டிய நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது குறித்தும் 'ரா'' நிறுவனம் குறித்து முதலமைச்சர் பேசியது பற்றி வெளியில் ஒரு கட்சித் தலைவர் தெரிவித்துள்ள கருத்து குறித்தும்.

திரு. எம். அப்துல் லத்திப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தகவலுக்காக நான் எழுப்புகிறேன். நேற்றையதினம் தொலைக் காட்சியில் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் உருவான புயல், அதனால் உருவான சேதங்கள், இவைகளுக்கு மத்திய அரசின் சார்பாக ஆந்திர மாநிலத்திற்கு 89 கோடியும், தமிழ் மாநிலத்திற்கு 39 கோடியும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அளித்திருப்பதாகவும், பிரதமர் அவர்கள் அதற்கான அறிவிப்பைச் செய்திருப்பதாகவும், தொலைக்காட்சியில் செய்தியை நாம் அறிந்தோம். இன்று பத்திரிகையிலேயும் அந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. புயலோடு போட்டி போட்டுக் கொண்டு புயல் வேகத்தை விட மிக வேகமாக நிவாரணப் பணிகளைக் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் செயல்பட்டதற்காகவும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், வருமுன் காக்க என்பதைப் போல பாரத துணைப் பிரதமர் மாண்புமிகு தேவிலால் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதைப் போல, மிகச் சிறந்த முறையில் தடுப்பு நடவடிக்கைகளை, காக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருப்பதற்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைப்பாக செயல்பட்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நிவாரணப் பணிகளுக்கான தொகைகளை அவர்கள் எந்த வகையிலே நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதையும் அரசு அதிகாரப்பூர்வமான—பத்திரிகை செய்தியைத்தான் நாம் படித்திருக்கிறோம் அதிகாரப்பூர்வமான—செய்திகள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 மே 11

அடுத்து பனையங்குறிச்சி, காசிநாதபுரம், புங்கம்பட்டி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகள் இல்லை. அருகிலே உள்ள கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், பல கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அங்கே பகுதி நேரக் கடைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்து, அதற்குப் பின்னர் தேவைப்பட்டால், அங்கே பகுதி நேரக் கடைகளைத் திறக்கலாம் என்று அரசினுடைய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. சாத்தியக் கூறுகள் இருக்குமானால், குறிப்பிட்ட இடங்களில் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புயலால் ஏற்பட்டுள்ள சேதங்களையொட்டிய நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது குறித்தும் 'ரா'' நிறுவனம் குறித்து முதலமைச்சர் பேசியது பற்றி வெளியில் ஒரு கட்சித் தலைவர் தெரிவித்துள்ள கருத்து குறித்தும்.

திரு. எம். அப்துல் லத்திப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தகவலுக்காக நான் எழுப்புகிறேன். நேற்றையதினம் தொலைக் காட்சியில் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் உருவான புயல், அதனால் உருவான சேதங்கள், இவைகளுக்கு மத்திய அரசின் சார்பாக ஆந்திர மாநிலத்திற்கு 89 கோடியும், தமிழ் மாநிலத்திற்கு 39 கோடியும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அளித்திருப்பதாகவும், பிரதமர் அவர்கள் அதற்கான அறிவிப்பைச் செய்திருப்பதாகவும், தொலைக்காட்சியில் செய்தியை நாம் அறிந்தோம். இன்று பத்திரிகையிலேயும் அந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. புயலோடு போட்டி போட்டுக் கொண்டு புயல் வேகத்தை விட மிக வேகமாக நிவாரணப் பணிகளைக் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் செயல்பட்டதற்காகவும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், வருமுன் காக்க என்பதைப் போல பாரத துணைப் பிரதமர் மாண்புமிகு தேவிலால் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதைப் போல, மிகச் சிறந்த முறையில் தடுப்பு நடவடிக்கைகளை, காக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருப்பதற்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைப்பாக செயல்பட்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நிவாரணப் பணிகளுக்கான தொகைகளை அவர்கள் எந்த வகையிலே நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதையும் அரசு அதிகாரப்பூர்வமான—பத்திரிகை செய்தியைத்தான் நாம் படித்திருக்கிறோம் அதிகாரப்பூர்வமான—செய்திகள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 மே 11] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இன்னொரு தகவலையும், அது நாட்டுக்குத் தேவை என்பதற்காக நாங்கள் அறிய விரும்புகிறோம். இன்றைய தினம் பத்திரிகையிலே 'ரா' நிறுவனத்தைப் பற்றி ஒரு முக்கியமான தமிழ் நாட்டுத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் அந்த 'ரா' நிறுவனத்தினுடைய நடைமுறைகளை, நடவடிக்கைகளைக் குறித்து சட்டமன்றத்திலே தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சில உண்மைகளை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும், ஆதாரம் இருந்தால் நிரூபிக்க வேண்டும் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். 'ரா' நிறுவனம் என்பது மத்திய அரசினுடைய ரகசிய நிறுவனம்.

10-20 மணி

இது தொடர்பாகச் செய்திகள், தகவல்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது நன்மையை உத்தேசித்து ரகசிய காப்பு என்ற அடிப்படையிலேதான் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இந்த நிலையிலே பத்திரிகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏதோ ஒரு தவறான தகவலைத் கொடுத்து இருப்பதைப்போல் ஒரு எண்ணத்தை உருவாக்கிடும் வகையிலே ஒரு தலைவர் தகவலை, செய்தியை வெளியிட்டு, அதைக்குறித்து தகவலைக் கேட்டிருக்கிறாரே, அது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தொலைக்காட்சியில் தமிழகத்திற்கு நிவாரண நிதியாக ரூ. 39 கோடி என்று அறிவிக்கப் பட்டதும் நான் கூட கொஞ்சம் ஆதங்கப்பட்டேன். புயல் கொஞ்சமாவது இங்கு வீசக் கூடாதா என்று ஆதங்கப்பட்டேன். உடனடியாக உரியவர்களோடு தொடர்பு கொண்டு விசாரித்து, பிறகு அதை இங்கே விளக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்கிடையே நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இதைப்பற்றி இங்கே பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

1—4—1990 முதல் 9ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இயற்கை, இன்னல் நிவாரணப் பணிகளின் செலவை மத்திய மாநில அரசுகள் ஏற்கும் முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அதாவது 31—3—1990 வரை, தமிழக அரசும் மத்திய அரசும் 50 : 50 அதாவது பாதிப் பாதி விகிதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அதற்கு ரூ. 15.50 கோடி நிதி ஒதுக்க வேண்டும். அதாவது ரூ. 15½ கோடி ஒதுக்க வேண்டுமென்று

இதற்கு முன்பு இருந்தது, 50 : 50 என்ற வகையில். அதைவிட அதிகத்தொகை செலவழிக்க வேண்டியிருந்தால் தேவைகளை விவரித்து நிதி ஒதுக்கக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஒரு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். ஏற்கெனவே இருந்த முறை இது. மத்திய அரசு ஒரு அலுவலர் குழுவை அனுப்பிப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செய்து, அவர்கள் அறிக்கையின் மீது அதிகபட்சம் ஒவ்வொரு இனத்திற்கும் எவ்வளவு செலவிடலாம் என்று நிர்ணயித்து ஒரு உத்தரவு வழங்கும். இனி இந்த உச்சவரம்பிற்குட்பட்டுச் செய்யப்படும் செலவும் மத்திய மாநில அரசுகளால் குறிப்பிடப்பட்ட வெவ்வேறு விகிதங்களில் பகிர்ந்தளிக்கப்படும் உச்சவரம்பிற்கு மேற்பட்ட செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்க வேண்டும். இந்த நடைமுறையினால் மாநில அரசு செய்ய வேண்டிய செலவுக்கு மத்திய அரசின் முன்னனுமதி கோரும் பிரச்சினை ஒரு பக்கம், நிர்வாகச் சிக்கலும் காலதாமதமும் மறு பக்கம் என்ற வகையில் மாநிலங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த ஆண்டு முதல் அமலுக்கு வருகின்ற புதிய கொள்கையின்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு துயர்துடைப்பு நிதி ஏற்படுத்தப்படும். இதன் அளவை நிதிக் குழுவே நிர்ணயித்திருக்கிறது. அதன்படி தமிழக அரசின் நிதி அளவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 39 கோடியாகும். இந்நிதிக்கு மத்திய மாநில அரசுகள் 75 : 25 என்ற விகிதத்தில் பணம் செலுத்தும். வெள்ளம், புயல், வறட்சி, தீ விபத்து முதலிய எல்லாவிதமான இடர்பாடுகளுக்கும் நிவாரணம் இந் நிதியிலிருந்து மாநில அரசுகளுடைய விருப்பப்படி செலவிட்டுக் கொள்ளலாம். மத்திய அரசினுடைய அலுவலர் குழு பார்வையிடுதல், அவர்களின் முன் அனுமதி பெறுதல், போன்ற நடைமுறைகள் கிடையாது. இந்த நிதிக்கு மேலும் செலவு செய்ய வேண்டுமென்றால் அதை மாநில அரசே முழுவதும் ஏற்க வேண்டும். இந்த ஆண்டு நிதியே மிகுதியாக இருந்தால் அதை அடுத்த ஆண்டுச் செலவிற்கும் மாற்றிக் கொள்ளலாம். இந்த நிலையில் தமிழக வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசு ரூ. 39 கோடி அளிப்பதாக அறிவித்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல. மேலே சொன்ன துயர் துடைப்பு நிதி இன்னும் அமலுக்கே வரவில்லை. மத்திய அரசு அதற்கான விதிமுறைகளையும் வழிமுறைகளையும், பரிசீலித்துக் கொண்டு இருப்பதாகத்தான் செய்தி வந்துள்ளது. எனவே, புயல் வேகத்தில் மத்திய அரசு அறிவித்ததாகத் தொலைக்காட்சியில் சொல்லப்பட்டது, புயல் வேகத்தில் சொல்லப்பட்ட ஒரு செய்தியே அல்லாமல் வேறு அல்ல. உண்மை நிலவரம் இதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, ''ரா''வைப் பற்றி ஒரு தலைவர் இங்கே பேசியிருப்பதாக நம்முடைய நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டு விளக்கம் கேட்டார். அதுவும் அவர்கள் திருவிளையாடல்தான்.

1990 மே 11]

(ஈ) சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொச்சைப்படுத்தி "ஜூனியர் விகடன்" பத்திரிகை வெளியிட்டுள்ள செய்திகள் குறித்து.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரான என்னைப் பற்றியும், எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரான குமரி அனந்தன் அவர்களைப் பற்றியும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மூப்பனார் அவர்களைப் பற்றியும் ''ஜூனியர் விகடனில்''—ஒரு வாரப் பத்திரிகையில்—ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியில் எங்களைப் பற்றி விரசமாக—ரீல் ரெங்கப்பா என்று சொன்னாலும் ஹாஸ்யமாக சொல்லப்பட்ட பகுதி என்றாலும் கூட சற்று விரசமாக—இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டி அதை இங்கே படிக்க தங்களிடம் அனுமதி கோரியிருக்கிறேன். படிக்க அனுமதி வேண்டுகிறேன்.

10-25 மணி

''கரப்பான் பூச்சி, மூட்டை பூச்சி இவை இரண்டையும் நேரில் பார்த்தால் அலறி அடித்துக்கொண்டு ஓடுவார் மூப்பனார். இந்த விஷயம் வாழப்பாடியிடம் குழைந்து கொண்டும், மூப்பனாரிடம் ரகசியமாக வந்து பேசும் குமரி அனந்தன் மூலம் வாழப்பாடிக்குத் தெரிந்தது. உடனே வாழப்பாடி தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர் சிங்காரத்திடம் நன்கு கொழுத்த கரப்பான் பூச்சிகளையும் தாம்பரம்—பீச் மின் வண்டியிருலிந்து விசேஷமாகக் கொண்டு வரப்பட்ட மூட்டைப் பூச்சிகளையும் கொடுத்து அனுப்பியிருக்கிறார். மூப்பனார் சட்டசபைக்கு வரும்போது அவரது இருக்கையில் நாசுக்காக போட்டு மேயவிட்டு மூப்பனாரை அலற வைக்க வேண்டும் என்பது வாழப்பாடியின் திட்டம். இந்த விஷயம் மூப்பனாருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அதனால் தான் சட்டசபைக்கு வர பயப்படுகிறார். இந்த விஷயத்தை மூப்பனார் ஓப்பனாக வெளியே சொல்ல முடியாத நிலைமையில் சொன்னால் கட்சி விரோத நடவடிக்கை என்று வாழப்பாடி ஏதாவது நோட்டீஸ் அனுப்பி விடுவாரோ என்ற பயம், இப்படி மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார் மூப்பனார்'' என்ற செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

31—3—1990 வரை இந்தச் சட்டத்தின்படி அதாவது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி—1970ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி எவ்வளவு ஏக்கராக்கள் அறிவிக்கப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்பட்டன என்ற விவரத்தையும் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பு 1960-ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உச்ச வரம்புச் சட்டத்தின்படி மிகக் குறைவான அளவு நிலம்தான் எடுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கில் அல்லது ஆயிரக் கணக்கிலே தான் எடுக்கப்பட்டது. ஆனால் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அறிவித்த பிறகு உபரி நிலமாக அறிவிக்கப் பட்டது 1,74,671 ஏக்கர். அதில் ஏழைகளுக்கு வழங்கப் பட்டது 1,36,776 ஏக்கர். வழக்கு மன்றங்களிலே நிலுவை யிலே உள்ள பரப்பளவு 25,419 ஏக்கர். பொது உபயோகத் திற்காக ஒதுக்கியது 9,976 ஏக்கர். பிற இனங்கள் என்ற தலைப்பில் 2,500 ஏக்கர். பயனடைந்தவர்களைக் குறிப்பிட வேண்டுமேயானால், ஆதிதிராவிட மக்கள் 51,336 பேர் பயன் அடைந்தார்கள் ; அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பு 55,010 ஏக்கர். பழங்குடியினர் 97 பேர் பயன் அடைந்தார்கள்; நிலப் பரப்பு 148 ஏக்கர். இவர்கள் இருவரும் அல்லாத மற்றவர்கள் 60,803 பேர் பயன் அடைந்தார்கள். ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு 61,618 ஏக்கர், எனவே மொத்தம் 1,12,236 பேர் 1,36,776 ஏக்கர் நிலத்தைப் பெற்று, 1970 ஆம் ஆண்டு கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்புச் சட்டத்தின் படி அந்தப் பயனைப் பெற்று இருக்கிறார்கள். விவசாய நிலங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கும் நோக்கம் அரசாங் கத்துக்கு இருக்கிறது என்று 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழகச் சட்டமன்றப் பேரவையிலே அப்போது இருந்த வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 1958-ல் அறிவித்தார்கள்

11-00 மணி.

அதன் பிறகு 1961 ஆம் ஆண்டு இந்தச் சட்டம், 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்தேதியிடும் போது 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் முதல் என்று முன்தேதியிட்டு அமலுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த இடைக்காலத்தில் 1958-ஆம் ஆண்டிலிருந்து — அதாவது உச்ச வரம்பு வரும் என்று அறிவிக் கப்பட்ட 1958-லிருந்து 1960-ஆம் ஆண்டு என்ற இந்த இடைக்காலத்தில் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் பாதிக்கப் படக்கூடிய அளவிற்கு அதிகமான நிலம் வைத்திருந்த பலர் தங்களுடைய நிலங்களை பல்வேறு நபர்களுக்கும், அறக்கட்ட ளைகளுக்கும் பினாமியாக மாற்றி விட்டு, அந்த நிலங்களை அவர்களே தொடர்ந்து அனுபவித்துக் கொண்டு வந்திருக்கி றார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 11

மேலும் இந்த மாறுதல்களால் உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேற்றப்பட முடியவில்லை. அதே நேரத்தில் சுமார் 30 ஆண்டுகள் கழித்து, பழைய நில உரிமை மாற்றங்கள் எல்லாம் செல்லாது என்று அறிவிப்பதிலே உள்ள சட்ட சிக்கல்கள், நடைமுறைச் சிக்கல்கள் ஆகியவற்றை இந்த அரசு கவனத்தில்கொண்டு, அவற்றையெல்லாம் ஆராய்ந்து இந்தப் புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. புதிய சட்டத்தின்படி 1—1—1958 முதல் 6—4—1960 வரையில் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் பாதிக்கப்படும் நிலங்களை வைத்திருப்போர் செய்த நில மாற்றங்கள் செல்லுபடியாகாது என்று அறிவிக்கப்படுகின்றது. இக் காலக்கட்டத்திலே அவர்கள் அறக்கட்டளைகளுக்கு மாற்றியிருந்தாலுங்கூட, இந்தச் சட்டம் அதற்கும் பொருந்தும் என்று அறிவிக்கப்படுகிறது. அதே நேரத்தில், உண்மையான நில மாற்றங்களை புதிய சட்டம் பாதிக்காத வண்ணம் ஒரு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விலக்கின்படி இன்றைய நில உடமையாளர்தன் நிலத்தை பினாமியாக இல்லாமல் உண்மையாகவே வாங்கி இருக்கிறார் என்றும், அந்த நிலத்தை சுயமாகப் பயிரிடுகிறார் என்றும் நிரூபிக்கப்பட்டால், அப்படிப்பட்ட நிலங்களை இந்தப் புதிய சட்டம் பாதிக்காது. உண்மையாக வாங்குதல், சுயமாகப் பயிரிடுதல், போன்ற நிபந்தனைகளுக்கு விளக்கங்கள் சட்டத்திலே கொடுக்கப்பட்டுள்ளது.

பெரிய அளவில் சட்டத்தை ஏமாற்றும் முறையில் நிலங்களை மாறுதல் செய்ததைச் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வர வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகளையும் மற்றவர்களையும் தொந்தரவு செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டாம் என்றும் அரசு கருதுகிறது. இடைப்பட்ட இந்த 30 ஆண்டுக்காலத்தில் ஒன்று அல்லது இரண்டு பரம்பரைகள் புதியதாக உருவாகி இருக்கும். எனவே, உச்சவரம்பிற்கு மேல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் செய்யப்பட்ட மாறுதல்களை இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வர வேண்டாம் என்று அரசு கருதுகிறது. இதன் மூலம் குறுகிய காலத்தில் அரசு அதிகாரிகள் பெரிய பினாமி மாறுதல்களை கண்டு பிடித்துச் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, உபரி நிலங்களைக் கைப்பற்றி, விரைவாக ஏழைகளுக்கு வழங்கிட முடியும் என்று அரசு நம்புகிறது.

1—1—1958 முதல் 6—4—1960 வரையில் அந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் இந்தச் சட்டம் வரப்போகிறது என்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அன்றைக்குச் செய்யப்பட்ட மாற்றங்களைப் பற்றிய புள்ளி

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

விவரம், அறம் செய்கிற பொது நிறுவனங்களுக்கு 400 ஏக்கராவும், மற்ற கல்வி, மருத்துவம் முதலிய நம்பகங்கள் என்கிற பெயரால் 904 ஏக்கராவும், தனி நபர்களுக்கு விற்றது அல்லது பகிர்ந்து அளித்தது என்பது போல 76,967 ஏக்கராவும், மொத்தம் 78,271 ஏக்கரா பிரச்சினைக்குரியதாக இன்றைக்கு ஆகியிருக்கிறது. ஆகவேதான் இந்தச் சட்டம் தேவைப்படுகிறது என்பதையும், இந்தச் சட்டத்தைக் குறித்த விவாதங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே நடத்துகிற நேரத்தில் அவர்கள் வெளிப்படுத்துகிற கருத்துக்களை ஒட்டி இறுதியாக நிறைவு செய்து, இந்தச் சட்ட முன்வடிவு வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு முன்பு என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்ற அளவோடு இந்த அளவில் அமர்கிறேன்.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம், நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்த சட்டத்திற்கு இன்றைய தினம் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1961 ஆம் ஆண்டு சட்டம் அன்றையதினம் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சட்டம். இன்று முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாரோ, அதே அளவு முக்கியத்துவத்தை அன்றையதினம் காமராஜர் அவர்கள் கொடுத்திருக்கிறார். ஏனென்று சொன்னால், நாங்கள் எல்லாம் இன்று எதிர்பார்த்தோம். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை பேரவையில். ஆய்வ்ற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருவார், அவரே முன் நின்று அந்தச் சட்ட திருத்தத்தைக் கொண்டு வருவார் என்று எதிர்பார்த்தோம்.

11.05 மணி.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

ஆனால் முதல்வர் அவர்கள் இதற்கு நல்ல முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தால், அவர்கள் இந்தச் சட்டத்தை இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். காமராஜர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால், அது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையாக, இலட்சியமாக இருந்து வந்திருக்கிறது. சுதந்திரப் போராட்ட காலத்தில் 1930 ஆம் ஆண்டு, கராச்சி மாநாட்டுத் தீர்மானம்—1930 ஆம் ஆண்டிலே கராச்சி மாநாட்டிலே ஒரு தீர்மானம் போட்டார்கள். Land to the Tiller உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று அன்றைய தினமே தீர்மானம் போடப்பட்டது.

இப்போது முதல்வர் அவர்கள் சொன்னார்கள் அல்லவா? நிலம் சில பேர்களுடைய கைகளிலே குவியக் கூடாது, பிரபுத்துவம் இருக்கக் கூடாது என்கிற அந்த லட்சியத்திற்காக, அந்தக்

கொள்கைக்காக அன்றைய தினம் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை 1960 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்த வேண்டும் என்ற சட்டத்தை, 1961 ஆம் ஆண்டு காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள் அதே போல் பல நல்ல திட்டங்களை அன்றைய தினமே அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளுக்காக, குத்தகைதாரர்களுக்காக ஏழை நில உடைமையாளர்களுக்காக அன்றைய தினம் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. Cultivating Tenants Protection Act. அன்றே கொண்டு வந்த சட்டம், குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிற சட்டம். அதே போல் முதல் காங்கிரஸ் அமைச்சரவை இருந்த நேரத்தில் கடன் பளுவினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஏழை விவசாயிகளுக்காக, விவசாயத் தொழிலாளர்களுக்காக கடன் நிவாரணச் சட்டம், 1937 ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் கட்சி கொண்டு வந்திருக்கிறது. இப்படி பல நல்ல திட்டங்கள் முன்பே காங்கிரஸ் கட்சியால் அமுல் படுத்தப்பட்டு இருக்கிறது.

1969 மற்றும் 1970 ஆம் ஆண்டு மேலும் சில புரட்சிகரமான செயல் திட்டங்களையும் கொண்டுவர வேண்டும் என்று இந்திரா காந்தி அவர்கள் அன்றைய தினம் அறிவித்தார்கள். பேங்குகளை தேசியமயமாக்கினார்கள். மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது. அதே போல் நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம் கொண்டு வர வேண்டும், தெளிவான விளக்கங்கள் இருக்க வேண்டும், ஒரு ஏக்கர் என்றால் என்ன, எத்தனை ஏக்கர்கள் வைத்துக்கொள்ளவேண்டும், முதலிலேயிருந்தே சட்டங்களிலே ஓட்டைகள் இருக்குமானால், அந்த ஓட்டைகளை எல்லாம் அடைத்து முறையான சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று அத்தனை மாநிலங்களுக்கும் அன்றைய தினம் தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. பிளானிங் கமிஷன் அத்தனை மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பியிருக்கிறது. அப்போது அன்றைய தினம் இதே முதலமைச்சர் அவர்கள், முதல்வராக இருந்த நேரத்திலே, நிலச் சீர்திருத்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக அன்றைய தினம் குறைத்தார்கள். அன்றைய தினம் இந்தச் சட்டத்திலே மூலச் சட்டத்திலே 1966 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்திலே குறைகள் இருந்து இருக்குமானால், அதை நிவர்த்திக்க அன்றைய தினம் முயற்சிகளை மேற்கொண்டு இருக்கலாம். ஓட்டைகளை அடைத்திருக்கலாம். ஏன் என்றால் 1961-ல் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அன்றைய தினம் இந்த அவையிலே பலரும் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக முதல்வர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அன்று சொன்ன அதே வாதத்தை, 1952-லே இதைவிட இன்னும் கடுமையான வாசகங்களை அன்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள். 'இந்த மசோதா எப்படித் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான்

1990 மே 11] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

யூகிக்கிறேன் என்றால், நாட்டிலே உள்ள மிராசுதாரர்கள் அத்தனை பேர்களையும் அழைத்து, இந்த மாதிரி ஒரு மசோதா கொண்டு வரப் போகிறோம், உங்களுடைய வீட்டிலே உள்ள உற்றார் உறவினர்களுக்கு, பேரன் பேத்திகளுக்கு, சுற்றத்தார்களுக்கு, நம்பிக்கைக்கு உரியவர்களுக்கு, வேண்டியவர்களுக்கு எழுதி வைத்து விடுங்கள், அதற்குப் பிறகு இந்த மசோதவைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி, மறுபடியும் இறுதியாக இந்த மசோதா தயாரிக்கும் போதும், அவர்களைக் கூப்பிட்டு, சொன்னபடி செய்துவிட்டீர்களா, மசோதா கொண்டு வரலாமா, என்று அவர்களிடம் உத்தரவு கேட்டு விட்டு, இந்த மசோதா கொண்டு வரப்பட்டு இருப்பதாக நான் யூகிக்கிறேன்' என்று அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். ஆகவே அன்றைய தினமே இந்தச் சட்டத்திலே ஓட்டைகள் இருக்கின்றன. நழுவி விடுவார்கள், ஓட்டைகளிலே வழுவிச் சென்று விடுவார்கள் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதே போல் அன்றைய தினம் அந்த விவாதத்திலே கலந்து கொண்ட, கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த திரு. வி.கே.கோதண்டராமன் அவர்கள், 1958-லே அல்ல, 1955-லே இதே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப் போகிறோம், நில உடைமைக்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னதாக திரு. வி.கே. கோதண்டராமன் அவர்கள் இதே அவையிலே பேசியிருக்கிறார்கள். எனவே 60 போதாது, 58 அல்லது 55 வேண்டும் என்று அவர்கள் அன்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொருவர் அதே விவாதத்திலே கலந்து கொண்டு பேசும் போது, 52-லே காங்கிரஸ் கட்சி பேசத் துவங்கி விட்டது, எனவே இந்தச் சட்டத்தினாலே, பெரிய பலன் விளையப் போவதில்லை என்று அன்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா அவர்களும் அந்த விவாதத்திலே கலந்து கொண்டு, இது உச்சவரம்பு அல்ல, மிச்சவரம்பு என்று அன்றைய தினம் இங்கே பேசியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே அனுபவம் இருக்கிறது. இந்தச் சட்டத்திலே குறைபாடுகள் உண்டு, இந்தச் சட்டத்திலே ஓட்டைகள் உண்டு, நான் 1961 வது மூலச் சட்டத்தைச் சொல்கிறேன், ஓட்டைகள் ஒன்றிரண்டு உண்டு. அப்படி இருக்கும் போது, 1970 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தில் இதற்கெல்லாம் பரிகாரம் கண்டுடிருக்க முடியுமா, முடியாதா? காணுகின்ற முயற்சிகள் அன்றைய தினம் ஏன் எடுத்துச் கொள்ளப்படவில்லை?

11—10 மணி

அதற்குப் பிறகு முதல்வர் அவர்கள் இப்போது சுட்டிக் காட்டினார்கள். 1972 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்தோம் என்று சொன்னார். அப்போதாவது இதிலே

இன்னும் ஓட்டைகள் இருக்கின்றன. நான் விடப்போவதில்லை என்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கலாம். 1969-லேயிருந்து 1976 வரை நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைய தினம் முதல்வராக இருந்திருக்கிறார்கள். என்றாலும் அன்றைய தினம் இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டதாக அவர் எதையும் சொல்லவில்லை. அப்போதே அடைக்காத ஓட்டைகளை இப்போது இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் நீங்கள் அடைப்பீர்களானால் நான் மகிழ்ச்சியடைவேன். அடைத்து விட முடியும் என்று நினைக்கிறீர்களா, அடைக்கப் போகிறீர்களா? இதை ஏன் சொல்கிறேன் என்றால், இதிலேயும் ஓட்டைகள் விழுந்து விடக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில்தான் நான் இதைச் சொல்கிறேன். இப்போது கொண்டு வரப்படுகின்ற சட்டம் ஆற அமர யோசித்துக் கொண்டு வரப்பட்டிருக்கின்றதா என்பதையும் நாம் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஏனென்று சொன்னால், அவசரக் கோலத்திலே தயாரிக்கப்பட்ட சட்ட முன் வடிவாக இருக்குமோ என்று நான் சந்தேகிக்கிறேன். இதிலே பார்த்தால் பல சொற்கள் என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. பல சொற்களிலே இருக்கின்ற அந்த எழுத்துக்களை யூகிக்க வேண்டியிருக்கிறது. அந்த எழுத்தாகத்தான் இருக்க வேண்டுமென்ற முக்கியமான இடங்களிலே கூட யூகிக்க வேண்டியிருக்கிறது. ஆக முதலிலே எழுத்தை யூகிக்க வேண்டும். எழுத்தை யூகித்து விட்டுச் சொல்லை யூகிக்கலாம். அல்லது சொல் இன்னதாக இருக்க வேண்டுமென்று யூகித்து விட்டு, சொல்லிலேயிருந்து எழுத்தை யூகித்துக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னால், மிக அவசரத்திலே தயாரிக்கப்பட்ட சட்ட முன் வடிவாக இருக்குமோ என்று நாங்கள் யூகிக்க வேண்டியிருக்கிறது.

அதே போல் ஒரு சட்டம் வருகிறது என்று சொன்னால், அதற்கென்று ஒரு அரசாங்கம் பல முன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஒரு சட்டம் என்று சொன்னால், முதலில் gathering information— தகவலைச் சேகரித்தல். The intellectual Stage— அதற்குப் பின்னால் ஆய்வு செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை எந்த வகையிலே கொண்டு வரலாம், எந்த வகையிலே கொண்டு வந்தால் இது பயனுள்ளதாக இருக்கும், மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு போய்ச் சேரும் என்று யோசித்திருக்க வேண்டும். அதற்கடுத்தபடியாக, the Creative Stage Creative Stage என்று சொன்னால் சட்ட முன் வடிவினுடைய, 'Drafting Stage' Drafting Stage-லே நாம் இப்போது ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், பலநாட்கள் டம்மி போடுகிறார்கள். மாதக் கணக்கிலே டம்மி போடப்பட்ட பத்திரிகை அதிபர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நமக்குத் தெரியும். புதிய பத்திரிகை ஆரம்பித்து ஒரு மாதம், இரண்டு மாதம் அல்ல, இருக்கின்ற ஊரிலே கூட அல்ல, வெளியூரிலே

1990 மே 11] *[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]*

கூட கொண்டு போய் பத்திரிகைகளை வைத்துக் கொண்டு, நிருபர்களை வைத்துக்கோண்டு, துணை ஆசிரியர்களை வைத்துக் கொண்டு அவர்கள் டம்மி போடுகிறார்கள். சரியாக வருகிறதா, இதை ஆரம்பிக்கலாமா, இந்த மாதம் ஆரம்பித்தால் சரியாக வருமா ? அடுத்த மாதம் ஆரம்பிக்கலாமா என்று டம்மி போடுகிறார்கள். அதைப் போல இந்த 'Creative Stage'-ல் 'Draft' முறையாக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். கடைசியாக 'Technical Stage' 'Technical Stage' என்றால் அதிலே இருக்கின்ற குறைகள், அதிலே இருக்கின்ற நிறைகள், நிறைகளை மீண்டும் எப்படி நிறைவுபடுத்துவது என்று எல்லாம் பார்த்து, தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த 'Technical stage'-லே இன்ஜினியரிங் வேலையும் கொஞ்சம் இருக்கிறது. அதைப் போல எம்பிராய்டரி வேலையும் கொஞ்சம் இருக்கிறது. அந்த இரண்டையும் முறையாக செய்திருக்க வேண்டும். ஆனால் நான் பார்த்த வரையிலும், இது முறையாக செய்யப்பட்டிருக்கிறதா என்றால்......... (குறுக்கீடு) நாங்கள் கருத்து சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்கு எடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அப்படி நடைபெற்றதாக நான் கருதவில்லை. காரணம் 1961-லேயும் சரி, அதற்குப் பின்னாலும் சரி, அடிக்கடி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் definition of "family". இதிலாவது 'family' என்றால் என்ன என்று 'define' செய்யப்பட்டிருக்கிறதா, அல்லது விளக்கம் தரப்பட்டிருக்கிறதா என்றால், இந்தச் சட்டத் திருத்தத்திலேயும் அந்த விளக்கம் வந்ததாகத் தெரியவில்லை.

அதேபோல் செக்ஷன் 22—மூலச் சட்டத்திலே செக்ஷன் 22 Section 22 of the Principal Act takes care from the commencement of the Act to the notified date. 22-லே ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பற்றி அன்றைய தினம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தவறான மாற்றங்கள் இருக்குமேயானால் அவற்றை அரசாங்கம் தவறு என்று சொல்லி எடுத்துக் கொள்ளலாம் என்று அன்றைய தினமே சொல்லப்பட்டிருக்கிறது. முழுவதையும் படித்தால் நேரமாகும்.

Transfer and partition made on or after the date of commencement of the said Act but before the Notified date will be void என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல் அடுத்த செக்ஷன் 23-லே it takes care after of the notified date. அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னாலே ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றி 23-ல் மிகத் தெளிவாக அன்றையதினமே சொல்லி

11-15 மணி

யிருக்கிறார்கள். ஆக இந்தச் சட்டத்திலே எதற்காகக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், the present amendment takes us prior to the commencement of the Act. ஆக சட்டம் அறிவிக்கப்பட்ட தேதிக்கு முன்னால் சட்டம்கொண்டுவரப் பட்ட முயற்சிகளுக்கு முன்னாலே, the notified date as well as the commencement of the Act அதற்கும் முன்னாலே இந்தச் சட்டத் திருத்தம் நம்மை அழைத்துச் செல்கிறது' So, this amendment travels beyond the principal Act. How can we nullify a transaction which has taken place even before the commencement of this Act. அதோடில்லை. How can you nullify a transaction which has taken place even before the commencement of this Act. இவைகள் எந்த நீதிமன்றத்திலே போய் நாளையதினம் நாம் நின்றாலும் பதில்சொல்ல வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. 32 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே செய்யப்பட்ட மாற்றம் அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதில் 'அட்வர்ஸ் பொசஷன்' வரும். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், சில நியாயமான நன்நம்பிக்கையிலே செய்யப்பட்ட, 'குட் பெயித்', 'போனபைட்', மாற்றங்கள் அவைகளை ஏற்றுக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆக மாற்றம் செய்யப்பட்ட அந்த அவர்கள் கையிலேயிருந்து இன்னொரு கைக்கு பல கைகளுக்கு மாறி இருக்கக் கூடும், அதற்கு நான் விதிவிலக்கு அளித்திருக்கிறேன் என்று சொன்னாலும்கூட பொதுவாக மேலெழுந்தவாரியாக பார்ப்போமேயானால் நிச்சயமாக இதற்கெல்லாம் நாம் கோர்ட்டிலே பதில் சொல்லியாக வேண்டும். மீண்டும் அந்த சட்டம் செல்லாது என்று அவர்கள் அறிவிக்கின்ற நிலை வந்து விடக் கூடாது என்றே நான் இதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பினாமி டிரேன்ஸ்பர்ஸ் செல்லாது என்றால் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். பினாமி 'டிரான்ஸ்பர்ஸ் - யை பொருத்த வரையில் யார் பினாமியாக இருந்தாலும் அதை இன்னொருவருக்கு அவராகவே எழுதி வைத்திருந்தாலும் அவர்களிடத்திலிருந்து இந்த நிலத்தையோ, சொத்தையோ கோர முடியாது என்று பினாமி 'டிரான்ஸ்பர்ஸ் ஆக்ட்', சென்ட்ரல் ஆக்ட் ஒன்று ராஜீவ் காந்தி அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை முழுமையாக நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பொழுது புதியதாக செக்ஷன் 23 (சி) என்ற ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. அந்த 23 (சி) யிலே கமிட்டி என்று போடுகிறார்கள். கமிட்டியிலே யார் அங்கம் வகிக்கிறார்கள், Two landless Labourers, 3 Social workers and such other persons as may be specified. Who are the such other persons, அந்த இரண்டு பெயரை யார் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள். அந்த 3 சோசியல் ஒர்க்கர்ஸ்—அவர்களை யார் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள். அதற்கெல்லாம் மேலே "and such other

persons என்று இருக்கிறதே, who are the such other persons what is the number, It has not been specified எவ்வளவு பேர் போட்டுக் கொள்ளலாம். அவர்களுக்கு என்று ஏதாவது குறைந்த பட்சத் தகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? இந்த தகுதிகள் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? இதனால் என்ன ஆகப் போகிறது என்று சொன்னால் அந்தப் பகுதியிலே சச்சரவுகள் வந்து விடக் கூடாது. புதியதாக தங்களுக்கு ஏதோ புதிய பதவி வந்ததாக நினைத்துக் கொண்டு சச்சரவுகள் வந்து விடக் கூடாது. அதிலே கட்சிக்காரர்களைப் போட்டீர்களேயானால் நிச்சயமாக, அதுவும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களை போட்டால், நிச்சயமாக சச்சரவு வருவதோடு குழப்பம் வருவதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்பதை என்னாலே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இதைத்தான் செய்யப் போகிறோம் என்று உறுதியாக நீங்கள் வந்து விட்டீர்களேயானால், இரண்டிலே ஒன்றைச் செய்யலாம். ஒன்று 'ஆல் பார்ட்டி கமிட்டி' அனைத்துக் கட்சியும் இங்கே இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சியிருக்கிறது, அதே போல எதிர்க் கட்சி அங்கீகாரத்துக்கு இணையான இரண்டாவது கட்சியாக நாங்கள் இங்கேயிருக்கிறோம். 'ஆல் பார்ட்டி கமிட்டி' போட்டாலும் அதைவிட எது முறை என்று சொன்னால் 'எலக்டட் ரெப்பரஸன்டேடிவ்ஸ்', தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எம். எல். ஏ. க்கள் இங்கேயிருக்கிறோம். 'சேர்மன்' இருக்கிறார்கள். 'சேர்மனை' விரும்பினால் அவர்களையும் போடுங்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அதிலே போட வேண்டுமே தவிர வேறு யாரையாவது போட்டு, அந்தப் பகுதியிலே குழப்பத்துக்கும், சர்ச்சைகளுக்கும் இடம் கொடுத்து விடக் கூடாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் 'டாஸ்க் போர்ஸ் கமிட்டி' மாதிரி இதிலேயும் குழப்பம் வந்து விடக் கூடாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொருத்தவரையில் விளம்பரத்திற்குப் பயன்படக் கூடும் அல்லது மிகப்பெரிய சீர்திருத்தவாதிகள் போல் காட்டிக்கொள்ள பயன்படுமே தவிர பயன் ஏதும் விளையுமா என்பதில் எனக்கு உள்ளபடியே அச்சமிருக்கிறது. மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக ஆகிவிடக் கூடாது. அதே போல் சென்ற 1961-ல் முதல்வர் அவர்கள் இங்கே பேசும் போது கடைசியாக மாயமானாக இருக்கிறது இந்தச் சட்டம் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சட்டமும் அதை போல மாயமானாக இருக்கிறது. I quote இந்த மாயமான் விவசாயிகளை ஏமாற்றி இழுத்து செல்லும் அந்த நேரத்தில் வாக்குரிமை என்ற சீதையை இந்த காங்கிரஸ் இராவணன் தூக்கிச் செல்வான், இந்த வனவாச ஆட்சியில் இப்பொழுது துள்ளவிட்டிருக்கிற சர்க்கார் என்று சொல்லியிருக்கிறார். அதே போல் நாங்களும் சந்தேகிக்கிறோம் இப்பொழுது நீங்கள் ஒரு மாயமானை துள்ள

வீட்டிருக்கிறீர்களா? அந்த மாயமான் என்ன பயனைத் தரப்போகிறது? நிச்சயமாக எந்த சீதையையும் இராவணன் தூக்கிக் கொண்டு போய்விடக் கூடாது. இந்த சட்டத் திருத் தத்தை நல்ல எண்ணத்தோடு நீங்கள் கொண்டு வருவீர்களே யானால் ஆதரிப்பதோடு நிச்சயமாக சிலர் கையிலே நிலம் முழுவதும் முடக்கப்படுவதை, குவிவதை காங்கிரஸ் கட்சி எதிர்க் கிறது என்பதைச் சொல்லி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் திரு. பால சுப்பிரமணியம் பேசி முடிக்கும் போது காங்கிரஸ் கட்சி எதிர்க் கிறது என்று முடித்தார். ஆனால் அவர்களுடைய வாசகம் அதுவல்ல, எனக்கு மிகத் தெளிவாகத் தெரியும். அதாவது யாராவது தப்பி விடப் போகிறார்கள், தப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று குறிப்பிடுகிறார். பத்திரிகைகாரர்கள் சரியாகக் காதில் விழாமல் இந்த சட்டத்தையே காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது என்று தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என் பதற்காகத்தான் இந்த விளக்கம் அளிக்கின்றேன்.

11-20 மணி

திரு. கோ. வீரைய்யன் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே முன் மொழியப்பட்டு இருக்கக் கூடிய 1961 ஆம் ஆண்டு நில உச்சவரம்பு சட்டத்தினுடைய இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முன் மொழிந்து அவர்கள் துவக்க உரையிலே சில விளக்கங்களை குறிப்பிட்டார் கள். இந்த மாமன்றம் கடந்த ஓராண்டுக் காலமாக சில முற் போக்கான சட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கிறது. அந்த வரிசையிலே இந்தச் சட்டமும் முன்மொழியப்பட்டு இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு இந்த உச்ச வரம்புச் சட்டம் ஏறத் தாழ 60 ஆம் ஆண்டிலிருந்து எப்படி அது நிறைவேற்றப்பட்டு வந்தது என்ற வரலாற்றையும் இங்கே குறிப்பிட்டு இன்றைக்கு அந்தச் சட்டம் வரப் போகிறது என்று முன்னாலேயே ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி சட்டம் 1960 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டாலும் 1958 ஆம் ஆண்டே இங்கே சட்டமன்றத்திலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாகவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்கு நினைவு 1958 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலேயே இப்படி ஒரு நிலவுடை மைக்கு வரம்பு கட்டக் கூடிய சட்டத்தை காங்கிரஸ் கட்சி கொண்டு வரப்போகிறது என்று அவர்கள் அறிவித்ததாக நினைவு. அப்படி அறிவித்து 2 ஆண்டுகளுக்கு மேலாக அந்த பிரச்சாரம் நடைபெற்று இருக்கிறது. அந்த நிலங்கள் பூராவும் எப்படி பகிர்ந்தளித்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே ஏற்பா

1990 மே 11] [திரு. கோ. வீரையன்]

டுகளை எல்லாம் செய்துவிட்டு 1960ஆம் ஆண்டு இந்தச் சட்டம் வெளியிடப்பட்டு அது ஆய்வுக் குழுவிற்கு விடப்பட்டு ஓராண்டுக் காலம் ஆய்வுக் குழுவும் ஆய்வு செய்து 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த மாமன்றத்திலே சட்டமாக நிறைவேற்றப் பட்டது என்பது கடந்த கால வரலாறு. அதிலே அப்படி அறிவிக்கப்பட்ட 1958 ஆம் ஆண்டு ஜனவரி 1 தேதிக்குப் பிறகு இந்தச்சட்டம் அரசு கெஜட்டிலே வெளியிடப்பட்ட 1960 ஏப்ரல் 6 ஆம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று வெளியிடப்பட்ட அந்தத்தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தச் சட்டத்திற்குள்ளே வராமல் தப்பித்துக் கொள்ளக்கூடிய முறையிலே வெளியே கொண்டு போன நிலங்களையும் உபரி நிலங்களாக எடுப்பதற்கான முறையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன்.

இதிலே சில தமிழ் வார்த்தைகளில் சிரமங்கள் இருக்கின்றன. இப்போது இரண்டாவது பக்கத்தில் சொல்லும் போது குறிப்பிட்டிருக்கிறார்கள். ''அரசின் கொள்கை குறித்தும் முன்னதாக அரசினால் செய்யப்பட்ட அறிவிப்புகள் குறித்தும், அத்தகைய சட்டம் இயற்றப்படப் போவதை எதிர்பார்த்து மேற்சொன்ன சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னரே பல நில உரிமையாளர்கள், பெருமளவில் நிலப்பரப்புகளைத் தனி நபர்களுக்கும் பொறுப்பாட்சி அமைப்புகளுக்கும் உரிமை மாற்றம் செய்துவிட்டிருப்பது தெரியவந்துள்ளமையாலும், என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் காரண நோக்கங்களில் சொல்லும் போது விற்பனை, கொடை, ஒப்படைவு ஏற்பாடு இவற்றில் எந்த வகையிலேயும் அல்லது பிற எந்த வகையிலேயும் நபர் எவருக்கும் செய்யப்பட்ட அத்தகைய நில உரிமை மாற்றங்கள் அனைத்தையும் சட்டப்படி செல்லா நிலையனவாக ஆக்கும் வகையில், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதற்கென சட்டமொன்றை இயற்றுவதென்று அரசு முடிவு செய்துள்ளது. அந்த நோக்கத்தை நிறைவேற்ற இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த நோக்கத்தில் இந்த தமிழ் வார்த்தை எனக்கு புரியாததால் என்னவோ இந்த ட்ரஸ்ட் என்ற தனியார் அறக்கட்டளை என்ற அந்தச் சொல் இதிலே எந்த தமிழ் வார்த்தையிலே வருகிறது என்று என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. அதை மாற்ற வேண்டும் அல்லது இந்த தமிழ் வார்த்தை, விற்பனை, கொடை, ஒப்படைவு என்பதிலே அறக்கட்டளை என்பது எந்த வார்த்தையிலே வருகிறது என்பதையும் சேர்த்துச் சொல்வது உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டம் 1961 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதுபோது இங்கே அந்தச் சட்டத்தினுடைய முகப்புரையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39ஆம் பிரிவில் உள்ள பிரிவு ஏ.பி

என்ற அந்த இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்குட்பட்டு இந்திய நாட்டில் இருக்கக் கூடிய அடிப்படையான ஏற்றத்தாழ்வு களை போக்கக் கூடிய முறையில் ஒரு சமூக நோக்கத்தோடு, சமூக நீதி வழங்கக் கூடிய முறையில் இன்றைக்கு இந்த நில உடைமைகளுக்கு வரம்பு கட்டப்பட்டு நிலம் எடுத்து விநியோகிக் கக்கூடிய முறையில் நிறைவேற்றப்பட இருக்கிறது என்ற இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அதனுடைய தேவை களை நிறைவு செய்வதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருப்பதாக அன்றைக்கு அந்த முகப்புரையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு அந்த நோக்கம் நிறை வேறியிருக்கிறதா, அந்த நோக்கத்திலே தமிழ்நாடு வெற்றி பெற்றிருக்கிறதா என்பதை அடிப்படையாகப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

11-25 மணி.

இந்தச் சட்டம் இந்த அவையிலே 1960—1961 ஆம் ஆண்டு விவாதத்தின்போது என்னுடைய நினைவு, அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணா அவர்கள் இங்கே சட்டமன்றக் கட்சித் தலைவராகவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட மன்றக் கட்சியினுடைய துணைத் தலைவராகவும் இந்த அவை யிலே இருந்து, இந்தச் சட்டத்தை விமர்சித்து வாதிட்டு இருக் கிறார்கள். இந்தச் சட்டம் என்பது அன்றைக்கு ''இது உச்ச வரம்பு அல்ல, மிச்சவரம்பு சட்டம்'' என்றும், புலியைப்பிடிக்கப் போய், அன்றைக்கு இருந்த வருவாய்த்துறை அமைச்சர் மாணிக்க வேலனார் எலியைப் பிடித்து வந்திருக்கிறார் என்று அன்றைக்கு பேசியிருக்கிறார்கள். இத்தனைக்கும், பிறகு, காங்கிரஸ் கட்சி யினுடைய தலைவர்கள், அன்றைக்கு இருந்த முதலமைச்சர் காமராஜர் அவர்கள், வருவாய்த்துறை அமைச்சராக இருந்த மாணிக்கவேலனார் அவர்கள் சொல்லும் போது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், இரண்டு இலட்சம் ஏக்கர் நிலம் உபரி யாகக் கிடைக்கும் என்று, அன்றைக்கு தமிழ்நாட்டு மக்களுக்கு காங்கிரஸ் கட்சி வாக்குறுதி கொடுத்தது. அதன் பிறகு, இந்தச் சட்டத்தினால் உபரி நிலம் கிடைக்கவில்லை என்கிற போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு, 1970 ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தில் 30 ஏக்கர் என்பதை எல்லாம் 15 ஏக்கராக மாற்றி, நிலவுடைமைக்கு வரம்பு கட்டி, 15 ஏக்கராகக் குறைத்து இந்த அவையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய அன்றைக்கு மாலையிலே, என்னுடைய நினைவு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சைதைத் தொகுதியினு டைய சட்டமன்ற உறுப்பினராக இருந்து, சைதை மாநகரில் அன்றைக்கு பொதுக் கூட்டத்திலே பேசும்போது அன்றைக்கு சட்டமன்றத்திலே ஒரு உச்சவரம்புச்சட்டத் திருத்தச்சட்டத்தை

1990 மே 11] [திரு. கோ. வீரையன்]

நிறைவேற்றி வந்திருக்கிறோம். அதன் அருமை, பெருமைகள், சென்னை மாநகரில் இருக்கக் கூடிய மக்களுக்குத் தெரியாது, தஞ்சை மாவட்ட மக்களுக்குத்தான் அதனுடைய அருமையும் பெருமையும் தெரியும். அப்படி இந்தச் சட்டம் அமல் நடத்தப் படுமேயானால் ஏறத்தாழ 2 இலட்சம் ஏக்கர் உபரி நிலம் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

காங்கிரஸ் ஆட்சி அந்தச் சட்டத்தை 30 ஏக்கர் என்று வரம்பு கட்டும் போது, அவர்கள் இரண்டு இலட்சம் ஏக்கர் உபரிநிலம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதை, 30-ஐ 15-ஆக ஆக்கி யதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு சைதை நகரத்திலே இரண்டு இலட்சம் ஏக்கர் உபரி நிலம் கிடைக்கும் என்று சொன்னார்கள். இத்தனைக்கும் பிறகு, 30 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் பரிசீலிக்கும் போது, இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையிலே சில விளக்கங்களைக் கொடுத்தார்கள், இதுவரையிலே நாம் எடுத் திருக்கக் கூடிய நிலம் என்பது 1,74,621 ஏக்கர்கள். அப்படி யானால் ஏறத்தாழ 1.75 இலட்சம் ஏக்கர்கள் எடுத்து இருக் கிறோம், இதிலே நாம் 31-3-90வரை வழங்கியிருப்பது 1,36,726 ஏக்கர்கள். ஏறத்தாழ 1.37லட்சம் ஏக்கர்கள் வழங்கியிருக்கிறோம். நாம் கிடைக்குமென்று எதிர்பார்த்தது 4 இலட்சம் ஏக்கர்கள். 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கணக்கை நாம் பரிசீலிக்கும் போது நாம் வழங்கியிருப்பது, 1.37 இலட்சம் ஏக்கர் என்றால் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியைத் தான் 30 ஆண்டுகளிலே நம்மால் நிறைவேற்ற முடிந்திருக்கிறது என்பதை இந்த நேரத் திலே நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏனென்றால், இதைப்பற்றி நாங்கள் ஆரம்பத்திலிருந்து, இன்றைக்கு அல்ல, வெள்ளையர் ஆட்சி இருந்த காலத்திலிருந்து 'லேண்ட் டு தி டில்லர்' என்ற கோஷத்தை இந்த நாட்டு மக்களுக்கு முன்னால் வழங்கிய காலத்திலிருந்து, 'லேண்ட் டு தி டில்லர்' என்ற கோஷத்திலிருந்து காங்கிரஸ் பின்வாங்கி, 'லேண்ட் ரிபார்ம்' என்ற கோஷத்திற்குப் போனபிறகு நிலம் உழுபவர்களுக்குச் சொந்தமல்ல, நிலச்சீர்திருத்தம் என்ற நிலைக்கு அவர்கள் போனதற்குப் பிறகு, தொடர்ச்சியாக நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அப்படிச் சொல்வதன் நோக்கம், திரும்பத் திரும்ப, இன்றைக்கு இந்தத் தமிழகத்தில் இருக்கக் கூடிய நில உறவு முறைகளிலே ஒரு மாற்றம் கொண்டு வந்து, பெரும்பகுதி நிலத்தை சில தனியார்கள் வைத்துக் கொண்டிருப்பதன் மூலமாக, ஏற்படக் கூடிய சமூக அநீதிகளைத் தவிர்த்து சமூகத்தில் ஒரு நீதி வழங்கக் கூடிய முறையில் அந்த நிலம் நிலமற்ற ஏழைகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்பது. யார் மேலும் இருக்கிற தனிப்பட்ட கோபதாபங்களால் அல்ல. அந்த நிலப்பிரபுக்கள் பூராவும் 10,000, 5,000 ஏக்கர்கள் என்ற

(மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் டைம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் நேரம் வேண்டுமென்று கேட்டால், சட்டமுன்வடிவுகளை நிறைவேற்ற முடியாது (குறுக்கீடு). சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கோ. வீரையன் : முக்கியமான சட்டம் ஆயிற்றே, கொஞ்சம் டைம் வேண்டும். ஆகவே, இப்படி இந்த அடிப்படை நோக்கம் என்பது, தனிப்பட்ட மிராசுதார்கள் நிலம் வைத்து இருக்கிறார்கள். நாங்கள் ஏழைகளாக இருக்கிறோம். அவர்களிடம் கூலிக்காரராக இருக்கிறோம். அல்லது குத்தகைதாரராக இருக்கிறோம் என்ற கோபத்திலிருந்து நாங்கள் சொல்லவில்லை. இந்த நிலவுடைமை மாற்றப்பட வேண்டும் என்பது, நிலம், நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது, நிச்சயமாக ஒரு சமூக நீதி என்ற முறையில், அதைக் கொடுப்பதன் மூலமாகத்தான் தமிழகத்திலே மிகப் பெரிய ஒரு மாற்றத்தை, வறுமையில் இருக்கக் கூடிய மக்களை வறுமையை விட்டு வெளியே கொண்டு வர, சமூகத்திலே ஒரு நீதி ஏற்படுவதற்கு நிச்சயமாக முயற்சிக்க முடியும். எனவேதான் இந்தச் சட்டத்திலே சில குறிப்பிட்ட 1958 ஜனவரிக்குப் பிறகு, 1960 ஏப்ரல் 6-க்கு முன்னாலே செய்யப்பட்ட மாற்றங்கள், இந்த நிலச் சட்டத்திலிருந்து வெளியே கொண்டு போவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையிலே செய்யப்பட்டிருந்தாலும் கூட, நான் கூறிக்கொள்ள விரும்புவது, தனியார் அறக்கட்டளைகள், பொது அறக்கட்டளைகள் என்பதன் கீழ் கோயில், மடம், அப்படிப்பட்ட நிருவாகங்கள் இருக்கின்றன. அது 1960 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்டம், முதல் சட்டத்திலேயே அந்த நிலங்களும் சேர்த்து உள்ளடக்கித்தான் உச்சவரம்பாக வந்தது.

11-30 மணி.

ஆனால் பொறுக்குக் குழுவுக்குப் போய் வந்த பிறகு அது தனியாகப்பிரிந்து இந்தச் சட்டத்திற்கு வெளியே போய்விட்டார்கள். அப்படி ஏறத்தாழ ஒரு 8 இலட்சம் ஏக்கர் இந்தச் சட்ட வரம்புக்கு வராமல் வெளியே போய் விட்டது. அதையும் இந்த அரசு தனியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது தவிர தனியார் அறக்கட்டளை என்ற பெயரில் அறக்கட்டளை என்று வைத்துக் கொண்டு சில பெரிய மனிதர்கள் செல்வாக்கு பெற்ற இடங்களில் இருந்து கொண்டு சத்திரம் என்று எல்லாம் வைத்துக் கொண்டு, சத்திரத்திலே சோறும் போடுவது இல்லை, தண்ணீரும் ஊற்றுவது இல்லை. ஆனால் சத்திரம் என்ற பெயரால் நிலங்களை எல்லாம் இன்றைக்கு தமிழகத்திலே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தனியார் அறக்கட்டளைகளில் நிலங்கள் மட்டும் இருக்

கிறதே தவிர அங்கே அறம் இல்லை என்று இருக்கக் கூடிய அந்த நிலையை மாற்றி தனியார் அறக்கட்டளை என்ற பெயரில் இருக்கக் கூடிய அந்த நிலங்கள் எல்லாம் எடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், இந்த அரசின் கவனத்திற்கும் கொண்டு வருவது இந்த குறிப்பிட்ட 58-க்கும் 60-க்கும் இடையில் உள்ள ஒரு குறிப்பிட்ட காலத்தில் தப்பிச் சென்ற நிலங்களை மட்டும் கொண்டு வருவதற்கு வந்து இருக்கக் கூடிய இந்தச் சட்டத் திருத்தத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, வேண்டுவது, தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய அந்த நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கக் கூடிய முறையில் அந்த உச்ச வரம்புச் சட்டம் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு சீரான ஒரு அடிப்படையான மாற்றத்தோடு, திருத்தத்தோடு உபரி நிலங்கள் கிடைக்கக் கூடிய வகையில் அந்த சட்ட நுணுக்கத்திற்குள் நான் போகவில்லை. சமூக நீதிக்காக, அரசியல் ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய ஒரு பிரச்சினையாக அது இருப்பதால் இந்த அரசு எப்படி பரிசீலனை செய்தால் உபரி நிலங்கள் கிடைக்கும், எப்படிச் செய்தால் அந்த உபரி நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்து ஒரு சமூக நீதியை உண்டாக்க முடியும் என்ற முறையில் இந்த உச்சவரம்புச் சட்டத்தை முழுமையாக மாற்றுவதற்கு, திருத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 30 ஆண்டு அனுபவங்கள் எப்படி போதிக்கிறது என்று சொன்னால் நான் தஞ்சாவூர் பேருந்து நிலையத்திலே நிற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் மாயமான் என்று குறிப்பிட்டார்கள். (மணியடிக்கப் பெற்றது) நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன். நான் தஞ்சாவூர் பேருந்து நிலையத்திலே நிற்கிறேன். நான் போக வேண்டியது திருவாரூர். திருவாரூர் என்று பேருந்தில் போர்டு போட்டிருக்கிறது. அந்த பேருந்தில் நானும் ஏறி உட்கார்ந்து விட்டேன். பேருந்தை ஓட்டுநரும் ஓட்டுகிறார். பேருந்து போய் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் முகவரியிலே சொன்னது போல் அரசியல் சட்டத்தின் 39-வது பிரிவுக்கு ஏற்ப சமூக நீதி வழங்குவதற்காக செய்யப்பட்ட அந்தச் சட்டம் 30 ஆண்டு காலத்திலே எப்படி இருக்கிறது என்று சொன்னால் நான் திருவாரூர் செல்வதற்கு தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் திருவாரூர் போர்டு போடப்பட்டிருந்த பேருந்தில் ஏறி உட்கார்ந்து பேருந்து போய்க்கொண்டிருக்கிறது. நானும் பயணம் செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் 30 ஆண்டுகளுக்குப் பிறகு பேருந்து போய் நிற்கிறது, நானும் இறங்கிப் பார்க்கிறேன், திருவாரூரில் இறங்கவில்லை செங்கிப்பட்டி சானடோரியத்திலே அது போய் நிற்கிறது, நான் அங்கே இறங்கி இருக்கிறேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்

[திரு. கோ. வீரையன்] [1990 மே 11

கேட்டுக்கொள்வது எல்லாம் 30 ஆண்டு காலமாக இது போய் நின்ற இடம் திருவாரூர் பேருந்து நிலையம் அல்ல, சையரோக மருத்துவமனை இருக்கக் கூடிய செங்கிப்பட்டியில் போய் நிற்கிறது. எனவேதான் அங்கேயே விட்டுவிடாமல் திரும்ப அந்த வண்டியை திருவாரூர் கொண்டு வந்து சேருங்கள், திருவாரூர் கொண்டு வந்து சேர்ப்பதோடு நின்றுவிடாமல் கொஞ்சம் திருக்குவளைக்கும் கொண்டு போங்கள். திருக்குவளைக்கு கொண்டு போங்கள் என்றால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். திருக்குவளை மண்ணைப் பற்றி உங்களுடைய நெஞ்சுக்கு நீதியிலே எழுதியிருக்கிறீர்கள். திருக்குவளை முழுவதும் இன்றைக்கு பெரும்பகுதி அந்த மண் தர்மபுரத்திற்கு சொந்தமான மண்ணாக இருக்கிறது. எனவே தான் அந்த வண்டி செங்கிப்பட்டிக்கு 30 ஆண்டுக்குப் பிறகு போய் நிற்கிறது. அதை திருவாரூருக்குக் கொண்டு வந்து கொஞ்சம் திருக்குவளை வரையிலே கொண்டு போனால் நிச்சயமாக தமிழகத்திலே ஒரு சமூக நீதி வழங்குவதற்கு (மணியடிக்கப் பெற்றது) உபரியாக கிடைக்கக் கூடிய முறையில் அந்த உபரி நிலங்கள் கிடைக்க வகை செய்ய முடியும். எனவேதான் இந்த சட்டத்திலே தப்பித்துச் செல்வதற்கு சட்டம் வருவதற்கு முன்பே கூட 58-க்கு முன்னாலே 47-லிருந்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர்களுக்கு எப்படி எல்லாம் செய்யப் போகிறோம்; நாட்டின் நடைமுறை எப்படி இருக்கிறது? ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு அல்லது மற்ற மன்னர் மானியம், மானியம் கொடுத்து மன்னர்களை இந்திய சமஸ்தானத்தில் இணைத்து கொண்டு வந்து, இப்படி எல்லாம் வரும் போது அந்த நிலத்திற்கு எல்லாம் எப்படி வரும்—அந்தப் பெரிய மனிதர்களுக்கு நிச்சயமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களுக்கு, உங்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழகத்திலே மட்டும் அல்ல, இன்னும் பல்வேறு மாநிலங்களிலே மிகப்பெரிய ஜமீன்தாரர்களாக இருந்தவர்கள், பட்டாதாரர்களாக இருந்தவர்கள், பெரும் மிராசுதாரர்களாக இருந்தவர்கள், ஏன் அமைச்சர்களாக இருந்து அதுவும் வருவாய்த் துறை அமைச்சராக, வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்து அந்த அரசினுடைய சொத்துக்களை தன்னுடைய சொத்துக்களாக பாதுகாப்பதற்கு முயற்சிகள் அவர்கள் எடுத்துக்கொண்டு இருந்தார்கள் என்பது எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அந்த முறையில் முழுமையாக இன்றைக்கு தமிழகத்து மக்களுக்கு ஒரு நியாயம் வழங்கி, நீதி வழங்கி, சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி வறுமையில் இருக்கக் கூடிய மக்களை வறுமையில் இருந்து வெளியே கொண்டு வரக்கூடிய முறையில் இந்த உச்சவரம்பு சட்டத்தின் ஒரு பகுதியை திருத்தப்பட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்திலே முழுமையாக நாம் எதிர்பார்க்கக்கூடிய பலன் தமிழ்நாட்டுக்கு கிடைக்கக் கூடிய முறையில் இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அந்த முறையிலே இந்த அரசு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

[1990 மே 11]

11-35 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த பினாமி நில ஒழிப்புச் சட்டத்தில் என்னுடைய கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டமானது 1958-ஆம் வருஷம் ஜனவரி மாதம் ஒன்றாம் தேதியி லிருந்து 1—4—1960 வரை உள்ள இடைக்காலத்தில் உள்ள போக்குமாக்குகளை எல்லாம் சரியான முறையில் ரிஜிஸ்டர் பண்ணி இருக்கிறார்களா, என்ன பண்ணி இருக்கிறார்கள், நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா, உச்சவரம்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்து பினாமியாக நடந் திருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது. அப்போது நில உச்சவரம்புச் சட்டம் காமராஜர் காலத்திலே கொண்டு வரப்பட்டது. நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களும் அன்றைக்கு அந்த இடத்திலே இருந் திருக்கிறார்கள். முதன் முதலிலே குளித்தலை தொகுதியிலே அவர் நின்று இருக்கிறார். எனக்கு நன்றாகத் தெரியும். எலக்ஷ னிலே நின்று ஜெயித்த அன்றைக்கு தஞ்சாவூர் திருச்சியிலே அவருக்குத் தெரியாத இடமே இல்லை. மிராசுதாரர்கள் எப்படி இருப்பார்கள்? 2,000 ஏக்கர், 3,000 ஏக்கர் என்று பல கிராமங் கள் இருக்கும். ஒரு கிராமம், இரண்டு கிராமம் என்றல்ல. பல கிராமங்கள் இருந்தன. அப்படித்தான் அப்போது கணக்கிடப் பட்டது. இந்த உச்சவரம்புச் சட்டம் வரும் என்றதும் உடனடி யாக சந்தேகப்படுகிறார்கள். இப்போதும் ஓரளவுக்கு சந்தேகப் படுகிறார்கள் என்று நினைக்கிறேன். சந்தேகப்படவேண்டியது இல்லை. எப்போதும் எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் ஏதாவது சொல்லிக்கொண்டுதான் இருப்பார்கள். காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த சந்தேகத்திற்கு இடம் இல்லை. ஏனென்றால், அவர் எதற்கும் ஆசைப்பட்டவர் அல்ல. தனக்கென்று எந்தச் சொத்தும் வைத்துக்கொள்ளவில்லை. குடும்பம் என்றிருந்தால்தான் சொத்து இருக்கவேண்டும். அப் போது தான் ஆசை வரும். பிள்ளைக்கு ஏதாவது செய்ய வேண்டும். பையனுக்கு ஏதாவது செய்யவேண்டும். நன்றாகப் படிக்க வைக்க வேண்டும்; மேனாட்டுக்கு அனுப்ப வேண்டும். அந்த ஆசை எல்லாம் ஏற்படும். ஆசாசா பரம துக்கம், நிராசா பரம சுகம் என்று தர்மத்தில் சொல்லுகிறார்கள். அப்படி ஆசை இல்லாத சோஷலிச தர்மத்தை நிறைவேற்றவேண்டும் என்ற ஒரே கொள்கை உடையவர் காமராஜர் ஒருவர்தான்.

அவர்கள் முதன்முதலில் குத்தகைதாரர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள். அதற்கு மேல் ஒருபடி இந்த நிலச்சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம். அப்போது கொண்டு வரும்போது 30 ஏக்கர் என்று கொண்டு வந்தார்கள். அதற்கு மேல் உள்ள நிலங் களை தர்மத்துக்கு எழுதி வைத்தார்கள். தஞ்சாவூர், திருச்சி மாவட்டத்தில் மட்டும்தான் நீர்ப்பாசனம் உள்ள நிலங்கள் இருக் கின்றன. வேறு எங்கேயும் அந்த அளவுக்குச் சொல்ல முடியாது.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மே 11

அவர் தொகுதியிலே நங்கவரம் என்பது பெரிய பண்ணை. எனக்கு ஓரளவுக்கு நல்ல வயசு ஆகி இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். கிட்டத்தட்ட ஒரு நிலச்சுவான்தாரருக்கு 200, 300 குத்தகைதாரர்கள் இருப்பார்கள். அத்தனை பேர்களுக்கும் அவர்கள் சாசனம் பண்ணி எழுதிக் கொடுக்கின்றபோது ஸ்டாம்ப் பற்றாக்குறை எல்லாம் ஏற்பட்டது. அப்போது பினாமி நிலம் என்பது மாதிரி ஸ்டாம்பிலே கூட பினாமி நடந்திருக்கிறது. ஸ்டாம்ப் எல்லாம் நிறைய விலை விற்கிறது என்றெல்லாம் கூட அப்போது பிரச்சினை வந்தது. யார், யார் குத்தகைதாரர்களோ அவர்களுக்கெல்லாம் எழுதி வைத்தார்கள். நீ 20 ஏக்கர் உழுகிறாயா, வைத்துக் கொள், நீ 15 ஏக்கர் உழுகிறாயா வைத்துக்கொள், 15 ஏக்கர் என்று எழுதி வைத்தார்கள். பினாமியாக நடந்திருக்கிறது. ஒரு சம்பவத்தைச் சொல்லலாம். நான் சொல்லத் தயாராக இல்லை. கிட்டத்தட்ட 30 வருஷம் ஆகிவிட்டது. சின்னக் குழந்தைகளாக இருக்கும்போதுதான் வளையும். முதிர்ந்த வயதிலே, வளையாது. படிக்கிற குழந்தைகள் கூட ஒரு குறிப்பிட்ட வயதில்தான் படிக்கும். வயது ஆகிவிட்டால் படிப்பு வராது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அந்தமாதிரி இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 30 வருஷத்திற்கு மேல் ஆகிவிட்டது. அப்போது குழந்தையாக உள்ளவர்களுக்கு கல்யாணம் பண்ணி இருந்தால்கூட இப்போது பிள்ளை பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்ட சட்டம். அதைச் சரியான முறையில் கொண்டுவர முடியவில்லை. அதில் எத்தனையோ இருக்கிறது. கள்ளன் பெரிசா, காப்பான் பெரிசா? கள்ளன்தான் பெரிசு. காப்பான் பெரிசு என்பது நாட்டிலே கிடையாது. ஓரிருவர் அகப்பட்டுக் கொள்வார்கள் தப்பித் தவறி. அவர்கள் படுக்கும்போது ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். இது நம்மை விட்டுப் போகிறதே, என்ன பண்ணலாம் என்று நிலச்சுவான்தாரர்கள் கஷ்டப்பட்டு இஷ்டப்பட்டு குத்தகைதாரர்களுக்கு எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். நங்கவரம் பண்ணை போல்தான் ஐயம்பாளையம் பண்ணையைப் பொறுத்தவரையிலும் கூட குத்தகைதாரர்களுக்கே எழுதி வைத்துவிட்டார்கள். அதற்கு மேல் மிச்சப்பட்ட நிலங்களைத் தர்மம் செய்தார்கள். அந்தக் காலத்திலே தர்மம் பண்ணும்போது என்ன பண்ணுவார்கள். தாவர சொத்து, சங்கம சொத்து என்று சொல்வார்கள். தாவர சொத்தை எழுதி வைத்தால் எப்போதும் பயன் அடைய முடியும். தர்மத்தை சரியானபடி நிலைநாட்ட முடியும். அந்த நோக்கத்தில் எழுதி வைத்த நிலச்சுவான்தார்களும் உண்டு. அதாவது நம்முடைய நிலத்தை நாமே சாகுபடி செய்துகொண்டு தர்மத்திற்கு எழுதி வைத்து பயன் அடையக் கூடிய நிலச்சுவான்தாரர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒன்றும் தப்பு இல்லை. இரண்டு வகையான நபர்களும் உண்டு. தானே அனுபவித்து நிலங்களைச் சாகுபடி செய்பவர்கள் என்று உண்டு. அந்த தர்மம் நடந்துகொண்டு வருகிறது. இல்லை என்று சொல்ல முடியாது.

199(மே 11] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

11-40 மணி

இந்த பினாமி நிலங்கள் என்பனவற்றைப் பொறுத்தவரையில் உச்சவரம்பு என்ற அடிப்படையில் குழுக்கள் அதற்காகப் போடு கிறார்கள். டெபுட்டி கலெக்டர், யாருக்குக்-கொடுக்கச் சொல் கிறார்களோ அவர்களுக்கு விற்கலாம். அரை குறையாக இருக்கும் போதுகூட மாற்றலாம். எனவே சமூக சேவகர்கள் என்று போடும் போது நாம் ஜாக்கிரதையாகப் போடவேண்டும். சமூக விரோதி என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த மாதிரி சமூக சேவகர்கள் இந்த நாட்டிலே எப்படி இருக்கிறார்கள், என்ன நடக்கிறது என்று அரசுக்கு நன்றாகத் தெரியும். இதைக் கண்டுபிடிக்கிற கமிட்டி இருக்கிறதே அதை ஜாக்கிரதையாகப் போடவேண்டும். அதிலே ஊழல் நடந்தது என்று சொன்னால்—ஏற்கெனவே நடந்தது ஒரு ஊழல், அதுபோல் இது இரண்டாவது ஊழலாகப் போய்விடக் கூடாது. ''செகண்டு ஊழல்''—இந்த பினாமி நிலத்தைக் கண்டுபிடிப்பதிலே ஒரு ஊழல் இருக்கிறது என்பதற்கு மறுபடியும் ஒரு சட்டத்தைக் கொண்டு வரக்கூடிய ஒரு கட்டம் ஏற்படாமல் இந்தக் கட்டத்திலே நிர்ணயிப்பது—அதை நேரடி யாகக் கண்டு பிடிப்பதிலே ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இருந்தாலும் பினாமி நிலங்களை தர்ம ஸ்தாபனங்களுக்கு, கோவில்களுக்கு எழுதி வைத்திருப் பார்கள். இதைத் தவிர்த்து, எனது பகுதியிலே ஈரோட்டுக்குப் பக்கத்தில் பள்ளிக்கோட்டை பட்டயதாரர்—மாடுகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; காங்கேயம் மாட்டைப் பற்றி—அது வெயிலிலே காயும்; மழையிலே போய்க் கொண்டிருக்கும். அதை நாம் வாங்கிக் கொண்டு வந்து, இரண்டு நாட்கள் நம் வீட்டில் கட்டிவைத்தால், இளைத்துப் போகும். அதுமாதிரி, ஒரு பெரிய ''பட்டயக்காரர்'' அவருக்கு 200 ஏக்கரா ஒதுக்கியிருந்தார்கள். அன்றைக்கு இருந்த நிலைமை. இப்போது 15 ஏக்கரா கொண்டு வந்தபோது, அந்தச் சட்டம் எல்லாம் அடிபட்டுப் போய் விட்டது. காளிங்கராயனைச் சேர்ந்த எங்களுக்கு உள்ளதிலே 80 சென்டு மேற்கொண்ட நிலம் ''ஸ்டேண்டார்டு ஏக்கரா'' என்பதிலே நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்போம். 75 ஏக்கரா, 80 ஏக்கரா மேற்கொண்டது ''ஸ்டேண்டர்டு ஏக்கரா'' அதுமாதிரி ஒரு சொச்சம், இரண்டு சொச்சம் என்று விரிவு விரிவாகப் போகும்போது, ஏரி, குளம், பாசனம், பம்பு செட் பாசனம் (மணியடிக்கப் பெற்றது). இப்படி கொடுத்தால் என்ன சார்? இது பெரிய சட்டம்; நிலத்தைப் பொறுத்த சட்டம், வெகுபேரைப் பாதிக்கக் கூடிய சட்டம், வெகுபேருக்கு நன்மை செய்யக்கூடிய சட்டம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது திரு. தீட்சிதர் அவர்கள் இதை ஆதரிக்கிறாரா அல்லது எதிர்க் கிறாரா என்பதுதான்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் கொண்டுவந்தால் அதை ஆதரித்து நான், பேசுவேனே தவிர, அதை எதிர்த்துப் பேசுகிற வழக்கமே என்னிடம் இல்லை. ஏனென்றால், நிறைய பேர் என்னை ஏன் ஆதரித்து பேசுகிறாய், உனக்கு என்ன நன்மை என்று கேட்டால் நன்மை தீமையைப் பற்றி இல்லை ; கலைஞர் அவர்கள் ஒரு தவறுதலுக்கு போக மாட்டார் என்ற மனப்பக்குவம், இன்றைக்கு ஏற்படவில்லை ; வெகு நாட்களுக்கு முன்பே ஏற்பட்ட ஒன்று. ஆகையினால், எதுவாக இருந்தாலும் சொல்லித்தானே ஆக வேண்டும். ஆதரிக்கலாம் என்று சொல்லும்போது, இந்த சிமெண்ட் ரோடா? தார் ரோடா? மெகன்டம் ரோடா? என்றெல்லாம் பார்க்கின்றபோது, ஏன் சார், இது மெகன்டம் ரோடாக இருக்கிறதே, இதன் மேல் தார் போட்டுத்தானே இதன் மேல் நடக்க வேண்டும் : இல்லை, இதன் மேல் சிமெண்ட் போட்டுத்தான் நடக்க வேண்டியிருக்கும் என்று சொல்வது இல்லையா? ஆதனால்தான் இதையும் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட கட்டத்திலே, கலைஞர் அவர்கள் இந்த மாதிரி சட்டத்தைக் கொண்டு வந்தால் நான் ஆதரிக்கிறேன். இருந்தாலும், ஓட்டை உடைசலை வெளியே அடைக்கும்போது, சரியான முறையில் நல்லபடியாக அடைக்க வேண்டும் ; '' பிளாஸ்டர் '' போடும்போது ஒழுங்காகப் போட வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்தச் சட்டத்தை ஆதரித்து நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தின் முகப்புரையை—பொருளாதார நீதி, சமுதாய நீதி, அரசியல் நீதி அத்தனையும் 1950 ஆம் ஆண்டு எழுதப்பட்ட போதிலும், முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவையிலோ, முதல் பொதுத் தேர்தல் அமைக்கப்பட்டு பாராளுமன்றத்திலோ இந்திய அரசியல் சட்டப் பிரிவு 245-லிருந்து 249 வரை அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை பயன்படுத்தி, அன்றைக்கே இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வந்திருக்கலாம். நம்முடைய மாநிலத்தைத் தவிர, இன்னும் ஓரிரு மாநிலங்களின் ஒப்புதலைப் பெற்று, இங்கே சட்டம் வருவதற்கு முன்பு, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. என்ன காரணமோ தெரியவில்லை—நம்முடைய மாநிலத்தில் ஒப்புதலை அன்றைக்கு—அந்தக் காலத்தில், இப்போது இல்லை—1952-லிருந்து 1967 வரை என்ன காரணத்தினாலோ அந்த ஒப்புதலைத் தரவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் உச்ச நீதி மன்றத்தில், கோலக்நாத் வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்ட போது,

1990 மே 11] [திரு. பி. எச். பாண்டியன்]

அந்தத் தீர்ப்பை It was a Judgement by Prolatarians என்று அன்றைக்கே எல்லோரும் எழுதினார்கள். அப்படி அன்றைக்கு எல்லா துறையிலும் வசதியுள்ளவர்கள், நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள், அவர்களுடைய பாதுகாப்புக்காக நம்முடைய அரசியலமைப்பு பாதுகாப்பாக அமைந்தது. ஆனால் இங்கே 1961 ஆவது ஆண்டு சட்டம் நிறைவேற்றிய பிறகு, பல்வேறு பெயர் மாற்றம் செய்திருப்பதாகவும், அதனால் சட்டத் திருத்தம் மட்டுமே நிறைவேற்றப்படுவதாகவும், முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இதுபோன்ற சட்டங்களில்—நான் சாதாரணமாக சட்டத்தை முதலில் பார்க்கும்போது, எதிர்ப்பு உணர்ச்சியோடுதான் பார்ப்பது வழக்கம்—ஆனால், இந்தச் சட்டத்தை நான் பார்க்கும்போது, இது உண்மையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும்; மக்களுக்கு இந்தச் சட்டம் முழுமையாகப் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, இதை நான் என்னுடைய சட்ட எதிர்ப்பு சக்தியோடு பார்க்கவில்லை.

11-45 மணி

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

காரணம், நாம் இதிலும் பேசி, இதனால் பலபேர் வெளியில் இருந்து பயனடைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான், முழுமையாக, இதைச் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சட்டம், என்னைப் பொறுத்தவரையில் முழுமையானது, அரசியல் சட்டத்திற்குட்பட்டது. ஜீவாதார உரிமையைப் பறிக்கக்கூடியதாக இருந்தாலும் கூட, மாநிலங்களின் வழிகாட்டுகின்ற நெறிமுறைகளுக்குட்பட்ட சட்டமாகும். There should be a harmonious relationship between the Directive Principles and the fundamental rights என்று எழுதப்பட்டிருக்கின்ற காரணத்தால், Golaknath வழக்கின் தீர்ப்பு Kesavanandha Bharathi வழக்கில், over-rule ஆன பிறகு எல்லோரும் ஒட்டுமொத்தமாக இதுபோன்ற கருத்துக்களை ஆதரித்த காரணத்தால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமேயானால், உண்மையிலேயே ஏழை மக்களுக்கு கிடைக்கவேண்டிய பங்கு, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நிலம் நிச்சயமாகப் போய்ச் சேரும். ஆனால் 1958-லிருந்து 1960 வரை 3 ஆண்டுக் காலத்தில் யார் யாருடைய பெயர்களில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் அங்கே போய் விசாரித்தும் கூட, அரசாங்கமே அதை விசாரித்து இந்த அவைக்கு ஒரு குறிப்பாகவும் பிற்காலத்தில் தரவேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நாம் என்னதான் இங்கே சட்டத்தை நிறைவேற்றி அங்கே அனுப்பினாலும், அது நிறைவேற்றப்படுமா; அமல் படுத்தப்படுமா, அப்படி அமல் படுத்தப்படும்போது, பல்வேறு

சிக்கல்கள் உண்டாகும். ஒருவேளை நேற்றையதினம் நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல, எதற்கெடுத்தாலும், சுப்ரீம் கோர்ட்டுக்கு இதுபோன்ற சட்டங்களை எடுத்துச் செல்லக் கூடியவர்கள், இதையும் எடுத்துக்கொண்டு அங்கே போய் பத்தாண்டுக் காலம் நிலுவையில் வைத்துவிடக் கூடாது என்ற சந்தேகம்தான் எனக்கு எழுந்திருக்கிறது. காரணம் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் ஜீவாதார உரிமை பாதிக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்வார்கள். அங்கேயும் விசாரித்து தீர்ப்பு சொல்லுகிறோம் என்று சொல்லி, ஒருவேளை பத்தாண்டுக் காலம் அங்கே கிடப்பில் போட்டு விடக்கூடாது என்ற ஐயத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு காலையில் வந்தவுடன், நான் முதல்வர் அவர்களிடம் ஒரு கருத்தைச் சொல்லவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். நேற்றைய தினம் கீழ வெண்மணி வழக்கைப் பற்றி இங்கே சொல்லும் போது, 13 ஆண்டுக் காலம் சுப்ரீம் கோர்ட்டில் அந்த வழக்கு நிலுவையில் இருப்பதாகச் சொன்னார்கள். நாள்தோறும் எப்படி நமது சட்டப் பேரவையில் 10 மணிக்குமேல் ஜீரோ அவர் என்று இருக்கிறதோ, எப்படி அவசரமான பிரச்சினைகள் அப்போது எழுப்பப்படுகிறதோ, அதேபோல நாள்தோறும் காலை 10-30 மணிக்கு சுப்ரீம் கோர்ட்டில் மக்களோ அல்லது வக்கீல் மூலமோ நேரடியாக சுப்ரீம் கோர்ட்டில், நீதிபதியிடம் சென்று இந்த வழக்கு அவசரம், இதனால் இப்படி பாதிப்பு ஏற்படும் என்று நேரடியாகச் சொன்னால், அவர்கள் உடனே தேதி கொடுக்கிறார்கள். நாள்தோறும் 10-30 மணிக்கு மென்ஷனிங். நேரடியாக பொதுமக்கள் சொல்லலாம். இதனால், இத்தனை கோடி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது, நஷ்டம் ஏற்படுகிறது என்று அங்கே தலைமை நீதி மன்றத்தில் நேரடியாக முறையிடலாம். இதற்கு தேதி தாருங்கள். காலம் தாழ்த்தினால் தமிழகத்தில் உள்ள மக்களுக்கு நியாயம் கிடைக்காது என்று எடுத்துச் சொல்லப்படுமேயானால் தேதி கிடைக்கும். உங்களுடைய சட்டத்துறை அதிகாரிகளை வைத்து, ஒரு நாள், இரண்டு நாள், ஏன் ஒரு வாரம்கூட, இருக்கக்கூடிய அத்தனை வழக்குகளையும் குறித்து நாள் கேட்கும்படி நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சில நேரங்களில் அரசியல் சட்ட பென்ச் இதை விசாரிக்க வேண்டுமென்று சொல்வார்கள். அது எளிதில் கூட்ட முடியாது. ஐந்து நீதிபதிகள் தேவை. அப்பேர்ப்பட்ட நிலையிலும் கூட நாம் மாறி, மாறி அறிவுறுத்தினால்தான், இதுபோன்ற சட்டத்திற்கு முழுமையான ஒரு தீர்வைப் பெற முடியும். ஆகவே, நான் இங்கே தெரிவித்துக் கொள்வதெல்லாம், இந்தச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப் படவேண்டும். இச்சட்டம் தடை பட்டுப்போய் விடக்கூடாது. தடை போட முடியாத சட்டம்தான். அரசியல் சட்டத்திற்குட்பட்டதுதான் இந்தச் சட்டம். மாநிலங்களில் வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றிக் கொண்டு வந்த சட்டம்தான். இருந்தாலும் முட்டுக்கட்டைக்கு யாராவது வருவாாகள் என்ப

1990 மே 11] [திரு. பி. எச். பாண்டியன்]

தால் இங்கே தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு இந்தச் சட்டத்தின் மூல மாக கிடைக்கும் என்று நம்புகிறேன். எங்களுக்கு வீடு கட்ட நிலம் தாருங்கள், குடிசை போட நிலம் தாருங்கள், 2 சென்ட் தாருங் கள், 3 சென்ட் தாருங்கள் என்று எல்லா கிராமங்களிலும் ஏழை எளிய மக்கள், விவசாய மக்கள், சாதாரணத் தொழிலாளர்கள், அரிசன மக்கள் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பட்டா தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் பட்டாதாரர்கள் எவ்வளவு அதிகமாக நிலம் வைத்திருக்கிறார்களோ அவைகளை யெல்லாம் கைப்பற்றி ஏழைகளுக்கு வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஒரே ஒரு திருத்தம், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடக்ஷன் ஆக்ட் ஆனாலும், இங்கேகொண்டு வந்து இருக் கக்கூடிய சட்டமானாலும், இங்கே இருக்கக்கூடிய சட்டத்தில் லேண்ட் லார்ட்—இங்கே வந்திருக்கக் கூடிய திருத்தத்தில் லேண்ட் என்ற ஹோல்டாஸ் என்றிருக்கிறது. லேண்ட் லார்ட் வார்த்தை யையே எடுக்க வேண்டும். காரணம், நாம் நிலத்தைபங்கு போட்டுக் கொண்டிருக்கிறோம். ஏழை எளிய மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே லேண்ட் லார்ட் என்ற நிலையை மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை முழுமையாக ஆதரித்து, இந்தச் சட்டத்தை யாராவது எதிர்த்து நீதிமன்றம் சென்றாலும்கூட, அங்கேயும் நான் எதிர்த்து நிற்பேன் என்று தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

10—50 மணி

திரு. கோ. வீரையன் ; மாண்புமிகு பேரவை மாற்று தலை வரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள் என்று குறிப்பிட்டார் கள். இப்படிப்பட்ட நில உச்சவரம்புச் சட்டங்கள், நிலம் சம்பந்தப்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், அதை அரசியல் சட்டம் 9 ஆம் அட்டவணையில் சேர்த்தால், அந்தச் சட்டம் சம்பந்தமாக நீதி மன்றத்திற்குப் போக முடியாதென்று இப்போது நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேறி இருக்கிறது. அப்படி இருக்கும்போது இது எப்படி நீதிமன்றத்திற்குப் போகும்?

திரு. பி. எச். பாண்டியன் ; மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, அரசியல் சட்டம் 32-வது பிரிவானாலும் —அது சுப்ரீம் கோர்ட் அதிகாரம், உயர்நீதிமன்றத்தில் 226-வது பிரிவின் கீழ் ரிட் மனு போட்டு, பிரேரேகேடிவ் ரைட், ஜீவாதார உரிமை பாதிக்கப்படுகிறதென்று கூறினால், அந்த ஷெட்யூலில் வருகிறதா என்று பார்க்க வேண்டுமென்று அந்த ரிட்டை ஏற்றுக் கொள்வார்கள். அதை விசாரிக்க 10 ஆண்டுகளாகும். சட்டப் பேரவையில்கூட உரிமைப் பிரச்சினை இருக்கிறதா என்பதைப்

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 மே 1

பார்ப்போம், இருந்தால் We will step out என்று சொல்லுகிறார்கள். எனவே அதைப் பார்க்க நீதி மன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி ; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நிலச் சீர்திருத்த, நில உச்சவரம்புச் சட்டத்தை ஆதரித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முழு மன தோடு வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் முன்னுரையிலே கடந்த காலத்தில் நில உச்சவரம்புச் சட்டம் வந்தபோது, 1958-61க்கு இடைப்பட்ட காலத்தில் எந்த அள வுக்கு மிச்ச நிலங்கள் எடுக்கப்பட்டு ஏழை எளிய விவசாயிகளுக்கு வினியோகித்ததில் எந்த அளவுக்கு தவறு நடந்திருக்கிறதென் பதைக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னால் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்து, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வந்து, 1 லட்சத்து 36 ஆயிரம் ஏக்கர்கள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அந்த நேரத்தில் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தபோது, அந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய ஓட்டைகளைப் பயன்படுத்தி, அன்றைக்கு இருந்த நிலப் பிரபுக்கள், தஞ்சை மாவட்டத்திலும், தமிழகத்திலும், பல்வேறு பினாமிகளின் பெயர்களிலே நிலங் களை எழுதி வைத்து ஒரு மோசடி செய்தார்கள். குறிப்பாக கோழிப் பண்ணைக்கு எழுதி வைத்தார்கள்: மாட்டுப் பண்ணைக்கு எழுதி வைத்தார்கள்: பல்வேறு பினாமிகளின் பெயர்களில் எழுதி வைத்து மோசடி செய்தார்கள். அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சி சட்டம் கொண்டு வந்தபோது, மிராசு தாரர்களுக்குச் சாதகமாக காரியங்களைச் செய்வதற்காக சட் டத்தைக் கொண்டு வந்ததால், அந்த அளவில் முழுமையாக அது நிறைவேற்றப்படவில்லை. அதற்குப் பின்னாலும்கூட, அந்தச் சட்டம் வந்த பின்னாலும்கூட, இன்னும்கூட பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள், 1 லட்சத்து 74 ஆயிரம் ஏக்கர் நிலம் எடுத்த பிறகும்கூட, தஞ்சை மாவட்டத்தில் பினாமியாக எழுதி வைக்கப்பட்டுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த போதும், தனியாக இருக்கும்போதும் தொடர்ந்து அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டு, பல்வேறு வழக்குகளில் ஈடுபட்டு, பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி இருக்கிறது. தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் என்றால், நிலப் பறிக்காரர்கள் என்று பட்டம் சூட்டும் அளவுக்கு அந்தப் போராட்டங்களை நாங்கள் நடத்தி இருக்கிறோம். இன்றைக்கு இந்தச் சட்டம் வருந்திருப்ப பதை எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்தி, யாரும் தப்பாத அளவுக்கு, அரசு பாதுகாக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

11-55 மணி

அதுபோன்றுதான் இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அந்த நிலச் சீர்திருத்தத்தின் மூலம் இன்னும் தஞ்சை மாவட்டத்தில் நிலத்தின் பேரில் பினாமியாக எழுதி வைத்து இருக்கக்கூடிய நபர்கள் டில்லியிலே இருக்கிறார்கள்: அமெரிக்காவிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பினாமியாக எழுதி வைக்கப்பட்டு இருக்கிற நபர்களின் பேரே இல்லாமல் கூட நிலங்களை எழுதி வைத்து இருக்கக்கூடிய அந்தப் பட்டியல் எங்களிடத்திலே இருக்கின்றது. இதன்மூலம் பாபநாசம், சுந்தரபெருமாள் கோவில் போன்ற இடங்களில் எல்லாம் நாங்கள் கடந்த காலத்திலே போராட்டம் நடத்தி தஞ்சை மாவட்டத்தில் 500 பேருக்கு மேற்பட்டவர்கள் வழக்கிலே சம்பந்தப்பட்டு, அநேகமாக சென்ற மாதம் வரையிலும் நாங்கள் கோர்ட்டுக்கு சென்றுவந்து கொண்டு இருக்கிறோம். தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே பல முறை சந்தித்து நாங்கள் கருத்துக்களை கூறி இருக்கிறோம். சமீபத்திலே அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டதாக எங்களுடைய மாவட்டத்திலே இருந்து எங்களுக்கு தகவல் வந்து இருக்கிறது. உண்மையிலேயே அந்த வழக்கு வாபஸ் வாங்குவதற்கு உரியது தான். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கொண்டு வந்து இருக்கிற தமிழக முதல்வர் அவர்களை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. அப்படிப்பட்ட அந்த வழக்கிலே இருந்தவர்களை விடுவித்து இருக்கிறார்கள்.

இன்னும் ஒன்று கூடச் சொல்கிறார்கள். அந்தச் சட்டத்திலே பினாமி நிலங்களைக் கண்டறிவதற்கு ஒரு குழு அமைப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவிலேயே யார் யாரை உள்ளடக்கி அமைக்கப்பட இருப்பதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால், ஒன்று தாசில்தார், இரண்டாவது ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர், மூன்றாவது சமூக அமைப்பாளர் ஆகிய மூன்று பேரைக் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் கடந்த காலத்திலே விவசாயத் தொழிலாளர்கள் பினாமி நிலங்களுக்காகப் போராடிக்கொண்டிருந்த — கம்யூனிஸ்ட் கட்சி விவசாயத் தொழிலாளர்கள் பலபேர்களிடம் அந்த உண்மையான நிலங்களைக் கண்டறிவதற்கு அதற்கான வாய்ப்புகள், விவரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்த நிலங்களுக்காகப் போராடிக் கொண்டிருக்ககூடிய அந்த நபர்கள் அந்தக் குழுவிலே இடம்பெற வேண்டும். இல்லையென்று சொன்னால், இப்படிப்பட்ட சமூக அமைப்பாளர், தாசில்தார், ஆதி திராவிடர்கள் யாராவது அரசாங்கத்தின் சார்பிலே அந்தக் குழுவிலே இடம் பெறுவார்கள் என்று சொன்னால், முழுமையான விவரங்களை அவர்களிடமிருந்து பெற முடியாது. அதிலேயும் தப்பிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். எனவே, அதற்காக போராடி இருக்கிற அந்த விவசாயத் தொழிலாளர்கள் அந்தக் குழுவிலே நியமிக்கப்பட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. பழனிச்சாமி] [1990 மே 11

பினாமி நிலங்களை முழுமையாக பல்வேறு சிறு விவசாயிகள் வளைச்சு வாங்கி இருக்கிறார்கள். இது பற்றி உண்மையாகவே இதிலே அரசால் சொல்லப்பட்டு இருக்கிறது. விலைக்கு அளிக்கப் பட்டு இருந்தாலும் – ஆனால் விலைக்கு விற்றதாக மோசடியாக பல்வேறு இடங்களில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட நிலங் களைத் தான் கையிலே சாகுபடி செய்துகொண்டு இருக்கக்கூடிய நிலைமைகள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. எனவே நியாயமாக இருந்தால் அந்த நிலங்களை கையகப்படுத்தி உண்மை யாக இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

[redacted]

*திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தச் சட்டத்தை வரவேற்கின்ற நேரத்தில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகின்றேன். முதலாவதாக இந்தச் சட்டமானது அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் கூட அன்றைக்கே நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்பட வேண்டும் என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப் பட்டு இருக்கின்றது. ஆனாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் முதன் முதலாக 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அமல்படுத்தப்பட்டு இருக்கின் றது. அப்படி அமல்படுத்தப்பட்ட நேரத்தில் கூட அன்றைய தினம் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மன்றத்தில் சொல்லி இருக்கின்றார்கள். இது நில உச்சவரம்புச் சட்டமல்ல; இது நில மிச்சவரம்பு சட்டம் என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அதற்குப் பதில் சொல்கின்ற அள விலே அன்றைக்கு இதே மன்றத்தில் சொல்லி இருக்கின்றார்கள். 'நாங்கள் பிரிக்க வேண்டும் என்று நினைத்தோம்; அது பிரிந்து விட்டது; அது தான் உண்மை' என்று சொல்லி இருக்கின்றார் கள். அதோடு மட்டுமல்லாமல் மற்றொரு உறுப்பினர் சொல்லி இருக்கிறார், நிலம் எப்படியோ பிரிந்துவிட்டது; ஆதலால் மிச்ச வரம்போ, உச்சவரம்போ—அதைப் பற்றிப் பேசக் கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்த நேரத்தில் கூட சொன்னார்கள். சபாபதி படத்திலே வந்த ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த பண்ணையார் தன்னுடைய வேலை ஆளை அழைத்து, சோடா உடைத்துக் கொண்டு வா என்று சொன்ன உடன், அவன் வீட்டு தாழ்வாரத்திலே போய் அந்த சோடாவை உடைத்து, நான் உடைத்து வந்து விட்டேன் என்று சொல்லி இருக்கின்றார். நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று சொன்ன நேரத்தில் அந்த சோடாவை உடைத்த வேலை ஆளைப்

1990 மே 11] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

போன்றுதான் அன்றையதினம் நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள் என்று இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அதோடுமட்டுமல்லாமல், அன்றைக்கு அவர்கள் பேசும்போது சொல்லி இருக்கிறார்கள். அசல் மசோதாவிலே இருந்த ஒருசில நல்ல விஷயத்தைக் கூட, திருத்தம் என்ற பெயராலே பொறுப்புக் குழுவிலே சேதப்படுத்தப்பட்டு இருக்கின்றது; சீரழிக்கப்பட்டு இருக்கின்றது என்று சொல்லி இருக்கின்றார்கள், ஆகவே தான் அந்த மசோதவை ஏட்டு சர்க்கரை, தாகத்தைத் தீர்க்காத தண்ணீர்; வரும் பசிக்கு உதவாத அன்னம் என்று விமர்சித்து இருக்கின்றார்கள்.

12-00 மணி

அதே நேரத்தில், இதே மன்றத்தைச் சேர்ந்திருக்கின்ற அன்றைக்கு உறுப்பினராக இருந்த சங்கரையா போன்றவர் களெல்லாம், இந்தச் சட்டமானது கொண்டு வந்ததன் நோக்கமே அடிபட்டுவிட்டது என்ற வகையிலே பல்வேறு கருத்துக்ளை யெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அன்றைக்கு உறுப்பினராக இருந்த முன்னாள் அமைச்சர் மாண்புமிகு கோவிந்த சாமி அவர்கள்கூட மிகத் தெளிவாகச் சொன்னார்கள், புலி வருகிறது, புலி வருகிறது என்று பார்த்தோம்; ஆனால் அந்தப் புலி யார் மீது பாய்கிறது என்று பார்த்தோம்; யார் மீதும் பாய வில்லை, அது காகிதப் புலியாகத்தான் அமைந்திருக்கிறது என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த அளவிலே அந்தச் சட்டமானது யாருக்குமே உதவாத நிலையிலேதான் அன்றைக்குப் பார்த்திருக்கின்றோம். முதலிலே சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில் சொல்லப்பட்டது, ரெஜிஸ்தர் செய்யப்படுவதற்கு முன்பு யார் அதை ரெஜிஸ்தர் செய்திருந்தாலும் சரி, அது ரெஜிஸ்தர் செய்யப்பட்ட நாள் முதற்கொண்டு அமலுக்கு வரும் என்று சொன்னார்கள். ஆனால், பொறுக்குக் குழுவுக்கெல்லாம் சென்று வந்த பிறகு அதில் சொல் லப்பட்டது, 6-4-1960-க்கு முன்பு ரெஜிஸ்ட்ரேஷன் பத்தி ரத்தை வாங்கியிருந்தால், அதிலே எழுதியிருந்தாலும் சரி, பின் னால் ரெஜிஸ்தர் செய்திருந்தாலும் செல்லும் என்று சொல்லி அந்தச் சட்டத்தின்படி எந்தவிதமான ஒரு பயனும் இல்லாத நிலைமைகளை அன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நான் ஒன்றை மட்டும் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். 1960-ம் ஆண்டு முதற்கொண்டு 1967 ஆம் ஆண்டு வரையிலே உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டவை 24,194 ஏக்கர் நிலங்கள். அதில் அரசு அன்றைக்கு கையகப்படுத்துவதற் காக உத்தரவுகள் வழங்கியது 16,330 ஏக்கர்தான். ஆனால்

யாருக்கும் அன்றைக்கு அரசாங்கம் ஒப்படை செய்யவில்லை. அதே நேரத்தில் 31—3—1987 வரையிலே உச்சவரம்பு என்று அறிவிக்கப்பட்டவை 1,66,757 ஏக்கர் நிலங்கள். கோர்ட்டில் ஸ்டே என்ற முறையிலே அன்றைக்கு நிலுவையில் இருந்த ஏக்கர்கள் 9,365 ஏக்கர் நிலங்கள். நிலம் ஒப்படைக்கப்பட்டவைகள் 1,38,292 ஏக்கர் நிலங்கள். அதிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 43,324 பேர்களுக்கு 47,946 ஏக்கர்களும், அதே போன்று எஸ்.டி.யைப் பொறுத்த வரையிலும் 84 பேர்களுக்கு 127 ஏக்கர்களும், மற்றவர்களுக்கு 54,377 பேர்களுக்கு 76,202 ஏக்கர் என்றும் இன்றைக்குக் குறிப்புகள் இருக்கின்றன.

நான் ஏன் அதைச் சொல்கிறேன் என்றால், 1960 ஆம் ஆண்டு இந்த நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்த நேரத்திலேயெல்லாம் சொல்லப்பட்டதெல்லாம், 2,80,000 ஏக்கர்கள் உபரியாகக் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் நான் பார்க்கின்ற வரையிலே 1967 ஆம் ஆண்டு வரையிலே சுமார் 24,000 ஏக்கர்கள்தான் உபரியாகக் கிடைத்தது என்று சொன்னால் மிச்சம் எதிர்பார்க்கப்பட்ட நிலங்களையெல்லாம் பினாமியாக நிலப் பரிமாற்றம் செய்ததன் காரணமாக அவைகள் அரசுக்குக் கிடைக்கவில்லை. யாருக்குச் சென்று கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குச் சென்று அடையவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு உள்ள நிலைமையெல்லாம் இன்றைக்குப் பல்வேறு இனங்களுக்கு விலக்குகளை நாம் அளித்திருக்கிறோம், இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட 1960 ஆம் ஆண்டு 17 விதமான விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்குப் பிறகு பல விலக்குகள் ரத்து செய்யப்பட்ட இந்த அளவிலே-17 விலக்குகள் அன்றைக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும் பின்னால் ஒருசில விலக்குகளை நாம் ரத்து செய்திருக்கிறோம்.

இந்த மன்றம் கூடிய நேரத்தில் 29—3—1990 அன்று ஒரு புதிய சட்டம் இந்த மன்றத்திலே அன்றைக்கு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டமானது இன்றைக்கு ஏனோ விவாதத்திற்கு வரவில்லை. அந்த விலக்குகள் ரத்து செய்கின்ற அளவிற்கு மாந்தோப்புக்கும், பாக்குக்கும், அதே போன்று விறகுக்காக விடப்பட்டிருக்கின்ற அந்த விலக்குகளை ரத்து செய்வதற்காக அந்தச் சட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இன்றைக்கு அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதையும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கருத்திலே கொண்டு, இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு எப்படிப் பினாமிகள் செய்யப்பட்டது என்பதற்கு ஒரேயொரு உதாரணத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்திருக்கின்ற ஒரு இடத்திலே 1958 ஆம் ஆண்டு பொலம்பாக்கம் என்ற ஜமீன்—அந்த ஜமீனுடைய மைனர் பிள்ளையாக இருப்பவர் பாஸ்கரன் என்பவர். அவர் தன்னுடைய அண்ணனுக்குப் பவர் ஏஜண்ட் என்று சொல்லி கிருஷ்ணமூர்த்தியை பவர் ஏஜண்ட் என்று போட்டிருக்கிறார். அந்தக் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தத்துவமேதையாக விளங்கிய டி. எம். பி. மகாதேவன் பிள்ளைக்கு நிலத்தை விற்பனை செய்கிறார். அந்த டி. எம். பி. மகாதேவன் பிள்ளைக்கு யார் யார் பவர் ஏஜண்ட்என்று சொன்னால் அதே கிருஷ்ணமூர்த்திதான். விற்றவருக்கும் பவர் ஏஜண்ட் அவர்தான்; வாங்கியவருக்கும் பவர் ஏஜண்ட் அவர்தான் என்ற வகையிலே இப்படிப்பட்ட பல பினாமி மாற்றங்கள் அன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.

அதேபோன்று விழுதமங்கலம் என்ற கிராமத்திலே இன்றைக்கு நில உச்சவரம்புச் சட்டத்திலே 75 ஏக்கரை எடுத்திருக்கிறார்கள். ஆனால் எடுக்கப்பட்ட அந்த நிலமானது அவருடைய பினாமிகளுக்கே வழங்கப்பட்டிருக்கிறது.

12-05 மணி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதற்கு பிறகு நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தபிறகு, 18–6–1981 அன்று ஆத்தரைஸ்ட் ஆபிசர் சொல்லி இருக்கிறார். ஆம், இது உண்மைதான், நாங்கள் அதை பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லி, இன்றைக்கு அந்த நிலைமைகளை எல்லாம் ரத்து செய்திருக்கிறார்கள். இப்படி நாம் நிலத்தை யாருக்குக் கொடுத்தாலும், அங்கே இருக்கிற மிராசுதாரர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, தங்களுடைய பினாமிகளுக்கே தரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால்தான் இதையெல்லாம் நான் சொல்கிறேன். இன்றைக்கு நீங்கள் போட்டிருக்கிற குழுவில் நல்லவர்களை போடவேண்டும். அதேநேரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மக்கள் பிரதிநிதிகளை அதிலே போட்டு, நல்லமுறையில் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

1980 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்தில் கொண்டு வந்த சட்டத்தைத் தான் நீங்கள் இன்றைக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். அவரால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை நீங்கள் நல்லமுறையில் செயல்படுத்துகிற அளவிற்கு காரியங்களை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு இருக்கிற ஒரு சில விலக்குகளை ரத்து செய்கிற அளவிற்கு செய்து, மேலும் அதிகமான நிலங்களை கைப்பற்றும்

அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவு நிலங்கள் கிடைக்கும், எவ்வளவு எதிர்ப்பார்க்கிறோம் என்ற விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட திருத்தத்தை வரவேற்று, விடைபெறு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே அவையில் வைக்கப்பட்ட சட்டமுன்வடிவை அநேகமாக எல்லோரும் ஆதரித்து, எல்லா கட்சிகளின் சார்பிலும் தங்களுடைய கருத்துக்களை வழங்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். நண்பர் பி. எச். பாண்டியன் அவர்கள் இந்தச் சட்டம் அரசியல் சட்டத்தின்கீழ் நிச்சயமாகச் செல்லு படியாகும் என்ற கருத்தைத் தெரிவித்ததோடு, இதைக் குந்தகப் படுத்த யாராவது நீதிமன்றங்களுக்குச் செல்வார்களானால், அரசு உடனடியாக அந்த வழக்குகள் நடைபெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்; அதிலே ஓய்வற்ற, விடாமுயற்சி வேண்டுமென்ற சீரிய யோசனையை வழங்கி இருக்கிறார். அரசு வழக்கறிஞர்கள் மூலமாக இந்த அரசு மிகுந்த முன்னெச்சரிக்கை யோடு நடந்து, நீதி மன்றத் தாமதங்களால் சட்டம் நடை முறைக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன்.

நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே பேசும்போது, நான் இதே மன்றத்தில் உச்சவரம்புச் சட்டத்தைக் குறித்து அன்றைய காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சட்டம் எந்த அளவிற்கு வெறும் மிச்ச வரம்புச் சட்டமாகி விட்டது என்ற உண்மையை எடுத்து விளக்கியதை எல்லாம் இங்கே விரிவாகக் குறிப்பிட்டார். நானே அவைகளை எல்லாம் தேடிப் பிடித்துப் படிக்க வேண்டுமென்று இருந்தேன். அந்த என்னுடைய வேலையை சுலபமாக்கி — என்ன இருந்தாலும் நான் பேசும்போது, இந்த இயக்கத்தில் அப்போது இருந்தவர் — அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, நான் சொன்ன இந்த பழைய கருத்துக்கள் உள்ளத்தில் பசுமையாகப் பதிந்து இருந்த காரணத்தால், அப்போது கருணாநிதி சொன்னாரே, அதைத் தேடிப் பார்க்க வேண்டுமென்று தேடிப்பிடித்து, இங்கே மீண்டும் ஒருமுறை அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலே பதிய வைத்த மைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய நண்பர் திரு. உகமசந்த் அவர்களும் அன்றைக்கு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் எதிர்க்கட்சி வரிசையில் அன்றைய துணைத் தலைவராக நான் அமர்ந்திருந்தபோது எடுத்துச்சொன்ன கருத்துக்களை இங்கே ஒருமுறை மீண்டும் நினைவுபடுத்தி இருக்கிறார். அதற்காக அவருக்கும் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்போது அந்தத் துறைக்கு

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

அமைச்சராக இருந்த பெரியவர் திரு. மாணிக்கவேலு அவர்கள் நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்ன போது, இதைத்தான் சொன்னார். 'பிரிக்க வேண்டுமென்று சொன்னீர்கள், பிரித்து விட்டோம், அவ்வளவு தானே' என்றார். நிலங்கள் பிரிக்கப்பட வேண்டும், ஒருவரிடத்திலேயே இருக்கக் கூடாது — பிரிக்க வேண்டுமென்று சொன்னீர்கள், பிரித்துவிட்டோம் — அவ்வளவு தானே — என்று மிகச் சுலபமாக, அவருக்கே உரிய கொச்சைத் தமிழில், மழலைத் தமிழில் அன்றைக்குப் பதில் அளித்தார். எப்போதுமே அவர் அப்படித்தான் மிகச் சிக்கலான கேள்விகளைச் சமாளிப்பது வழக்கம். அதைப்போலவே அன்றைக்கும் அவர் பதில் அளித்தார். அப்போதே நான் சொன்னேன். உடைக்கச் சொன்னீர்கள், உடைத்து விட்டேன் என்று சபாபதி படத்தில் வேலைக்காரனாக வருகிற காளி என். ரத்தினம் சொல்வார். சோடாவை உடை என்று சொன்னதும் கீழே போட்டு உடைத்து விட்டு, உடைக்கச் சொன்னீர்கள் உடைத்து விட்டேன் என்று சொன்ன நகைச்சுவையைப் போல இருக்கிறது அமைச்சருடைய பதில் என்று குறிப்பிட்டேன். அதற்கெல்லாம் அவர் கோபித்துக் கொள்ள மாட்டார். அதையும் ஒரு நகைச்சுவையாக எடுத்துக் கொண்டு, அவரும் எங்களோடு சேர்ந்து சிரித்து மகிழ்ந்தார், அவ்வளவுதான்.

12-10 மணி

நான் இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம் அன்றைய தினம் வந்த உச்சவரம்புச் சட்டம் என்று இன்றைக்குச் சொல்லிக் கொள்வதற்கு ஒரே ஒரு பெருமை, அந்தச் சட்டத்திற்கு இருப்பது எது என்றால், எத்தனை திருத்தங்களைக் கொண்டு வந்தாலும், இது 1961 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட சட்டம் என்று சொல்லிக் கொள்கிற அந்த தலைப்புப் பெருமை ஒன்றே தவிர, அந்தச் சட்டத்திற்கு வேறு எந்தப் பெருமையும் கிடையாது. ஏன் என்றால் என்னுடைய நண்பர் திரு. கோ. வீரையன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இரண்டு லட்சம் ஏக்கரா அன்றைக்கு கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற விவசாயிகளுக்குத் தரப்படும் என்றெல்லாம் அப்போது காங்கிரஸ் ஆட்சியிலே உறுதி அளிக்கப்பட்டது. தரப்பட்டு இருக்கும். ஆனால் தரப்பட முடியாமல் போனதற்குக் காரணம், முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், பலரும் அந்தச் சட்டத்திலேயிருந்து அந்த இரண்டு ஆண்டுக்குள் மிகச் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டார்கள். அதன் காரணமாக அன்றைக்கு அறிவிக்கப்பட்ட நிலத்தினுடைய பரப்பளவு 10,467 ஏக்கராதான், உபரியாக அறிவிக்கப்பட்டது. இதில் ஒரு முக்கால் பகுதியாவது எடுத்து விநியோகிக்கப்பட்டதா என்றால், இல்லை. வெறும் 578 ஏக்கராதான் அன்றைக்கு உபரியாக எடுத்து விநியோகம் செய்யப்பட்டது.

ஆனால் கழக ஆட்சியிலே, 1970 ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்புச் சட்டத்தின்படி பல்வேறு விதிவிலக்குகள் எல்லாம் அகற்றப்பட்டு, அப்போது கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி, நான் முதலிலே என்னுடைய முன்னுரையிலே குறிப்பிட்டதைப் போல, 1,74,671 ஏக்கரா அறிவிக்கப்பட்டு, அதிலே இதுவரையிலே 1,36,776 ஏக்கரா வினியோகிக்கப்பட்டு இருக்கிறது. யார் யாருக்கு விநியோகிக்கப்பட்டு இருக்கிறது என்கிற அந்த எண்ணிக்கை கணக்குகளை எல்லாம் என்னுடைய முன்னுரையிலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். அன்றைக்குப் பல்வேறு நிலங் களுக்கு எல்லாம், கரும்புத் தோட்டம் என்றும், மேய்ச்சல் நிலம் என்றும், இவைகளுக்கு எல்லாம் கூட, அன்றைக்கு தரப்பட்ட விதிவிலக்குகள் எல்லாம், மீண்டும் கொண்டுவரப்பட்ட 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்புச் சட்டத்தில் அகற்றப்பட்டன. அப்படி அகற்றப்பட்டதிலே ஒன்றுதான் வடபாதிமங்கலத்திலே உள்ள அந்தக் கரும்புப் பண்ணை. அதை அரசே எடுத்துக் கொண்டு ஒரு கார்ப்பரேஷனை நியமித்தது. அதற்குப் பிறகு, அதிலே நஷ்டம் ஏற்பட்ட காரணத்தாலே கடந்த காலத்திலே இருந்த அரசு அந்தக் கார்ப்பரேஷனை நிறுத்த வேண்டிய நிலைக்கு ஆளானது. பிறகு கவர்னர் ஆட்சியிலே அந்த நிலங்கள் எல்லாம் விநியோகிக்கப்படும் என்று சொல்லி, ஒரு அதிக விலையை அதற்கு என்று குறிப்பிட்டு அறிவித்திருந்தார்கள். அதற்குள்ளாக இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அந்த அதிக விலையைக் குறைத்து மிகக் குறைவான விலைக்கு அந்த நிலங்கள் விற்கப்படும் என்று சொல்லி, மொத்தம் வழங்கப் படுகிற நிலம் 3,651 ஏக்கரிலே பயன்பெறுவோர் 4,803 பேர்கள் என்று அறுதியிட்டு அவர்களுடைய பெயர்கள் எல்லாம் குறிப் பிடப்பட்டு, ஆட்சேபணைகள் இருக்குமானால் தெரிவிக்கலாம் என்று ஆங்காங்குள்ள அதிகாரிகள், வட்ட ஆட்சியர் அலுவலங் களிலே அந்தப் பட்டியலை எல்லாம் வெளியிட்டு, நஞ்சை என்றால் முக்கால் ஏக்கராவும், புஞ்சை என்றால், 1½ ஏக்கராவும் தருகிற வகையில்—நாம் இந்தக் கூட்டத்தொடரிலே, நிதிநிலை அறிக்கை யிலே தெரிவித்தவாறு—வருகிற 27 ஆம் தேதி காலையிலே வட பாதிமங்கலத்திலே அந்த 4,803 பேர்களுக்கும் இந்த நிலப் பட்டாக்களை வழங்குகின்ற விழாவிலே கலந்து கொள்ள இருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இதை நான் சொல்வதற்குக் காரணம் இந்த அரசு ஏதோ மேம்போக்காக, அவர்கள் குறிப் பிட்டதைப்போல விளம்பரத்திற்காக இதைச் செய்யவில்லை. நாங்கள் தீவிரவாதிகள் என்று காட்டிக்கொள்வதற்காக அல்ல. எங்களுடைய, ஏன் அவர்களுடைய ரத்தத்தோடு ஊறிய ஒரு உணர்வு, ஊறியிருந்த உணர்வு, இங்கே இன்னமும் ஊறிக் கொண்டிருக்கிற உணர்வு (குறுக்கீடு), அவர் அதை மறுக்க எழுகிறார். இப்போதும் ஊறியுள்ள உணர்வு என்ற காரணத் தாலேதான், அந்தப் பெருங்காயம் இருந்த பாண்டம் என்பதற்கு அடையாளமாக வாசம் போகாமல் இந்தச் சட்டத்தை அவர்

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆதரித்து இருக்கிறார் என்பதை, அவர்களுடைய கட்சியின் சார் பாகவும் ஆதரித்து இருக்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

12-15 மணி

கடந்த காலத்தில் 1961 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் எவ்வளவு பெரிய தவறு நடந்தது என்பதை நான் யாருடைய பெயரையும் இங்கே குறிப்பிட்டுப் பேச விரும்ப வில்லை. ஆனால் மன்னிக்க முடியாத மிகப் பெரும் தவறு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட காரணத்தால், இரண்டு ஆண்டுக் காலத்திலே நடத்தப்பட்டு இருக்கிறது. அந்த இரண்டு ஆண்டு களையும் முன் தேதியிட்டு அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்குமானால், இப்படி யாரும் இப்படிப்பட்ட ஏமாற்று வேலைகளிலே எல்லாம் அன்றைக்கு ஈடுபட்டு இருக்கமாட்டார் கள். குறிப்பாக ஒருவருக்கு 502 ஏக்கர் நிலம் இருந்திருக்கிறது. என்றைக்கு ? 6—4—1960-க்கு முன்பு, இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள அந்த சொற்றொடரைப் பயன்படுத்திக் கொண்டு அவர் 502 ஏக்கரா நிலத்தைப் பிரித்து வைத்து எழுதிவிடுகிறார், மீதம் நிலமே கிடையாது. உச்சவரம்பு அவரை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. இன்னொருவருக்கு 548 ஏக்கர், அதிலே 488 ஏக்கராவை விற்றுவிடுகிறார். மீதம் அவரிடத்தில் இருப்பது 60 ஏக்கராதான். இன்னொருவர்—ஏற்கனவே அவருடைய குடும்பத்திலே பிரித்துக் கொண்ட நிலத்திலேயே ஒருவருக்கு 498 ஏக்கரா இருந்தது. அதிலே 179 ஏக்கராவை விற்றுவிடுகிறார். 405 ஏக்கரா, விற்றது உட்பட வேறு சில பங்கீடுகள் செய்து ஏமாற்றி 93 ஏக்கராதான் அவரிடம் இருப்பதாக அன்றைக்குக் காட்டியிருக்கிறார். இவைகள் எல்லாம் இந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளே நடைபெற்ற காரியம். இன்னொருவர் 127 ஏக்கரா வைத்திருக்கிறார். அதில் 117 ஏக்கராவை விற்றுவிடு கிறார். இந்தச் சட்டம் வருவதை எதிர்பார்த்து. அவரிடத்திலே மீதம் இருப்பது பங்கீடெல்லாம் போக பாவம் ஏழே ஏழு ஏக்கராதான். இன்னொருவரிடம் இருந்தது 252 ஏக்கரா. அதில் விற்றது 222 ஏக்கரா, மீதமிருந்தது 30 ஏக்கராதான். இன்னொருவர் 407 ஏக்கராவிற்கு உரிமை உடையவர், சட்டத்தை ஏமாற்ற இரண்டு ஆண்டுக்குள்ளே 379 ஏக்கராவை விற்றுவிடு கிறார். மீதமிருப்பது 28 ஏக்கராதான். இன்னொருவர் 1,010 ஏக்கராவிற்குச் சொந்தக்காரர். அவர் பங்கீடெல்லாம் செய்ய வில்லை 1,010 ஏக்கராவையும் விற்றுவிடுகிறார். மீதம் எதுவுமே யில்லை, பாவம் இப்பொழுது எந்த நிலைமையிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே எங்கே இருக்கிறாரோ எனக்குத் தெரிய வில்லை. இன்னொருவர் 551 ஏக்கராவிற்குச் சொந்தக்காரர்.

அவர் 504 ஏக்கராவை விற்றுவிடுகிறார். மீதமிருந்தது வெறும் 47 ஏக்கராதான். இன்னொருவர் 500 ஏக்கராவிற்குச் சொந்தக்காரர். அவர் விற்றது, பங்கீடு செய்தது—விற்றது 462, மீதம் 38 ஏக்கராதான் அவருக்கு இருக்கிறது. இன்னொருவர் 724 ஏக்கரா விற்குச் சொந்தக்காரர். அவர் 724 ஏக்கராவையும் விற்றுவிடுகிறார். அவரிடத்திலே இப்பொழுது கொஞ்சம்கூட நிலம் கிடையாது, இன்னொருவருக்கு 827 ஏக்கரா. அவர் பங்கீடு செய்தது, விற்றது உட்பட 631 ஏக்கரா. மீதம் இருப்பது 196 ஏக்கரா. அதிலேதான் உச்சவரம்புச் சட்டம் தன்னுடைய தலையை நுழைத்துப் பார்த்தது. இன்னொருவருக்கு 924 ஏக்கரா, அதிலே 792 ஏக்கராவைப் பங்கீடு செய்து விடுகிறார். மீதம் 132 ஏக்கரா. இன்னொருவர் 1,745 ஏக்கராவுக்குச் சொந்தக்காரர். அவர் விற்றது 947 ஏக்கரா, பிரித்து எழுதியது 41 ஏக்கரா. 1,002 ஏக்கரா போய்விடுகிறது. இன்னொருவர் 1,330 ஏக்கராவுக்குச் சொந்தக்காரர். அவர் விற்றது 118 ஏக்கரா, பிரித்து எழுதியது 498 ஏக்கரா. பங்கீடு மொத்தம் செய்தது 616 ஏக்கரா. மீதம் 714 ஏக்கரா. அதிலே உச்சவரம்புச் சட்டம் ஓரளவு தன்னுடைய செயலைப் புரிகிறது. இன்னொருவருக்கு 1,953 ஏக்கரா, அவர் விற்றது 1,926 ஏக்கரா, மீதமுள்ளது 27 ஏக்கரா. இன்னொருவர் 1,100 ஏக்கரா. அவர் விற்றது 1,040 ஏக்கரா, மிச்சமிருப்பது 60 ஏக்கரா. இன்னொருவர் 2,028 ஏக்கராவிற்கு உரிமையுடையவர். அதில் அவர் விற்றது 1,990 ஏக்கரா, மீதமிருப்பது 38 ஏக்கராதான். இன்னொருவருக்கு 6,829 ஏக்கரா. அவர் விற்றது 2,999 ஏக்கரா, பிரித்து எழுதியது 1,874 ஏக்கரா. ஆக மொத்தம் பங்கீடு 4,877 ஏக்கரா போக மீதமுள்ள நிலம் 1,952 ஏக்கராதான். இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற்கு காரணம் எந்த அளவிற்கு இந்த உச்சவரம்புச் சட்டம், காங்கிரஸ் ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட சட்டம், இவர்களால் மீறப்பட்டிருக்கிறது. இதில் பலபேர் காங்கிரஸ் பெரும் புள்ளிகள். காங்கிரஸ் கட்சியின் மாவட்ட அளவு தலைவராக இருந்தவர்கள். அவர்களே அந்த ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட சட்டத்தை முன்கூட்டியே ஏமாற்றுகின்ற அளவிற்கு திட்டம் தீட்டி ஏமாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஒரு பெரிய முற்போக்கான சட்டத்தை அன்றைக்கு முறியடிக்க தங்களுடைய எல்லாவிதமான தந்திரங்களையும் கையாண்டு இருக்கின்றார்கள். மலையைக் கெல்லி எலியைப் பிடித்திருக்கிறார்கள் என்று அன்றைக்கு கலைஞர் சொன்னார், இன்றைக்கும் அப்படித்தான் பிடிக்கப் போகிறாரா என்று அவர் கேட்டிருக்கிறார். மலையைக் கெல்லுவது உண்மைதான். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் பிடிபடுவது சாதாரண எலியல்ல, பல பெருச்சாளிகள் பிடிபடும் என்பதை மாத்திரம் நான் அவர்களிடத்திலே இங்கே மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

12–20 மணி

வேறு பல உதாரணங்கள், அன்று நான் சொன்னவைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அன்றைக்கு எந்த உணர்வோடு இந்த அவையிலே பேசியிருக்கிறோமோ அதே உணர்வோடு தான் இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இந்த பினாமிகளைக் கண்டுபிடிக்க அந்தந்தப் பகுதியிலே அமைக்கப்படுகின்ற குழுக்களைப் பற்றிப் பேசப்பட்டது. அதிலே நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர் திரு. பழனிச்சாமி அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட குழுக்களில் நிலமீட்சிப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி அதிகம் தெரிந்தவர்கள் எல்லாம் இடம் பெற வேண்டும் என்று சொன்னார்கள். நிச்சயமாக அப்படிப்பட்டவர்கள் அதிலே இடம் பெறுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே இப்படிப்பட்ட குழுக்களே அமையாமல் தஞ்சை மாவட்டத்தில் அன்றைய தினம் மன்னை நாராயணசாமி அவர்களும் அதைப்போல சர்வோதய இயக்கத்தைச் சார்ந்தவர்களும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்களும் நம்முடைய கோ.சி. மணி போன்றவர்களும், மற்றவர்களும் அன்றைக்கு இந்தப் பிரச்சினையிலே ஈடுபட்டு ஒரு பெரிய பண்ணைக்காரரிடமிருந்து நிலங்களை எல்லாம் அன்றைக்குப் பிரித்து எடுத்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. எனவே அமைதியான முறையில் வன்முறைக்குத் துளியும் இடம் தராமல் சட்ட ரீதியாக அந்த நிலங்கள் உரியவர்களுக்குக் கிடைக்க இந்த உச்சவரம்புச் சட்டம் வெற்றிபெற நாம் முயற்சிகளை மேற்கொள்வோம்.

நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள் எம்.எல்.ஏ-க்கள் இதிலே இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். வேறு சிலரும் குறிப்பிட்டார்கள். திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் குறிப்பிட்டார்கள். சில நேரங்களில் எம்.எல்.ஏ.-க்கள் கூட அப்படிப்பட்ட மிராசுதாரர்களாக இருக்கக்கூடும். எனவே எம்.எல்.ஏ.-க்களைப் போடுவதால் ஒரு கமிட்மெண்ட் வந்துவிடக்கூடும். எனவே எம்.எல்.ஏ.-க்கள்தான் போட வேண்டும் என்று இல்லாமல் எம்.எல்.ஏ.-க்களும் இந்த சமூக சேவை மனப்பான்மை உள்ளவர்களுடைய பட்டியலிலே அடங்குவார்கள் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட குழுக்கள் நியமிக்கப்படும்பொழுது அவர்கள் சமூக சேவகர்களாக இருந்தால் எம்.எல்.ஏ.-வாக இருப்பது ஒரு குற்றம் அல்ல என்கின்ற அந்த அளவில் அப்படிப்பட்ட சமூக சேவகர்கள் எல்லாம் இதுபோன்ற குற்றங்களைக் கண்டுபிடித்து, பினாமி நிலங்களைக் கண்டுபிடித்து அதிகாரிகளுக்கு, அரசுக்கு, உரியவர்களுக்கு அறிவிக்கின்ற அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்து இந்தப் புனிதமான, புரட்சிகரமான சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு அமர்கின்றேன்.

[1990 மே 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"(i) In sub-section (2) of section 23-A of Clause 5, *for* the words 'Second Amendment', *substitute* the word 'Amendment'.

(ii) In sub-section (1) (iv) of Section 23-D of Clause 5, *for* the words 'Second Amendment', *substitute* the word 'Amendment' ".

மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். அவர்கள் ஊராட்சித் தலைவர்களாக இருந்து, இங்கே நீங்கள் எல்லாம் ஆதரித்துப் பேசியதைப்போல் பேசுகின்ற உணர்வு படைக்காத ஒருவராக இருந்தாலும், ஊராட்சித் தலைவர் அல்லது எம்.எல்.ஏ. என்ற தகுதியால் அவர் இப்படிப்பட்ட பினாமிகளை அடையாளம் காட்டக் கூடியவராக இருக்க மாட்டார், ஆனால் ஊராட்சித் தலைவர் அல்லது ஒரு பொறுப்பிலே உள்ளவர் என்பதற்காக இதிலே இரக்கப்படாமல் இந்த உணர்வு படைத்தவர்கள்

யாராக இருந்தாலும் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்தக் குழுவிலே இடம் பெறுவார்கள் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In Clause 5, under Chapter III-A, under the sub-heading 'Constitution of Committee' after sub-item (d), *add* the following as sub-items *(e)* and *(f)*.

'(e) President of the Local Panchayat.

(f) Member of the Legislative Assembly of the Constituency' ".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்த குழுக்களை அமைக்கின்ற நேரத்தில் 1980 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் சப்-கலெக்டர் ராங்கிலே உள்ளவர்கள்தான் என்றும், அதற்கு கீழே உள்ளவர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள்—சப்-கலெக்டர் ராங்கிலே உள்ளவர்களும், அதற்கு மேல் பதவியிலே உள்ளவர்களும் தான் நியமிக்கப்படுவார்கள். அவர்கள்தான் குழுவை தலைமை தாங்குவார்கள் என்று இருந்தது. இன்றைக்கு அதை மாற்றம் செய்து தாசில்தார் பதவியிலே உள்ளவர்கள் என்று மாற்றம் செய்திருக்கிறீர்கள். அதையும் நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர்கள் இதிலே இருக்கக்கூடாது என்ற நியதி கிடையாது என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த அளவிலே நியதி இல்லை என்று சொன்னாலும் எல்லா தரப்பைச் சேர்ந்தவர்களும், எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் வருகின்ற அளவிற்கு இந்த குழுக்களை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும். அதே போன்று கிராமத்தை பொருத்தவரையில் கிராமத்தினுடைய ஊராட்சி மன்ற தலைவருக்கு மட்டும் அதைப்பற்றி அதிகமாகத் தெரியும். அவர்களையும் சேர்க்கின்ற அளவிற்கு நீங்கள் இந்தச் சட்டத்தை நான் கொடுத்திருக்கின்ற அந்த திருத்தத்தை ஏற்றுக் கொண்டு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் : அவர்களின் திருத்தம் பேரவை அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"(i) In sub-section (2) of section 23-A of Clause 5, for the words 'Second Amendment', *substitute* the word 'Amendment'.

(ii) In sub-section (1) (iv) of Section 23-D of Clause 5, *for* the words 'Second Amendment', *substitute* the word 'Amendment'.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 5, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 6, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

12–25 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிரிவு—1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In Clause 1, for the words 'Second : Amendment' *substitute* the word 'Amendment'."

1990 மே 11]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட, தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் உரையாற்றுகின்ற உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இதற்குப் பின்னால் மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை விவாதம் இருக்கிறது. (சிரிப்பு) முதலில், திரு. உ. ரா. வரதராசன்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள் சம்பந்தமான இந்தச் சட்ட திருத்தம், மாநகராட்சியினுடைய வட்டங்களினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவும், எண்ணிக்கை

* 10-5-1990 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

1990 மே 11]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மா னத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட, தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் உரையாற்று கின்ற உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இதற்குப் பின்னால் மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை விவாதம் இருக்கிறது. (சிரிப்பு) முதலில், திரு. உ. ரா. வரதராசன்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள் சம்பந்தமான இந்தச் சட்ட திருத்தம், மாநகராட்சியினுடைய வட்டங்களினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவும், எண்ணிக்கை

* 10-5-1990 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பெற்றது.

அதிகப்படுத்தப்பட்டு, விரைவிலே அதற்கான தேர்தலை நடத்துவது என்ற அடிப்படையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகராட்சி ஏற்கெனவே 100 வட்டங்களைக் கொண்டதாக இருந்து 150 வட்டங்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற வட்டங்கள், அதனுடைய வாக்காளர் எண்ணிக்கை, பரப்பு ஆகியவை சமன் அற்ற நிலையிலே இருக்கிற காரணத்தினாலே, இவற்றையெல்லாம் முறைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஒரு ஆய்வு மாநகராட்சியினாலே மேற்கொள்ளப்பட்டது. அதனுடைய அடிப்படையிலே, இருக்கின்ற சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்டு இருக்கக்கூடிய வட்டங்களை, 20,000 வாக்காளர்களுக்கு ஒரு வட்டம் என்கிற அடிப்படையிலே மாற்றியமைப்பது பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையிலே அந்த முடிவுகள் எல்லாம் செய்யப்பட்டன. அப்படி செய்யப்பட்ட போது, 170 வட்டங்கள் வரையிலேயும் அதனுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையிலே ஒரு கருத்து கூடப் பரிசீலிக்கப்பட்டது.

12—30 மணி

ஆனால், என்ன காரணத்தினாலோ இன்றைக்கு இருக்கிற 150 வட்டங்கள் என்பதை 155 வட்டங்கள் என்ற அளவிலே தான் மாற்றியமைக்க வேண்டும் என்கின்ற முறையிலே சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அந்த 155 வட்டங்கள் என்று சொன்னால்கூட, சமமான முறையிலே, சம எண்ணிக்கை அடிப்படையிலே அந்த மாநகராட்சி வட்டங்களைப் பிரிப்பது என்பது நடைமுறை சாத்தியமற்ற ஒன்று என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சுட்ட விரும்புகிறேன். இருந்தாலும், மாநகராட்சியினுடைய தேர்தல்கள் விரைவாக நடக்க வேண்டும் என்ற எண்ணம் ஈடேறவேண்டும் என்கிற அக்கறை சட்டமன்றத்தில் இருக்கிற எல்லோருக்கும் இருக்கிறது. குறிப்பாக, சென்னை மாநகரத்தின் பகுதிகளைச் சார்ந்து இருக்கக்கூடிய தொகுதிகளில் இருந்து வந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேலைகளைக் கவனிப்பதைவிட, மாநகராட்சியினுடைய கவுன்சிலர்கள் கவனிக்க வேண்டிய வேலைகளையே மிக அதிகமாகக் கவனிக்க வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினாலே, நிச்சயமாக மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற்று அந்தத் தேர்தல்கள் மூலமாக மாநகராட்சிகளுடைய பணிகளை மேம்பாடு செய்வதற்காக, அவற்றை மேற்பார்வை செய்வதற்காக

1990 மே 11] [திரு. உ. ரா. வரதராசன்]

மாநகராட்சி சம்பந்தப்பட்ட பணிகளை, மக்கள் குறைகளைக் களைவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமைய வேண்டும் என்பது மிக மிக அவசியம் என்பதால் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதற்கு நிச்சயமாக ஆதரவு உண்டு. ஆனால் அப்படி எடுக்கிறபோதுகூட இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமைகளிலே ஒரு முற்றிலுமான ஒரு மாற்றம் அவசியமாக இருக்கிறது. 100 வட்டங்கள் என்பது 150 வட்டங்களாக சென்னை மாநகராட்சியிலே உயர்த்தப்பட்ட போது பல புதிய பகுதிகள் எல்லாம், ஏற்கனவே செங்கை அண்ணா மாவட்டத்தில் இருந்த பகுதிகள் எல்லாம், சென்னை மாநகராட்சியில் சேர்க்கப்பட்டன. அப்படி சேர்க்கப்பட்ட பகுதிகளிலே மாநகராட்சியினுடைய பணிகள் என்பது மிக மிகக் குறுகிய அளவிலே, குறைந்த அளவிலேதான் இருந்து கொண்டு இருந்தன. அந்த மக்கள் எல்லாம் நாங்கள் சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்படாமல் பஞ்சாயத்தாக இருந்திருந்தால் கூட எங்களுக்கு ஏதேனும் கவனிப்பு கிடைத்து இருக்கும் என்று வருத்தப்படுகின்ற, ஆதங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற, அங்கலாய்க்கின்ற நிலைகள் எல்லாம் இருந்து கொண்டு இருக்கின்றன என்பதை நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விழைகிறேன். மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட காரணத்தால் அரசு அலுவலகங்களில் அல்லது பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றக் கூடியவர்களுக்கு ஏதேனும் படிகளிலே கொஞ்சம் உயர்வு கிடைக்கலாமே தவிர மாநகராட்சியினுடைய பணிகளிலே எந்த விதமான வசதிகளும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பது மிகப் பெரிய குறையாகஇருந்து வந்திருக்கிறது. அதை மாற்றுவதற்கு மிக விரைவான துரிதமான நடவடிக்கைகள் எல்லாம் அவசியம். மாநகராட்சிகள் பணிகள் என்று சொல்லுகிற போது ஒருமிக முக்கியமான கவலைகுரிய அம்சத்தை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது மாநகராட்சியோடு மட்டும் அல்ல, மக்கள் பொது சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்டதாக இன்றைக்கு இருப்பதால், இது விரைவாக கவனிக்க வேண்டிய ஒரு பிரச்சினை என்பதால் இதை இங்கே சுட்டிக் காட்டுவதற்கு தங்களுடைய இசைவை நான் கோருகிறேன்.

தமிழ் நாட்டிலே மலேரியா நோய், தமிழ்நாடு முழுவதிலும் கண்டு பிடிக்கப்பட்ட நோய் பாதிப்பிலே 60 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையில் சென்னை நகரத்திலேதான் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பது ஆய்விலே தெரிந்து இருக்கக் கூடிய ஒன்று. அதுவும் கடந்த 3 ஆண்டுகளில் இந்த நோயினுடைய பாதிப்பு என்பது சென்னை நகரத்திலே மிக அதிகமாகியிருக்கிறது 1987 ஆம் ஆண்டில் இந்த நோய் பாதிப்புக்கு ஆளானவர்கள் 31,176 பேர், 1988-லே 34,400 என்று உயர்ந்து இருக்கிறது; 1989-லே 45,622 என்று உயர்ந்து இருக்கிறது.

இந்த மலேரியா நோய் வகைகளிலே 3 வகைகள் உண்டு. அதிலே ''பிளால்மோடியம் பால்சிஃபோரம்'' என்பது மனித மூளையைத் தாக்கி இறப்பினை ஏற்படுத்தவல்ல ஓர் அபாய கரமான நோய். அந்த நோய் மட்டும் இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் முடிய 3 மாதங்களில்—இந்த 3 மாதங்கள் மலேரியா நோய் பரவுவதற்கு மிக குறுகிய வாய்ப்புள்ள '' Lean transmission period '' என்று சொல்லக் கூடிய காலம்— இந்தப் பருவத்திலேயே கடந்த ஆண்டினுடைய முதல் 3 மாதங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 143 சதவீதம் இந்த நோய் அதிகமாகப் பரவியிருக்கிறது. கடந்த ஆண்டு இந்த 3 மாதங்களில் 377 பேர் இந்த 'பி. எப்.' என்று சொல்லக் கூடிய ''பிளாஸ்மோடியம் பால்சிஃபோரம்'' என்ற அந்த வகை மலேரியாவில் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னால் இந்த ஆண்டினுடைய 3 மாதங்களில் 919 பேர் (மணியடிக்கப் பெற்றது) பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது 143 சதவீதம் அதிகமாகி இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இது சம்பந்தமாக டெல்லி இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில்இருக்கக் கூடிய மலேரியா ஆராய்ச்சிமையம் ஒரு 7 அம்ச நடவடிக்கை திட்டத்தை பரிந்துரைத்து இருக்கிறது. இது பின்னாலே '' Peak Transmission period '' மலேரியா நோய் மிக அதிகமாக பரவக் கூடிய ஜூலை முதல் நவம்பர் முடிய இருக்கக்கூடிய கால கட்டத்தில் இன்னும் அதிகமாகப் பரவக்கூடிய ஒரு பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றி மாநக ராட்சியினுடைய தனி அலுவலர் அவர்கள் ஒரு விரிவான குறிப்பை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இந்த ஏழு அம்சத் திட்டத்தை உடனடியாக அமல் செய்யவில்லை என்றால் இந்த மலேரியா நோய் இந்த ஆண்டு சென்னை நகரத்தினுடைய மக்களை மிக அதிகமாக பாதிக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. இந்த நோய் அதிகமாக பாதித்து இருப்பது இன்று மாண்புமிகு முதலமைச்சர் தொகுதியான துறைமுகம் தொகுதியில் மிகக் கடுமையாக இருக்கிறது. அடுத்து என்னுடைய தொகுதியை உள்ளடக்கிய விருகம்பாக்கம், வில்லிவாக்கம் பகுதிகளில் மிக அதிகமாக இருக்கிறது என்று அந்த ஆய்வு சொல்லுகிற காரணத்தால் இதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர் களுடன் சேர்ந்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மாநகராட்சி சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவு தொடர்பாக இல்லாவிட்டாலும் கூட சென்னை மாநகரத்து மக்களை பாதிக் கிற மிக அக்கறை உள்ள பிரச்சினை என்ற முறையில் இதையும் சேர்த்து கவனிக்க வேண்டும் என்று தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, மாநகராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்திலே நான் பங்கு கொள்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே 3

1990 மே 11] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

12–35 மணி

மாநகராட்சிகள் இருக்கின்றன. இந்த மாநகராட்சிகள், மாநக ராட்சிகள் அளவிலே செயல்படுகிறதே ஒழிய அதில் இன்னும் ஒரு தடவை கூட தேர்தல் நடக்கவில்லை. ஆனால் ஒரு மாநக ராட்சியிலே தேர்தல் நடந்தது. ஏற்கனவே பரம்பரை மாநக ராட்சியான சென்னை மாநகராட்சிக்கு தேர்தல் நடந்து வெகு வருடம் ஆகி விட்டது. இப்போது பிறந்திருப்பவர்களுக்கு இங்கே மாநகராட்சித்தேர்தல் நடக்குமா நடக்காதா என்று சந்தேகத் திற்குரிய அளவிலே இருக்கிறது. நகராட்சிக்குத் தேர்தல் நடந்து 'பீப்பிள்ஸ் ரெப்பரசன்டேடிவ்' இருந்தால் தான் குற்றம் குறை களை எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். ஆங் காங்கே, சிறிய அளவிலே 2 ஆயிரம் ஓட்டு, 10 ஆயிரம் ஓட்டு, 20 ஆயிரம் ஓட்டு உள்ள வார்டுகள் இருக்கும் போது அங்கே யுள்ள ஜனங்கள் அந்த பீப்பிள்ஸ் ரெப்பரசன்டேடிவ் இடம் போய்த்தான் இன்றைக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. குடி நீர் இன்றைக்கு 2 மணிக்கு வந்தது, 3 மணிக்கு வந்தது என்று எடுத்துச் சொல்வார்கள். ரொம்ப இடங்களிலே தண்ணீர் வராமல் காத்துக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். இரண்டு மணிக்குக் கூட குடிதண்ணீர் லாரி வருகிறது. புரடக்டட் வாட்டர் சப்ளை என்ற எழுத்தே டிக்ஷனரியிலேயிருந்து விட்டு போய்விடும் போல் இருக்கிறது. அந்த அளவிலே இன்றைக்கு நிலைமை போய்க் கொண்டு இருக்கிறது. தண்ணீர் கிடைக்க வில்லை. என்ன பண்ணுவது? நான் பல தடவை சென்னைக்கு வந்திருக்கிறேன். லாரி லாரியாக தண்ணீர் கொண்டு போய் கொடுக்கிறார்கள். அந்த மாதிரி எந்த நகரத்திலும் கிடையாது, தானே வாட்டர் சப்ளை நடந்து கொண்டிருக்கும். இப்போது லாரியிலேதான் வாட்டர் சப்ளையே நடந்து கொண்டிருக் கிறது. ட்டேப் வைக்கிறேன் என்று சொல்லி வசூல் பண்ணுகிறார்களேயொழிய எல்லா இடங்களிலும் இந்த பெரிய மனுஷன்களும் சின்ன மனுஷன்களும் இருக்கிற வரைக்கும் ட்டேப் வாட்டர் கிடைப்பது அரிதாக இருக்கிறது. புரடக்டட் வாட்டர் சப்ளை எங்கேயும் கிடைப்பதில்லை. மாநக ராட்சியிலும் சரி, எந்த நகராட்சிகளிலும் சரி எங்கேயும் கிடைப் பதில்லை. அதிலும் மெட்ராஸ் கார்ப்பரேஷனிலே ரொம்ப அரி தாக இருக்கிறது. விடிய விடிய லாரி சுற்றுகிறது. எவ்வளவு கஷ்டம் பாருங்கள். சாதாரணமாக ட்டேப்பிலே தண்ணீர் சப்ளை பண்ணுவது கிடையாது. நூற்றுக்கணக்கான லாரிகள் சந்து சந்தா வளைந்து வளைந்து சென்று சப்ளை பண்ணு கிறார்கள். அது மெச்சத் தகுந்த ஒரு நல்ல நடவடிக்கை தான் இருந்தாலும் புரடக்டட் வாட்டர் சப்ளையாக இருக்கிறதா. என்பதும் நாம் கவனிக்க வேண்டிய விஷயம். வியாதிகளுக்கு சொல்லவே வேண்டியது இல்லை. தானே உற்பத்தியாகி விடும். அதற்கு மருந்து போட வேண்டிய தேவையில்லை. அதற்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. உரம் போடா மலேயே வியாதிகள் நாட்டிலே இன்றைக்கு உற்பத்தி ஆகின்றன. அதற்குக் காரணமே இந்த நகராட்சிகள் தான். அப்படிப்பட்ட

நகராட்சிகளில் தேர்தல்கள் நடத்தவில்லையென்றால், தவறு கள் நடப்பதற்கு சௌகரியமாகப் போய்விடும். சானிடேஷனி லேயிருந்து மற்ற எத்தனையோ விதமான சங்கடங்களை எடுத்துக் கூறுவதற்கு மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்களை சீக்கிரம் நடத்த வேண்டும். அதற்காகத் தான் இந்தச் சட்டத் திருத் தத்தை ரொம்ப அவசரமாகக் கலைஞர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். எதற்காகக் கொண்டு வந்திருக் கிறார்கள்? நீங்களெல்லாம் ஒத்துழைத்தால் சீக்கிரமாக நாங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவோம் என்கின்ற எண்ணத்தில் அவர்கள் இதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே, வார்டுகளைப் பிரிக்கும் போது எல்லோரும் ஒத்திருக்க வேண்டும். இந்த முறை அவரை சேர், இந்தத் தெருவைச் சேர்க்க வேண் டாம், இந்த முறை விட்டுவிடு, இத்தனை பேர்களைச் சேருங்கள் என்கின்ற எந்தவிதமான பாகுபாடும், எந்தவிதமான குற்றங் களும் அதிலே இருக்கப்படாது. வார்டுகள் பிரிக்கப்படும் போது தான் சந்தேகங்கள் ஏற்படும். இதை ஏன் சொல்கிறேன். என்றால் அதிலே வெகு நாள் பழகி இருக்கிறேன். நகராட்சி யிலே பல வருஷமாக இருந்திருக்கிறேன்.

இரண்டு மூன்று வார்டு டிஸ்ட்ரிபூஷனிலே நான் கலந்துகொண்டு இருந்திருப்பதால் சொல்கிறேன். இந்த வார்டு ரீ-டிஸ்ட்ரி பூஷன் கொடுக்கும் போது ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதிலும் இப்போது வார்டு டிஸ்ட்ரிபூஷன் எனபது இந்தக் காலத்திலே ஜனநாயகம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதாவது 150 வார்டுகள். அந்தக் காலத்தில் 100 வார்டுகள் என்பதை 150 வார்டுகள் என்று பிரித்து $1\frac{1}{2}$ மடங்காக ஆக்கி இருக்கிறார்கள். ஏன், நிறையவே பிரிக்கலாம். 200 வார்டு களாகக் கொண்டு வந்திருக்கலாம். இருந்தாலும் கூட சட்டத் தைத் திரும்பப் பெறுவது முடியாது. மாநகராட்சிகளில் வார்டு பிரிப்பது தவிர்த்து, கோ-ஆப்ஷன் என்ற முறையும் இருக்கிறது. கோ-ஆப்ஷன் கொடுக்கிறபோது கட்சிக்கண்ணோட்டம் பார்க்கப் படாது. எங்கெங்கே சமூக சேவகர்கள் இருக்கிறார்களோ எங்கெங்கே யார் யார் இருக்கிறார்களோ அந்த முறையிலே அந்த வார்டுகளை கோ-ஆப்ஷன் கொடுக்கும் போது நிதானத் தோடு கொடுக்க வேண்டும். எந்தவிதமான கட்சிபாகுபாடு இல்லாமல், கட்சி கண்ணோட்டமில்லாமல் வார்டுகளைப் பிரித்து, நல்லவிதமாக, சீக்கிரமாக, இந்தத் தடவையாவது, மாநகராட்சி என்று ஒன்று இருக்கிறது, அதிலே தேர்தல் நடக்கும் என்பதைக் காட்ட வேண்டும். பார்லிமெண்ட் தேர்தலையும் அசெம்பிளி தேர்தலையும் தான் கண்ணாலே பார்க்க முடிகிறது. இந்த மாதிரி நகராட்சி தேர்தல்களை மறந்துவிடக் கூடாது. கோயம் புத்தூர் மாநகராட்சி ஏற்பட்டு பல வருடங்கள் ஆகிறது. தேர்தல் என்கின்ற நாமதேயமே இல்லை. அதே மாதிரி மதுரை மாநகராட்சியில் தேர்தல் நடந்தது. அதற்குப் பிறகு அங்கே யும் மறந்து விட்டார்கள். இப்போதும் கார்ப்பரேஷன் தேர்தல்

1990 மே 11] *[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]*

நடக்குமா என்கிற சந்தேகம் இருக்கிறது. இந்த சந்தேகத்தைத் தீர்த்து நல்ல முறையிலே தேர்தலை நடத்துவார்கள் என்று ஜனங்களுக்கு உணர்வு ஏற்படும்படியாக சர்க்கார் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பத்தூர் கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் அந்த வார்டுகள் இன்னும் அதிகமாக்கப்பட வேண்டும். நல்ல வகையிலே வார்டுகள் பிரிக்கப்படவில்லை என்ற சில புகார்கள் இருக்கின்றன. முடிந்தால் கூட ஒரு 10 நாட்களுக்கு என்று ஒரு கமிட்டியை அமைத்து அதில் என்னென்ன வார்டுகளை மக்கள் கேட்கிறார்களோ அந்த வகையிலே அந்த வார்டுகளை உருவாக்க வேண்டுமென்று சொல்வதல்லாமல் கண்டிப்பாக வரும் நாட்களிலே இந்தத் தேர்தலையும் அந்த கார்ப்பரேஷ னுக்கு நடத்தியாக வேண்டும். மேலும், சுகாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. கொசுக்கள், மலேரியா போன் றவைகள் ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தத் தேர்தல்கள் வந்து விட்டால் கண்டிப்பாக அந்தந்த வார்டுகளை, அந்தந்த உறுப்பினர்கள் பார்க்கின்ற முறையிலே, மக்களுடைய குறைகள் எதுவாக இருந்தாலும் கூட அவர்களால் தேர்ந்தெடுக் கப்படவிருக்கும் அந்த உறுப்பினர்கள் மூலமாக மக்களுடைய குறைகள் தீர்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி, விடைபெறு கிறேன், ஜெய்ஹிந்த்.

12-40 மணி.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்தாக வேண்டிய ஒரு கட்டாய நிலையைப் போல, இதிலே கருத்து தெரிவிக்க வேண்டிய மாநகராட்சி பகுதியிலே இருப்பவர்கள் பேசுகிற வாய்ப்பு கிடைக்கவில்லை என்கிற ஒரு வருத்தம் இருந்தாலும் கூட, நான் மாநகராட்சிப் பகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவன் என்ற முறையில் எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது என்பதில், அதனாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ராம நாதன் அவர்கள், திரு. பால்ராஜ் அவர்கள் சார்பிலேயும் என் னுடைய கருத்துக்களை நான் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்படுகிற இடத்தைக் குறிப்பிட இயலாத நிலை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதனை மாற்றி, பொதுவாக இத்தனை இடங்கள் என்று தேர்தலிலே

தெரிவித்தால் தான், அந்த மக்களுக்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் கிடைக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். எனவே, எந்தக் கணக்கை எடுத்து முடிவு செய்யப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை என்றாலும், ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய நிலைகளை அளந்து பார்த்து, இன்றைக்கு அவர்களுக்கு ஒதுக்கீடு தருகிற அந்த இடத்திற்கு குறைந்துவிடாத அளவுக்கு, அதிகமான இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே போல், பெண்களுக்கு 30 சதவிகிதம் என்ற அடிப்படை தரப்பட்டிருக்கிறது. இது நீண்ட காலமாக வற்புறுத்தி வற்புறுத்தி பெண்களுக்கான ஒதுக்கீடுகள் தர வேண்டும் என்பதில் நாம் ஆர்வம் காட்டியிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு தேர்தல் நடைபெற்று இந்த அளவிற்கு பெண்களும் நகராட்சி, மாநகராட்சி மன்றங்களில் பங்கு பெறுகிற நிலைமை வரவேண்டும். அதைநாம் காணவேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறையோடு இருக்கிறேன் என்று சொல்லி, மதுரை மாநகராட்சிக்கும் கோவை மாநகராட்சிக்கும் ஒரு புதிய விதிவிலக்காக ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். 72 வட்டங்களைப் போட்டு, அதிலே ஒரு 8 வட்டங்களுக்கு தனியாக ஒரு 8 பேரும் சேர்க்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது எந்த அடிப்படையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஏனென்றால் ஒதுக்கப்படுகின்ற இடங்களிலே பெண்களுக்காக ஒதுக்கீடு இருக்கிறது; அதேபோல், ஆதி திராவிட மக்களுக்கும் ஒதுக்கீடு இருக்கிறது. இவர்கள் எந்த வட்டத்திலேயாவது தேர்தலிலே நின்று, அவர்கள் அந்த இடத்திலே பிரதிநிதித்துவம் பெற முடியும். இத்தனைக்குப் பிறகும், மறுபடியும் ஒரு 8 பேர் தனியாக நின்று வரவேண்டுமென்று சொல்கிற அந்த நிலை இருக்கிறதே, அது தேவைதானா என்பதை நாம் யோசிக்க வேண்டும். அப்படி 8 பேர் தேவையென்று சொன்னால், 72 வட்டத்தைக் கூட்டி, 80 வட்டங்களாக மாற்றி, 80 வட்டங்களிலே இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் கூட, அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால், அரசோ அல்லது வேறு யாராவது நியமனங்கள் என்று சொல்வது அல்லது அவர்களைத் தேர்ந்தெடுப்பது அல்லது அரசு நியமிப்பது என்ற நிலைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மாநகராட்சிப்பகுதியில் இருக்கிற மிகப்பெரிய கஷ்டம் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர் என்ற வேலையை விட, தினசரி இந்த மாநகராட்சி வேலையைப் பார்ப்பதுதான் பெரிய வேலையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். அவர் கிராமப் பகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்; அதற்குப் பின்னர், அவர் நகரப் பகுதிக்கு வரவேண்டுமென்று இன்றைக்கு, அவர் நகரப் பகுதியில் இருக்கிறார் என்பதிலே அவர் எதற்காக வந்தார் என்பதும்

1990 மே 11] [திரு. எஸ். ஆர். இராதா]

எனக்கும் தெரியும். ஆனால், கிராமப் பகுதியிலே இருக்கும்போது உள்ள கஷ்டமும், நகரப் பகுதியிலே இருக்கிற நிலைமையும் வேறு. ஆனால், இன்றைக்கு என்ன ஆகியிருக்கிறது என்றால், நகரத்திலே இருக்கிற எங்களை, ஒவ்வொரு சின்ன சின்ன காரியங்களுக்குக் கூட, எம். எல். ஏ. எங்கே என்று கேட்கிற அளவுக்கு நிலைமை வந்துவிடுகிறது. ஒரு தெருவில் சாதாரண விளக்கு எரியாவிட்டால்கூட, எம்.எல்.ஏ.-வைப் பார்த்தேன் ; எம்.எல்.ஏ. இல்லை ; விளக்கு எரியவில்லை. விளக்குக்கும் எம். எல். ஏ.-வுக்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் மாநகராட்சியிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு கவுன்சிலர் இல்லையென்பதால், யார் மீதாவது சொல்ல வேண்டுமென்று உடனே எம்.எல்.ஏ. என்று சொல்கிறார்கள். அதேபோல், தண்ணீர் தருவதிலே கூட ஒரு மணி நேரம் தாமதமாக மாநகராட்சியிலே கொடுத்தால், ஒரு வார்டிலே வருகிற தண்ணீர், காலையிலே வர வேண்டிய தண்ணீர் 8 மணிக்கு பதிலாக 9 மணிக்கு வந்தால், அந்த எம். எல். ஏ. சரியில்லை ; இப்படித்தான் அடிக்கடி மெட்ராஸ் போய் விடுகிறார் என்று சொல்கிற நிலைமையெல்லாம் இருக்கிறது. இன்றைக்கு குறிப்பாக நான் ஒன்று சொல்கிறேன். மதுரை மாநகராட்சியிலே இப்போது எங்களுடைய மாநகராட்சி ஆணையரைக் கொண்டு போய் மாவட்ட ஆட்சித் தலைவராக ஆக்கி விட்டார்கள். இப்போது என்ன ஆயிற்று என்றால், யார் மாநகராட்சியைக் கவனிப்பது என்று தெரியவில்லை. ஆனால்

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக மாநகராட்சி ஆணையரும் நியமிக்கப்பட்டு விட்டார்.

திரு. எஸ். ஆர். இராதா: நியமிக்கப்பட்டார் என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் சிறப்பு அதிகாரியாக இருந்தார்கள். இப்போது யார் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிறாரோ, அவரேதான் சிறப்பு அதிகாரியாக அங்கே இயங்குவார்.

12-45 மணி

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு அதிகாரி என்ற பட்டப் பெயர் இருக்கிறதே தவிர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே நானும் பல தடவை மாநகராட்சி சம்பந்தமாகக் கூறி இருக்கிறேன். ஆனால் அந்தப் பதவியை வகித்திருக்கிறார்களே தவிர, ஏதாவது ஒரு கூட்டமாவது போடுகிறார்களா என்றால் எதுவும் செய்யவில்லை.

நிர்வாக ஆணையாளர்தான் கவனிக்க முடியும் என்ற நிலை இருக்கிறதே தவிர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிலே பொறுப்பு இருக்கிறது என்று இருக்கிறதே தவிர, நானும் பல குறைகளை அவரிடத்திலே சொல்லியிருக்கிறேன், மாவட்ட ஆட்சித் தலைவரும் ஆணையாளரிடத்திலே சொல்கிறேன். ஆணையாளரிடத்திலே சொல்கிறேன் என்று சொல்கிறாரே தவிர, அவர் நேரடியாகக் கூட்டத்தைக் கூட கூட்டவில்லை, அல்லது எங்களைக் கூப்பிட்டார்களா அல்லது அழைத்தார்களா என்றால் அந்த நிலை இல்லை. நாங்கள் நீண்ட நாட்களாக வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். மாநகராட்சியில் இருக்கின்ற எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து அதாவது மாதத்திற்கு ஒரு முறை என்றாவது எங்களை அழைத்துப் பேசினால் எங்களுடைய தொகுதிகளில், வார்டுகளில் இருக்கின்ற பிரச்சினைகளைக் கலந்துபேசுவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கும். அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அந்தப் பகுதிகளில் இருக்கின்ற வாக்காளர்களின், தொகுதிகளின் நிலைகளைப் பற்றி நாங்கள் எடுத்துச் சொல்கிறோம் என்பதாவது வாக்காளர்களுக்குத் தெரியும். அத்தகைய ஒரு வாய்ப்பு ஏற்படும். நானும் பல தடவை அவர்களுக்குச் சொன்னேன். ஆலோசனைக் குழுவைக்கூட கூட்ட வேண்டாம், கலந்து பேசுவதற்காகவாவது ஒரு கடிதத்தை எழுதி எங்களைக் கூப்பிடுங்கள். நாங்கள் வந்து எங்கள் கருத்துக்களைச் சொல்கிறோம். நான்கு இடத்தில் ரோடு இல்லை, நான்கு இடத்தில் விளக்கு எரியவில்லை, இரண்டு இடத்திலே குப்பை அடைத்துக் கொண்டு இருக்கிறது என்றாவது சொல்லலாம் என்று சொன்னால் அதற்குக்கூட ஆணையாளர்கள் முன்வரவில்லை. அந்த நிலைகளை மாற்றவேண்டும்.

நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே 33-ஆவது வார்டிலே அனுப்பாரடி வாய்க்கால் என்ற வாய்க்கால் ஓடுகிறது. நீண்ட நாட்களாக அவைகளில் தண்ணீர் வருவதில்லை. சாக்கடைத் தண்ணீர் ஓடுகிறது. குப்பைகள் தேங்கி இருக்கின்றன, அதை மாற்றவேண்டும் என்று ஆணையாளருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆணையாளரும் செய்கிறேன், செய்கிறேன் என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவராகவே ஆகிவிட்டார். இப்போது வருகிறவர்களாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். எனவே இப்படி பல்வேறு பிரச்சினைகள் இருப்பதால் விரைவாக ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இப்போது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. செப்டம்பர் மாதம் என்று நினைக்கிறேன். இப்போது மே மாதத்தில் நாம் இருக்கிறோம். இன்னும் சில மாதங்கள் தான் இருக்கின்றன. இப்போதே நாங்கள் தேர்தலுக்காக வரிந்து கட்டுகிற நிலை இருக்கிறது. செப்டம்பரில் நடப்பதாக இருந்தால் நாங்களும் அதற்குத் தயாராக வேண்டும். எனவே, இந்தத் திருத்தங்களிலே சிலவற்றைச் சேர்க்கின்ற நிலை என்பதை மாற்றி 72 வட்டம் என்பதை 80 வட்டமாக மாற்றினால்கூட சரியாக

1990 மே 11] [திரு. எஸ். ஆர். இராதா]

இருக்கும். எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து, பெண்களுக்கும் ஆதி திராவிட மக்களுக்கும் இடம் தருகின்ற இந்த நிலையை ஆதரித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிகளுக்கும் விரைவாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வரதராஜன், திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ராஜு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராதா ஆகியோர் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு இன்னின்ன கோரிக்கைகளைச் சொல்கிறோம் என்று சொன்னார்கள். அதிலே கூட மாநகராட்சியின் இதர பணிகளைத் தான் அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன, மலேரியா நோய் சென்னையில் பரவ ஆரம்பித்திருக்கிறது என்றும் இதற்கு முன்னால் இருந்த நிலையை விட அதிக எண்ணிக்கையில் அது பரவும் என்று கருதுகிறோம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் அழுத்தமாகச் சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே கூட குறிப்பிட்டிருக்கிறேன். நீங்கள் விவரமாக எழுதிக் கொடுங்கள், நாங்கள் இரு அமைச்சர்களும் கூடி அதைப்பற்றி விரிவாகப் பேசி சிறப்பு அதிகாரிகள் என்ன கேட்கிறார்களோ அவைகளை விரைவாக நிறைவேற்றித் தருகிறோம் என்ற உறுதியை இங்கே நான் ஆரம்பத்திலேயே தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். பெண்களுக்கு இட ஒதுக்கீடு 30 சதவீதம் அவசியம் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதோடு கூட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்க வேண்டிய இடங்கள் எத்தனை என்று தெரியவில்லை, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் என்று குறிப்பிட்டார்கள். சட்டத் திருத்தத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். மக்கள் தொகை எண்ணிக்கையில் எத்தனை விழுக்காடு இருக்கிறார்களோ அத்தனை விழுக்காடு எண்ணிக்கையில் அதிலே அவர்கள் இடம் பெறுவார்கள். அந்த வட்டங்கள் அவர்களுக்கென ஒதுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது விசாரித்த வகையில் 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் 13.5 சதவீதம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சென்னை மாநகரத்தில் வாழ்வதாக விவரம் தெரிவிக்கிறது. அந்த அடிப்படையில் எத்தனை விழுக்காடு அவர்களுக்கு ஒதுக்கவேண்டுமோ அது நிச்சயமாகக் குறைவின்றி ஒதுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை நான் இந்த

அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்காக முயற்சித்ததற்கு ஒரு மூல காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற முறை இந்தச் சட்டமன்றத்தில் ஒரு அறிவிப்பை அறிவித்தார்கள். ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கும், அதுபோலவே பெண்களுக்கும் 30 விழுக்காடு ஊராட்சி நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி ஆகிய மன்றங்களிலே அவர்கள் பதவி வகிப்பதற்கான வாய்ப்பைத் தேடிக் கொடுப்பதற்கு 1989-ஆம் ஆண்டில் கூட ஒரு திருத்தத்தை இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறோம்.

12-50 மணி

அந்த அடிப்படையிலே இந்தத் திருத்தம் அமைய வேண்டுமென்பதற்காகத் தான் நாங்கள் இந்த நேரத்தில் இதைக் குறிப்பிட்டிருக்கிறோம். குறிப்பாக, 3 மாநகராட்சிகளின் சட்டமுன் வடிவுகளிலும் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எந்தத் திருத்தம் கொண்டு வந்தாலும் அப்படிப்பட்ட அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்கிறபொழுது—நானும் எதிர்க்கட்சியிலே பல ஆண்டுக்காலம் இருந்து பழக்கப்பட்டு இருக்கிறேன். நான் அதை எதிர்க்கட்சி என்ற முறையில் ஆளுங்கட்சிக்கு எடுத்துத் தெரிவித்து இருக்கிறேன்—அரசு நியமனங்கள் அதிகம் கூடாது என்பதைத்தான் யார் எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆளுங்கட்சிக்கு எடுத்துச் சொல்கிற ஒரு பொது யோசனை. அந்த யோசனையை இந்த அரசு நீங்கள் சொல்வதற்கு முன்னாலேயே ஏற்றுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை முதல் அமைச்சருடைய ஆலோசனையின் கீழ் இங்கே கொண்டு வந்திருக்கிறோம். காரணம், நம்முடைய மதுரையிலும், கோவையிலும் 72 என்று இருப்பதை, 8 பேர்கள் சேர்த்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்களே, அது நியமனம் தானே என்ற சந்தேகத்தை எதிர்க்கட்சித் தலைவர் கிளப்பினார். 72 வட்டங்களில் ஒருக்கால் பெண்கள் தேர்வு செய்யப்பட முடியாத சூழ்நிலை ஏற்படுமோ என்ற அச்சத்தின் காரணமாக—சென்னையைப் பொறுத்தவரையில் நாங்கள் அச்சப்படவில்லை; காரணம், 155 வட்டங்கள் என அதிகரிக்கும்போது, சென்னையிலே ஓரளவுக்கு 30 சதவீதம் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்த்தும் நிச்சயம் கிடைக்கும் என்ற காரணத்தால் அதாவதுஆதிதிராவிடர்களுக்கு13.5 சதவீதம், பெண்களுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீட்டை இந்த 155 வட்டத்திற்குள்ளேயே செய்து கொள்ளலாம். அதிலே நியமனமும் இல்லை, 'கோ-ஆப்ஷனும்' இல்லை— மிக சுத்தமாக, தெளிவாக, இதுவரையில் எந்த ஆட்சியிலும் கொண்டு வராத ஒரு நல்ல அழுத்தமான சட்டத்தை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போல், மதுரையில் செய்ய இயலாததற்குக் காரணம், வார்டுகள் எண்ணிக்கைக் குறைவாக இருப்பது. ஓரளவுக்குப் பெண்கள் போட்டியிட்டு வருவதற்கு இயலாமல் போய் விட்டால், என்ன செய்வது

1990 மே 11] [திரு. கோ. சி. மணி]

என்ற நோக்கத்தோடு, இந்த 8 உறுப்பினர்களைக் கூட நாங்கள் நியமனத்திற்குப் போகவில்லை; அரசாங்கம் நியமிக்கிறது என்று அறிவிக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், பெரும்பான்மையானவர்கள் கூடி, அவர்களை அவர்களே சேர்த்துக் கொள்வது என்றுதான் இந்தச் சட்டத் திருத்தத்தில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். தூய நோக்கத்தோடு இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான அரசியல் நோக்கமும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட ஒரு கருத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள், சந்தேகப்பட்டு, ஏனோ, தானோ என்று சொன்ன செப்டம்பர் 30-க்குள் இந்த 3 மாநகராட்சிகளின் தேர்தல்களையும் நிச்சயமாக நடத்தி விடுவோம் என்ற உறுதிப்பாட்டை உங்களுக்கு நான் இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குள், இந்த இடைவெளி காலத்திற்கு, நாங்களே எல்லா பணிகளையும் செய்கிறோம், எங்களைத்தான் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவர்கள் முகத்திலே பட்டவர்கள் நீங்கள்தான்; காரணம், நீண்ட தினங்களாகி விட்டன. அவர்கள் நகராட்சிமன்ற உறுப்பினர்களைப் பார்த்து. ஆகவே, அவர்கள் உங்களைப் பார்த்துக் கேட்பதிலே ஒன்றும் தப்பில்லை; நீங்கள் வைக்கிற கோரிக்கையிலும் ஒன்றும் தப்பில்லை. எங்களை அழைத்து வைத்து அவர்கள் பேசக்கூடாதா என்று கேட்கிறீர்கள். உள்ளபடியே பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, உங்கள் சார்பில் நான் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரத்திலே குப்பைகள் எடுப்பதிலே ரொம்பத் தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார். தினசரி போய் அந்த வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு நாளாவது மதுரை, கோயம்புத்தூருக்கு வந்தால் எங்களுக்குக் கூட இந்தப் பிரச்சினையே வந்திருக்காது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாநகராட்சியும் எங்களுக்குக் கட்டுப்பட்டதுதான். நான் 3 முறை மதுரை மாநகராட்சிக்கு வந்திருக்கிறேன். அதற்கான சுற்றுப்பயண அறிக்கையையும் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறேன். நான் அங்கு வந்தபொழுது அவரை நான் பார்க்கவும் இல்லை, என்னை அவர் பார்க்கவும் இல்லை. நிச்சயமாகச் சொல்கிறேன், இந்தத் தேர்தல் நடைபெறுவதற்குள் இன்னும் இரண்டு மூன்று முறை நான் மதுரை மாநகராட்சிக்கும் கோவை மாநகராட்சிக்கும் வருவதாக இருக்கிறேன். அப்பொழுது அவர்களுக்குத் தகவலும் தெரிவிக்கிறேன். அவர் என்னிடத்திலே அப்போதிருக்கிற குறைகளைச் சொல்வார்களானால், அதைப் பரிசீலித்து நிச்சயமாகச் செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

12—55 மணி

இன்னொன்று, ஒரு வட்டத்திற்கு திட்டம், அதாவது 'வார்ட் பிளான்' என்ற முறையிலே, கோயம்புத்தூரிலும் மதுரையிலும் தயாரிக்கச் சொல்லி இருக்கிறேன். அப்படித் தயாரிப்பதற்கான அடிப்படை பொதுமக்கள் தந்திருக்கிற மகஜர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற மகஜர்கள், பொது நோக்கோடு இருக்கிற மன்றங்கள், பொது நல மக்கள் மன்றங்கள் இவற்றிடமிருந்து வருகின்ற மகஜர்கள் அடிப்படையில் அவற்றையெல்லாம் தொகுத்து, அதிலே மிக முக்கிய, அத்தியாவசியமான பணிகள் எவை, எவையோ, சுகாதாரக் கேடுகளை அளிக்கக் கூடியவை எவை, எவையோ; அவை அனைத்தையும் தொகுத்து குறிப்பிட்ட கால அளவுக்குள், நிதிநிலையை அதில் காட்டாமல்— அதற்காகத்தான் இதிலே ஒரு குறியீடும் சொல்லி இருக்கிறோம் — மிக முக்கியமான வசதிகளை, இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சற்று எளிதான பணிகளைக் கொடுத்தால், அளித்தால் எது எது நிறைவேற்றத் தகுதியான பணிகள் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு ஒரு பிளானை தயாரிக்க வேண்டுமென்று நான் மதுரை மாநகராட்சிக்கும் கோவை மாநகராட்சிக்கும் அறிவித்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எது எது அவர்களுக்கு உசிதம் என்று கருதுகிறார்களோ அந்தத் தகவல்கள் அனைத்தையும் நீங்கள் இங்கே இருக்கிற ஆணையருக்கு — அவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டார் என்று கருதுகிறேன் — அனுப்பினால் இந்த மாதம் அவற்றை ஏற்றுக்கொண்டு, அடுத்த மாதத்தில் இப்படிப்பட்ட திட்டஆய்வுகளை நாம் செய்வோம். அந்தத் திட்ட ஆய்வுக்கு நானே அந்த மன்றத்திற்கு வருகிறேன் என்று அறிவித்திருக்கிறேன். அதன்படி அறிவித்த உரிய காலத்தில் தேர்தல் நடைபெறுவதற்குள்ளே, இப்போது உறுப்பினர் ஒருவரும் இல்லை; நாங்கள்தான் தொல்லைப்படுகிறோம் என்று சொல்லுகின்ற குறைபாட்டில் இந்த அரசும் பங்கேற்று உங்களுக்கு உதவியாக இருந்து இடைக்காலப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உத்தரவாதம் அளிக்கிறேன் என்று தெரிவித்து, என்னால் இந்த மன்றத்திற்குத் தரப்பட்டிருக்கிற சட்டத் திருத்தத்தை ஏற்று அனுமதி வழங்குமாறு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

1990 மே 11]

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும். "

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause 2, in the proposed new section 5, in sub-section *(2)*, after the words 'seats are so reserved bears to the total population of the City, *add* the words 'not less than 18% irrespective of the total population of Scheduled Castes'.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது முக்கியமான ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் ஷெட்யூல்டு காஸ்ட் 13 சதவீதம் தான் இருக்கிறார்கள் ; அந்த அளவில்தான் இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் கொள்கை அளவிலே நாம் எல்லா இடங்களிலும் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். ஆகவே மறுபரிசீலனை செய்து, ஆதிதிராவிடர்களுக்கு இருக்கிற உரிமையைப் பறிக்காமல் 18 சதவீதம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பெண்களுக்கு 30 சதவீதம் இடம் ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நேரத்தில் மதுரை மாநகராட்சியிலும் கோவை மாநகராட்சியிலும் 30 சதவீதம் ஒதுக்கிய பிறகு எப்படி பெண்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் போய் விடுவார்கள் ? கண்டிப்பாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆகை யால் ' கோவாப்ஷன்' செய்யவேண்டியது இராது. ஆகவே, அந்த 30 சதவீதத்தை சரியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டு, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மத்திய அரசால் தயாரிக்கப் பட்டு, நிறைவேற்றப்படாமல் இருக்கிற இந்தச் சட்டத்தில், நாம் அதில் இருக்கிற பல நன்மைகளை ஏற்று, தீமைகளை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் போர்க் குரல் கொடுத்தது உங்களுக்கு தெரியும். அப்படிப்பட்ட இந்தச் சட்டம் நிறை வேற்றப்படாமல் போனதால் இந்த நல்ல திருத்தங்களின் அடிப்

படையிலே நாம் இந்த மன்றத்திலே ஏற்றிருக்கிறோம். அதிலே தான் மக்கள் விழுக்காட்டின் அடிப்படையில் இப்படிப்பட்ட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று இருந்தது. அதைத்தான் நாம் ஏற்கனவே நிறைவேற்றியிருக்கிறோம். அந்த அடிப்படை யிலேதான் சென்னை மாநகரில் கணக்கு எடுத்துப் பார்த்தபோது 13.5 சதவீதம் இருந்த காரணத்தால் அந்த அளவுக்கு ஒதுக்கீடு உண்டு. கோவையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அறிவித் திருக்கிறோம். ஆனால் அவைகளை விட்டு, வட்டங்களைப் பிரிக்கும்போது சில சர்ச்சைகள் வரும். அதனால் உயர்திரு. வெங்கடேசன் ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இது இது, இன்ன வட்டம் என்று அறிவிக்க இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்களானால் நாம் 'கோவாப்ஷன்' வைக்க வேண்டியதில்லை. ஒருகால் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் என்ன செய்வது என்பதற்காகத் தான் இந்த மன்றத்தில் அந்த அதிகாரத்தைக் கேட்கிறோமே தவிர அவர்களுடைய சதவீதம் அளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட் டால் இந்த 8 சதவீதம் கோவாப்ட் செய்ய வேண்டிய அவசியம் நிச்சயமாக இராது. அப்படி இல்லாவிட்டால் என்ன செய்வது என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்திலே அது இணைக்கப்பட் டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

பிரிவுகள் 3 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

13.00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மே 11]

பிரிவு 15.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 15, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும். "

Thiru S. D. UGAMCHAND : Mr. Speaker Sir, I move the following amendment :

"(1) In Clause 15, in the proposed new section 5, in sub-section (2), after the words 'seats are so reserved bears to the total population of the City, *add* the words 'not less than 18% irrespective of the total population of Scheduled Castes.'

(2) in Clause 15, in sub-clause (4) *omit* the word 'co-opted.'

(3) in Clause 15, *omit* sub clause (6)

The amendment was duly Seconded

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய திருத்தம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 15, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 16.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 16, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

Thiru S. D. UGAMCHAND : Mr. Speaker Sir, I move the following amendment :

"In Clause 16, in the proposed sub section (1) for the words 'seventy two wards', substitute the words 'Eighty wards.'"

The amendment Was duly seconded.

[1990 மே 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 16 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 17 முதல் 19 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 20.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு, 20, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் ;

"In clause 20, in the proposed new section 5, in sub-section *(2)* after the words 'seats are so reserved bears to the total population of the City, *add* the words 'not less than 18% irrespective of the total population of Scheduled Castes'

2. In Clause 20, in sub-clause (4), omit the word 'co-opted'

3. In Clause 20, *omit* sub'clause *(6)*'

The amendment was duly seconded.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 20 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

1990 மே 11]

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மெக்கானிகலாக திருத்தங்களை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "Point of order" எதுவும் இல்லை.

பிரிவு 21.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 21 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.'

Thiru S. D. UGAMCHAND : Mr. Speaker Sir, I move the following amendment:

'In Clause 21, in the proposed sub-section (1) for the words 'seventy two division,' *substitute* the words 'Eighty divisions,''

The amendment was duly seconded

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு,

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

பிரிவு 21 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 22 முதல் 24 வரை, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. கோ. சி. மணி] [1990 மே 11

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவையிலே ஒரு விசாரணைக் கமிஷன் தீர்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அதில் பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டிய நிலையில் இருப்பதால், அதற்கான நேரத்தையும், நாளையும் தாங்கள் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைப்படி அறிவிப்புக் கொடுக்கவும்.

9. மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் துணை நிதிநிலை அறிக்கைகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள் மீதான விவாதம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988-89, 1989-90 மற்றும் 1990-91 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் மீது இம் மாமன்றத்தில் விவாதத்தைத் தொடங்கி வைத்து, நான் ஆற்ற வேண்டிய உரையை, மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக என் பேச்சை நூல் வடிவாக இம்மன்றத்தில் வைத்திருக்கிறேன். அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் மேலான கருத்துக்களைக் கூறியவுடன், இறுதியில் சில கருத்துக்களைச் சொல்கிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் என் உரையை *சபை நடவடிக்கைக் குறிப்புகளில் ஏற்றிட தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

13.05 மணி

* பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே வைத்திருக்கிற மின் வாரிய அறிக்கையில் 377.97 கோடி ரூபாய் பற்றாக்குறை இருப்பதை மின் கட்டண உயர்வு மற்றும் அரசு உதவி இவற்றால் சரி செய்ய

* 150–184 ஆம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளது.

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவையிலே ஒரு விசாரணைக் கமிஷன் தீர்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அதில் பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டிய நிலையில் இருப்பதால், அதற்கான நேரத்தையும், நாளையும் தாங்கள் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைப்படி அறிவிப்புக் கொடுக்கவும்.

9. மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் துணை நிதிநிலை அறிக்கைகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள் மீதான விவாதம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988-89, 1989-90 மற்றும் 1990-91 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் மீது இம் மாமன்றத்தில் விவாதத்தைத் தொடங்கி வைத்து, நான் ஆற்ற வேண்டிய உரையை, மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக என் பேச்சை நூல் வடிவாக இம்மன்றத்தில் வைத்திருக்கிறேன். அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் மேலான கருத்துக்களைக் கூறியவுடன், இறுதியில் சில கருத்துக்களைச் சொல்கிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் என் உரையை *சபை நடவடிக்கைக் குறிப்புகளில் ஏற்றிட தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

13.05 மணி

* பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே வைத்திருக்கிற மின் வாரிய அறிக்கையில் 377.97 கோடி ரூபாய் பற்றாக்குறை இருப்பதை மின் கட்டண உயர்வு மற்றும் அரசு உதவி இவற்றால் சரி செய்ய

* 150–184 ஆம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளது.

விருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறிக்கையில், அடுத்து கழகம் என்ன செய்ய இருக்கிறதென்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. 1995-ல் பற்றாக்குறை 3,000 மெகாவாட்டாக இருக்குமெனவும், 2,000-ல் 6,000 மெகாவாட்டாக இருக்குமெனவும் அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆண்டுக்கு 600 மெகாவாட் கூடுதல் மின்சாரம் தேவைப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் இப்போது மின் கழகம் அறிவித்துள்ள ஆண்டுக்கு 300 மெகாவாட் என்பது நிச்சயமாகப் போதாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நெய்வேலியில் நான்காவது சுரங்கம் அமைப்பதற்கும், அனல் மின் நிலையம் அமைத்து, அதில் 50 விழுக்காடு தமிழ் நாட்டுக்குத் தரவும், மத்திய அரசை வற்புறுத்த வேண்டிய காலக் கட்டம் வந்திருக்கிறது. வர இருக்கும் அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தியிலும் 75 விழுக்காடு தமிழகம் பெறுவதற்கும் வற்புறுத்த வேண்டும். மின் பற்றாக்குறையை எதிர் நோக்கி, 'ஆக்ஷன் பிளான்' தயாரித்து, அதை விரைந்து செயல்படுத்த வேண்டும். இந்த ஆண்டு பிளான் அவுட்லே சென்ற ஆண்டைவிட 90 கோடி அதிகமென்று கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இது ஏறத்தாழ கண் துடைப்பு போலத்தான் இருக்கிறது. ஏனென்றால், சென்ற ஆண்டே அது மிக மிகக் குறைவு என்பதை அறிக்கையிலே பார்த்தோம். பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் ஏசியன் டெவலப்மெண்ட் பேங்க் போன்றவற்றில் இதற்கான நிதி ஆதாரத்தைப் பெற விரைந்து முயற்சி எடுக்க வேண்டும். தடையின்றி, தனியார் மின் உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு உறுதி அளித்திருப்பது போல, அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.

1987லே எங்களுடைய ஆட்சி இருந்தபோது இந்த மின் கட்டணம் எப்படி இருந்தது என்பதற்கும், இப்போது எப்படி இருக்கிறது என்பதற்கும் ஒரு ஒப்புமை தேவைப்படுகிறது. 1987-ல் டேரிப் 1, 55 பைசாவாக இருந்தது, இப்போது 3 டையரில் 55 பைசா, 65 பைசா, 70 பைசா என்று மாற்றி அமைக்கப்பட்டு, அதைக் கணக்கிடுவதிலே சில தவறுகள், சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்பதால், இவற்றை இரண்டு டையராக மாற்ற வேண்டும். டேரிப் இரண்டு—பப்ளிக் லைட்டிங்—50 பைசாவாக இருந்தது, இப்போது 75 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. டேரிப் 3, 45 பைசாவாக இருந்தது, 70 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. டேரிப் 4—பவர் லோட்ஸ்—95 பைசாவாக இருந்தது, இப்போது 120 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. டேரிப் 7, 78 பைசாவாக இருந்தது 103 பைசா என்றும், 115 பைசா இருந்தது 140 பைசா என்றும் உயர்த்தி இருக்கிறீர்கள். இந்த உயர்வுகள் நடுத்தர மக்களையும் பாதிக்கும் என்பதால்

அதைக் குறைப்பதற்கு அல்லது ஓரளவுக்கு அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கின்ற அளவுக்கு இதை மாற்றி அமைக்க முன்வர வேண்டும். விவசாயப் பம்பு செட்டுகளின் மின் இணைப்பு 1987லே 68 ஆயிரத்திற்கும் அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பின்வந்த ஆண்டுகளில் 40 ஆயிரத்திற்குச் சற்று அதிகமாகத்தான் தரப்பட்டிருக்கிறது. இதை அதிகரிக்க வேண்டும்.

சென்ற ஆண்டு குடிசைகளுக்கு மின்சாரம் தந்தது 42,000. இந்த ஆண்டு 40,000 என்று டார்ஜெட் வைத்திருக்கிறார்கள். அதை அதிகப்படுத்த வேண்டும். அதோடுகூட 1—6—1990-லிருந்து சிங்கிள் பேஸ் மீட்டர் வைப்பதற்கு 200 ரூபாய் என்றும், 3 பேஸ் மீட்டர் பொருத்த 500 ரூபாய் என்றும் மாற்றி அமைத்திருப்பதாகவும், அது 1—6—1990 முதல் நடைமுறைக்கு வர இருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். இது மிகவும் அதிகம். பஞ்சாயத்து தெரு விளக்குகளுக்கு முன்பு ஒரு பாயிண்டுக்கு 60 ரூபாய் கட்டினால் போதும், இப்போது அதை 500 ரூபாயாக மாற்றி இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இது மிகவும் அதிகம் என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்து, அதைக் குறைக்க வேண்டும். சிறு தொழில்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். 1989-லே இருந்து அவர்கள் ஜெனரேட்டர்கள் வாங்க அரசு சப்சிடியாக 15 சதவிகிதம் தர முன்வர வேண்டும்.

செங்கை மாவட்ட மின் இணைப்பு நிறைவு விழா 1971லே நடந்தபோது மாண்புமிகு அன்றைய முதலமைச்சரவர்கள் அங்கே பேசுகிறபோது சொன்னார்கள். அப்போது மறைந்த புரட்சித் தலைவர் அவர்கள் சிறு சேமிப்புத் துணைத் தலைவராக அந்த விழாவிலே பங்கெடுத்துக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசியபோது, செங்கை மாவட்டம் என்று பெயர் வைத்தது மிகவும் பொருத்தமானது, ஏனென்றால் கொடுத்துச் சிவந்த கைகளுக்குச் சொந்தக்காரரான எம்.ஜி.ஆர். அவர்களே இங்கே இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கழக சர்க்கிளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'' பொன்சாரம் இழைந்தோடும் பூமான்கள் இல்லங்களில் தான் மின்சாரம் பாயுமென்ற நிலை மாறி என்னரும் தமிழ்நாட்டில் எங்கணும் மின்சாரம் எழுபத்திரண்டுக்குள் வந்துவிடும் ''.

என்று கவி நயத்தில் அன்று முதலமைச்சரவர்கள் அங்கே சொன்னார்கள். இப்போதுகூட ஏறத்தாழ 197 ஊர்களிலே மின் வசதி இல்லை என்பதை 1—4—1989 நிலவரப்படி டி. என். இ. பி. ஸ்டாடிஸ்டிக்ஸ் அட் எ கிளான்ஸ் என்று புத்தகம் சொல்லுகிறது. இதை நிறைவு செய்ய அரசு முன் வர வேண்டும்.

அடுத்து ஷிப்டிங் ஆப் சர்க்கிள்ஸ். 29 வட்டங்கள் செயல்படுகின்றன. மின் கழகத்தில். மக்களின் வசதி கருதி 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகியவை

13–10 மணி

இது இரண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதே இடத்திலேயே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. பிரிக்கப்பட்டதன் நோக்கம் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதான். நெடுந் தொலைவிலிருந்து மக்கள் இங்கு வர வேண்டாம் என்பதற்காகப் பிரிக்கப்பட்டது. ஆனால் அங்கேயே செயல் பட்டுக் கொண்டு இருக்கிறது. அது எந்தெந்த இடங்களிலே செயல்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்து அந்தந்த இடங்களுக்கு மாற்றி அமைக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தஞ்சாவூரிலே "வெஸ்ட்", "ஈஸ்ட்" என்று இரண்டாகப் பிரித்தார்கள்; ஆனால் இன்னும் மாற்றப்படவில்லை. அங்கு பணியாளர்களை அமர்த்தி, ஆர்டர்ஸ் கூட போட்டு ஆகிவிட்டது. ஆனால் அங்கே மாற்றப்படவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை. அதுபோல் இராமநாதபுரத்தில் இரண்டு மாவட்டங்கள் 'கவர்' ஆகிறது. டெக்னிகல் ஆபீஸ் பரமக்குடியில் இருக்கிறது. முதல் புரபோசல் பரமக்குடியிலே என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அதை மாற்றி விட்டார்கள். பின்னர் மானாமதுரை என்று சொன்னார்கள். அதற்கு ஆர்டரும் போட்டுவிட்டார்கள். ஆனாலும் அதையும் கேன்சல் செய்துவிட்டு இப்போது சிவகங்கை என்று சொல் கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட குழப்பங்கள் தீர வேண்டும் என்பதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில்தான் மின்வாரிய ஊழியர்களுக்கு பென்ஷன், கிராஜுட்டி, ஃபேமிலி பென்ஷன் போன்றவற்றைக் கொடுத்தார்கள். ஆனால் அந்த

நேரத்திலே ஓர்க்கர்ஸ் செட்டில்மெண்ட் வந்தபோது இண்டஸ்டிரியல் சர்வீஸ் சொசைட்டி என்று ஆரம்பித்து அது எண்ணூர், தூத்துக்குடி மேட்டூர் போன்ற இடங்களிலே செயல் பட்டது. மற்ற ''ஆபரேஷன்அண்டு மெயின்டெனன்ஸ்'' இடங் களுக்குஅது பரவலாக்கப்படும் என்று சொன்னார்கள். இன்னும் அது பரவலாக்கப்படவில்லை. 31-7-1989-லே கையெழுத்து இடப் பட்டது இன்னும் நிலுவையில் இருக்கிறது. அதை விரைவில் செயல்படுத்த வேண்டும். இறந்தவர்களின் வாரிசுகளுக்கு வேலை தருவதாகச் சொல்லி 300 பேரை வேலையில் அமர்த்தி இருக்கிறார்கள். வேலை கொடுக்கப்பட்டவர்களுக்கு எல்லாம், அவர்களை நேரடியாக வரவழைத்து, அமைச்சர் அவர்களே அந்த வேலை உத்திரவை கொடுத்தார்கள் என்றுசெய்தித்தாளிலே பார்த்தேன். அப்படிப்பட்ட அக்கறை உள்ள இந்த அரசு இன்னும் காலியாக இருக்கின்ற இடங்களையும் நிரப்பு வதற்கு, இன்னும் இறந்தவர்களின் வாரிசுகள் யார் யார் வேலை இல்லாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கும் அந்த வேலை விரைவில் கொடுக்கப்பட வேண்டும். வேஜ் போர்டில், ஹெட்குவார்டர்ஸில் பணியாற்றுகிற 'அசிஸ்டண்ட் இன் அட் மினிஸ்டிரேடிவ் கேடரில் இருப்பவர்களுக்கு ரூ. 1210-லிருந்து ரூ. 1,620 என்று செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்டு இருக்கிறது. உண்மையிலேயே அவர்களுக்கு ரூ. 1,680 தர வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

ஃபிரி எலக்ட்ரிசிட்டி—கர்நாடகத்தில் இருப்பது போல அவர் களுக்குத் தருவதாக ஒரு வாக்குறுதி தரப்பட்டு இருக்கிறது. ஃபிரி எலக்ட்ரிசிட்டி அவர்களுக்கு கொடுக்க முடியவில்லை என்றாலும், எலக்ட்ரிசிட்டி அலவன்ஸ் கொடுத்தால் சரியாக இருக்கும்.

இந்த குழுமத்தில் வாடகை வாகனங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இதனால் பெருவாரியான பணம் வீணாகிறது. அதற்குப் பதிலாக குழுமமே வாகனங்களை வாங்குவதற்கு முன்வர வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு மிக இன்றியமை யாத இலாக்காக்களை கையில் வைத்துக்கொண்டு இருக் கிறார்கள். பணிப் பளு மிக அதிகமாக இருக்கிறது. நானும் செய்தித்தாள்களில் அடிக்கடி பார்க்கிறேன். அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு அடிக்கடி வந்து விடுகிறார்கள். ஆகவே இந்தப் பணிப் பளுவைச் சற்று குறைக் கின்ற அளவுக்கு அவருக்கு ஏற்பாடு செய்து கொடுத்து, அவர்கள் நல்ல ஓய்வோடு, நல்ல முறையிலே பணியாற்ற வாய்ப்புத் தரப்பட வேண்டும்.

கல்பாக்கத்திலும், கூடங்குளத்திலும் வர இருக்கின்ற அணு மின் நிலையத்திலும் விபத்துகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அதைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். ''கூடங்குளம் அணுமின் நிலையத்தால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் பரிசீலிக்க மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து ஒரு நிபுணர் குழுவை அமைக்கும்'' என்று 1989, மார்ச் மாதத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழு அமைக்கப்பட்டதா? அதிலே யார் யார் இருக்கிறார்கள்? அறிக்கை வந்து இருக்கிறதா விவரம் என்ன என்பதை இந்த அவை உறுப்பினர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முன வர வேண்டும்.

18—4—1990-லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது ''கூடங்குளம் அணுமின் நிலையம் ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டி இருப்பதால் அதில் 75 சதவீதம் மின்சாரத்தையாவது நமக்குத் தர வேண்டும்'' என்று மத்திய அரசிடம் கேட்டு இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ரிஸ்க் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். ரிஸ்க் என்பது சாதாரண ரிஸ்க் அல்ல. இதிலே நாம் செர்னோபிலையும் இங்கிலாந்தில் என்ன நடக்கிறது என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். எப்படிப்பட்ட விபத்துக்கள் வந்தன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால் மனிதர்கள், கால்நடைகள், விவசாயச் சூழ்நிலைகள், சமுதாய அமைப்புகள், வாழ்க்கைச் சூழ்நிலை—அத்தனையும் பாதிக்கின்ற அளவுக்குக் கதிரியக்கம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, செர்னோபிலில் ரிஸ்க் 1986-ல் ஏப்ரல் மாதத்தில் வந்த போது, 1,100 பஸ்களை அங்கே நிறுத்திவைத்து, நூறு கிலோ மீட்டர் அளவுக்கு கதிரியக்கத்தால் பாதிக்கப்பட இருப்பவர்களைக் காப்பாற்றினார்கள் (மணி அடிக்கப்பெற்றது)—அதுபோல் இங்கேயும் ஆபத்துகள் வர வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால், அதற்கான சூழ்நிலைகளை நாம் உணர்ந்து தற்காப்பு நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும்.

அதுபோல் இந்த அணுமின் நிலையங்களுக்கு வருகின்ற முதலீட்டின் அடிப்படையிலே நிலக்கரி, பழுப்புக் கரி, எரி வாயு— இவைகளைப் பயன்படுத்தி அதிக மின்சாரத்தைப் பெற முடியும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். பம்பாயில் வீணாகின்ற எரிவாயுவை குழாய்கள் மூலம் இங்கே கொண்டுவந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி இருப்பதாகச் சொன்னார்கள். ஏறக்குறைய செலவு ஒன்றாகத்தான் இருக்கும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இது சேர்க்கப்பட்டு நமக்கு எரிவாயுவிலே இருந்து மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

13-15 மணி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மின் வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்ற சில செய்திகளின் அடிப்படையில் அடுத்தும் மின்சார வாரியம் மீண்டும் கட்டணத்தை உயர்த்துவதற்கு வாய்ப்பு இருப்பதைப் போலத் தோன்றுகிறது. நெய்வேலியிலே லிக்னைட்—இராயல்டி கொடுத்துவிட்டு மின் கட்டணத்தை உயர்த்துவோம் என்று அவர்களே சொன்னதாகச் செய்தித்தாளிலே வந்திருக்கிறது. அதற்கு முன்பாகவே இந்த வாரியம் மின் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறது. ஆகவே, மீண்டும் ஒரு மின் கட்டண உயர்வு வராத அளவிற்கு இந்த அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின் வாரியத் துறை அமைச்சரவர்களால் 1989, 1990, 1991 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டுதோறும் மின் வாரியத்திற்கு என்று தனியாக நாட்கள் ஒதுக்கப்படும். அதிலும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்திலே இந்த மின் வாரியத்திற்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தெளிவான விரிவான விவாதம் நடத்தப்படும். ஆனால் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப்புக்கு வந்த பின்னால், இந்த ஆண்டு இந்த பட்ஜெட் தொடரிலேயே மின் வாரியத்திற்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, வேகம் வேகமாக ஒரே நாளிலே இந்த மின்சார வாரியத்திற்கான நிதிநிலை அறிக்கையை—மின்சார வாரியத்தினர் மிகக் கஷ்டப்பட்டுத் தயாரித்து, நம்முடைய மின் வாரியத்திற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே நீண்ட உரையை விளக்கமாகத் தந்திருக்கிறார்கள். ஆனால் பல்லாண்டுக் காலமாகக் கடைப்பிடித்து வருகின்ற மரபிலே நாம் எங்கே மாறுபடுகிறோமோ என்று நான் ஐயப்படுகிறேன்.

1990 மே 11] [திரு. வே. தங்கபாண்டியன்]

ஏறக்குறைய இரண்டாயிரம் கோடி ரூபாயைத் தொடுகின்ற இந்த மின்சார வாரியத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தை ஒரே நாளிலேயே வேகமாக நிறைவேற்றுவதன் மூலம் தமிழகத்திலே மிக அத்தியாவசியம் என்று கருதப்படுகிற இந்தத் துறையின் மீது, அதுவும் பட்ஜெட் தொடருடைய கடைசிக் கட்டத்தில் சபையே களைத்துப் போயிருக்கின்ற இந்தத் தருணத்தில் இவ்வளவு வேகமாக இதை நிறைவேற்ற வேண்டுமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் கடந்த ஆண்டு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை, மின்சார வாரியத்தினுடைய தலைவர் மிகக் கெட்டிக்காரர். மிகப் பெரிய பொறுப்பான பதவியிலே இருப்பவர்; மிகக் கண்ணும் கருத்துமாக இந்தத் துறையைக் கவனித்து வரும் தலைவர்—நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் புதிதாக, வேகமாக மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற ஆர்வம் உள்ள அமைச்சரவர்கள் அந்தத் துறையை அண்மையிலே பொறுப்பேற்றிருக்கின்ற தருணத்தில் அடுத்த ஆண்டிலேயாவது கடந்த காலத்திலே ஐந்து நாட்கள், ஆறு நாட்கள் என்று தெளிவாக நிதிநிலை அறிக்கையிலே விவாதத்திலே பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது. என்றாலும், காலத்தின் அருமை கருதி வேகப்படுத்துகிறோம்.

ஆனால் ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பொதுப்பணித் துறையைத் தன்னுடைய 'பெட் சைல்ட்' ஆக வைத்திருந்தார். செல்லக் குழந்தையாகப் பொதுப் பணித் துறையை வைத்திருந்தார். அவரிடம் நெடுஞ்சாலைத் துறை கொடுக்கப்பட்டது. அதையும் சிறப்பாகச் செய்தார். இப்பொழுது புதிதாக அவரிடம் மின்சார வாரியம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஏறக்குறைய தமிழகத்திலுள்ள 70 சதவீத என்ஜீனியர்கள் அவருடைய கட்டுக் கோப்பில் இருக்கிறார்கள். எப்படிப் பொதுப் பணித் துறையிலே அவருடைய முழுக் கவனம் செலுத்தி, அதிலே விரைவுபடுத்தி, சிறப்பான திட்டங்களைச் சிறப்பான அம்சங்களை உருவாக்கித் தந்தார்களோ

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த மின்சார வாரியம் மிகப் பெரிய பட்ஜெட், இதற்கெல்லாம் நேரம் போதாது, ஒருநாள் போதாது, ஒரு பத்து நாள் நடத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசினார்கள், இவ்வளவு நேரம் பேசியது, அமைச்சரைப்பற்றி, வாரியத் தலைவரைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறாரே, இந்த விவாதம் மின்சார வாரியத்தைப்பற்றி நடக்கிறதே தவிர அமைச்சரைப் பற்றியோ அல்லது வாரியத்தினுடைய தலைவரைப் பற்றியோ நடைபெறவில்லை என்பதை அவர்கள் தெரிந்து கொண்டுதான் பேசுகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவருடைய தொகுதியிலே ஒரு Sub-Station கேட்டிருக்கிறார்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதற்கும் ஒரு மூல காரணம் இருக்கும்; மூல பலம் இருக்கும், அந்த மூல பலத்தை நாம் குறிப்பிட்டுச் சொன்னால்தான் வேலைகள் வேகமாக நடக்கும். இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய துறையைப் பற்றிச் சொல்லியிருந்தால் சந்தோஷப் பட்டிருப்பார்கள். ஆனால், இன்னொரு துறையைப் பற்றிச் சொல்லும் பொழுது அவர் கொஞ்சம் தர்மசங்கடத்திலே இருக்கிறார் என்று நான் கருதுகிறேன். இதையெல்லாம்—இந்தப் பின்னணியைச் சொல்வதற்குக் காரணம், இந்தத் துறையினுடைய முக்கியத்துவத்தைக் கருதித்தான்.

ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் மின்சார வாரியத்திற்கு என்று தனி பட்ஜெட் செப்டம்பர் மாதத்திலே இருக்கும். அதிர்ஷ்டவசமாக எப்பொழுதுமே ஏன் கோடைக் காலத்திலே வைத்துக் கொள்ள மாட்டோம் என்றால், தமிழகத்திலே கோடை காலத்திலே மின் தட்டுப்பாடு இருக்கும். சென்ற ஆண்டு இதே காலக் கட்டத்திலே 60 சதவீதம், 80 சதவீதம் மின் தட்டுப்பாடு—எங்கே பார்த்தாலும் கடுமையான விமர்சனங்கள் இருந்தன. அவருடைய யோகம்—நம்முடைய மின்சார வாரிய அமைச்சருடைய யோகம்—அவர் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த காலத்திலே நீர்த் தேக்கங்கள் இந்தப் பருவக் காலக்காற்றிலே இந்த ஆண்டு சரியாக இருந்தது.

13-20 மணி

ஆகவே, இந்த ஆண்டு இயற்கை அவருக்கு கை கொடுத்திருக்கிறது. புனல் மின்சாரமும், அனல் மின்சாரமும், அணு மின்சாரமும்—தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொன்னாரே, 'அனலில், புனலில், காற்றசைவில், கதிரொளியில், கடலலையில், என்று இப்படி அனைத்து பகுதிகளிலிருந்தும் உருவாகிற சக்தியை ஒன்று திரட்டி தமிழகத்திற்காக பயன்படுத்துகிறோம். மாண்புமிகு பொன்னுசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆண்டுதோறும் நம்முடைய மின்சாரத் தேவை கூடிக்கொண்டே வருகிறது. ஆனால் மின் உற்பத்தியில் புனல் மின்சாரத்தில் ஒரு தேக்கநிலை அடைந்துவிட்டது. இனிமேல் எந்த நீர்த்தேக்கத்திலிருந்தும் மின்சாரத்தை தயார் செய்ய முடியாத நிலை வந்துவிட்டது. அதைப்போலவே அனல் மின்சாரத்திலும் ஒரு நிலை உருவாகி இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பை கொடுத்திருக்கிறார்கள். வடசென்னையில் முதல் இரண்டு பிரிவுகளில் 420 மெகாவாட் கூடுதலாகவும், மூன்றாவது பிரிவில் 210 மெகாவாட் கூடுதலாகவும் உற்பத்தி செய்ய இருக்கிறோம். ஆகவே ஒட்டுமொத்தமாக வட சென்னையில் இருக்கிற அனல் மின் நிலையத்தின் 2050 மெகா வாட் உற்பத்தி நிலையை அடைய வேண்டுமென்ற இலக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல தூத்துக்குடி இரண்டாவது பிரிவின் மூலமாக ஏறக்குறைய 420 மெகா வாட் கூடுதலாக அடைய வேண்டுமென்று 135 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்.

அதைத்தவிர நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு பொன்னுசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல எரிவாயு மூலமாக ஜப்பான் நாட்டு உதவித் திட்டத்தில் வடசென்னையில் மின்சார உற்பத்தி செய்வதற்கும், காவிரியில் கிடைக்கிற எரிவாயுவை பயன்படுத்தி தனியார் துறையிலோ, அரசுத் துறையிலோ, கூட்டுத்துறையிலோ அல்லது வெளிநாட்டு உதவியிலோ அதிகமான மின் உற்பத்தியை பெற அரசு ஈடுபடும் என்றும், மின்வாரியம் ஈடுபடும் என்றும் கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். இப்படியெல்லாம் வேகமாக வளர்ந்து வரும் நம்முடைய நாட்டின் மின்சாரத் தேவையைக் கருதி அரசும், வாரியமும் செயல்படுகிறது. இதையும் கடந்து நம்முடைய தேவை அதிகரிக்கிறது. அப்படி கூடுகிறபோது Necessity is the mother of invention. இப்போது மின்சாரம் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். Indispensable. தனி மனிதனுடைய வாழ்க்கைக்கு, நாகரீகத்திற்கு, முன்னேற்றத்திற்கு, பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரம் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வரவேற்புக் கூட்டத்தில் சொன்னார். சம்சாரம் இல்லாமல் இருந்து விடலாம். ஆனால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது என்று நகைச்சுவையாகச் சொன்னார்கள். எனவே, மின்சாரம் அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருகிறது. இப்படி மின்சாரத் தேவை நமக்கு இருக்கிறபோது, தமிழ்நாட்டில் மின் உற்பத்தி இலக்கை எல்லா வகையிலும் எட்டியிருக்கிறோம். புதியதாக, அடிஷனலாக மின்தேவையை ஈடுகட்டுவதற்கு.............

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, மின்சாரம் நம்முடைய நாட்டில் வருவதற்கு முன்பே சம்சாரம் எல்லாம் இருந்து இருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். மின்சாரம் இல்லாவிட்டால், ஜெனரேட்டர்

வைத்துக் கொள்ளலாம், ஹரிகேன் லைட் வைத்துக்கொள்ளலாம். இல்லையென்றால் பெட்ரோமாக்ஸ் லைட் வைத்துக்கொள்லாம். மின்சாரம் அப்படி ஒன்றும் சம்சாரத்தை விட பெரிய விவகாரம் இடையாது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாண்டியன் அவர்கள் இப்படி சொல்லி, இந்த செய்தியை வீட்டிற்கு எடுத்துப் போனால்தான் அவருக்கு அங்கே வரவேற்பு இருக்கும் என்ற நிலைமை போலும்....(சிரிப்பு).

திரு. வே. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, இன்றைய நாகரீக உலகில் சம்சாரம் இல்லாமல் காலம் தள்ளிவிடலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது......

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, அதாவது, மின்சார அமைச்சரிடம் எதை வேண்டுமானாலும், தனியாகக் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால், நாட்டிலே மின்சாரத்தை விட வீடு தான் முக்கியம்.. ..(சிரிப்பு)

திரு. மு. இராமநாதன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்....மாண்புமிகு உறுப்பினருக்கு வாழ்க்கையில் ஏதாவது விரக்தி ஏற்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்....(சிரிப்பு).

திரு. வே. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, மின்சார பற்றாக் குறையை ஈடுகட்டுவதற்கு பல்வேறு நாடுகளில் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு, குறிப்பாக தமிழகத்தில் அதற்கு வாய்ப்பு இருக்கிறது, தமிழகம் வெப்பமான பகுதியாக இருக்கிறது, தமிழகத்தில் அதிகமான காற்று வீசுகிறது என்றெல்லாம் நிபுணர்கள் கருத்து சொன்ன காரணத்தினால் 'விண்ட் மில்' மூலமாக, காற்றாலைகள் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அதனை Main Grid-களுக்குக் கொடுக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அதற்கு போதுமான நிதியுதவியை மத்திய அரசு கொடுக்க தயாராக இருக்கிறது. அந்தத் திட்டம் இன்றைக்கு தூத்துக்குடி சிதம்பரனார் மாவட்டத்தில் பரீட்சிக்கப்பட்டு, அது நல்ல முறையில் வெற்றிகரமாக செயல்படுகிறது என்ற செய்தியை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வீடுகளில் சோலார் சிஸ்டம் மூலமாக மின் உற்பத்தி செய்யலாம். அதிலே மிகக் குறைந்த அளவில்தான் மத்திய அரசு இலவசமாக கொடுக்கிறார்கள். அதையும் பரிசீலித்துப் பார்த்தால் நம்முடைய தேவையை ஓரளவிற்கு ஈடுகட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும். நாம் இங்கே புதுமையான காரியங்களைச் செய்வதற்கு நம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

1990 மே 11] [திரு. வே. தங்கபாண்டியன்]

13-25 மணி.

இன்னமும் மின்சார வாரியத்தினுடைய அணுகுமுறை, வேகங்கள் இன்றைக்கு மிக அதிகமாக இருந்தாலும் கூட, இப்படிப் பட்ட புதிய கண்டுபிடிப்புகளைத் தீவிரமாகச் செய்வதற்கு இந்த அரசும் வாரியமும் முன்வரவேண்டும் என்று இந்த நேரத் திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எல்லோரும் சொல்வதைப் போல ஒரு கருத்து. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எவ்வளவு தான் நாட்டினுடைய பொருளாதாரத்திலே வேகமாக நீங்கள் தொழில்துறையை மிகைப்படுத்தினாலும் கூட, என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் விவசாயத் துறைக்கு மின்சாரம் முழுமையான அளவிற்குப் பயன்பட்டாக வேண்டும். நம்முடைய மின்சார வாரியம் ஒரு தயக்கம் காட்டுகிறது. காரணம் தொழிற் துறைக்கு — அது சிறிய தொழிலாக இருந்தாலும் சரி, பெரிய தொழிலாக இருந்தாலும் சரி—மின்சாரம் வழங்குகின்றபோது, அவர்களுக்கு ரிடர்ன்ஸ் இருக்கிறது, வருமானம் இருக்கிறது. தாங்கள் கொடுக்கிற டிஸ்ட்டிரிபியூசனுக்கு ஏற்ற அளவிற்கு வருமானம் இருக்கிறது. ஆகவே வேகமாக தொழிற்துறைக்கு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அதே சமயத்தில் இன்றைய தினம் உணவு உற்பத்தியிலே ஏறக்குறைய 30, 40 சதவீதம் தான் நீர்ப்பாசன ஆதாரங்கள் மூலமாக, இன்றைக்குக் கண்மாய் பாசனம், ஆற்றுப் பாசனம் மூலமாக நடைபெறுகிறது. ஏறக்குறைய 60 சதவீதம் நீர் ஊற்றுக்களின் மூலமாகத்தான் இன்றைக்கு தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படிப்பட்ட 60 சதவீதம் உணவு உற்பத்திக்கு மிக அதிகமாகத் தேவைப்படுகிற இந்த மின் சாரத்திற்கு நாம் ஒரு காலக்கெடு வைத்துக் கொண்டு செய் கிறோம். அதிலே இன்றைக்கு பல சலுகைகளை அளித்திருக் கிறார்கள். ஆண்டுக்கு 40 ஆயிரம் என்ற அளவிலே சென்ற ஆண்டு 41 ஆயிரம் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு 40 ஆயிரம் என்ற இலக்கும், அதே போல் குடிசைகளுக்கு சென்ற ஆண்டு 40 ஆயிரம் குடிசைகளுக்கு கொடுத்து, இந்த ஆண்டும் அதே அள விற்கு குறியீட்டு அளவை நிர்ணயித்திருக்கிறோம். நான் இதிலே மாறுபடவில்லை. ஏறக்குறைய கழக ஆட்சி இருந்த காலத்திலே 5 லட்சம் பம்ப் செட்டுகள் என்று குறியீடு வைத்துக் கொடுத்தோம். தமிழகத்திலே இதுவரைக்கும் ஏறக்குறைய 12 லட்சத்து 77 ஆயிரம் அளவிற்கு பம்ப் செட்டுகளுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது, இந்த ஆண்டு வரை.

நான் என்னைப் பொறுத்தவரையில், இந்த மின்சார வாரி யத்தைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த மின்சார வாரியம் விவசாயிகளுக்கு மின் இணைப்பைக் கொடுப்பதிலே சென்ற ஆண்டு ஒரு முறையைப் பின்பற்றியது. அதாவது

In the line post ஏற்கனவே விண்ணப்பிப்பவர்களுக்குப் பக்கத்திலே ஒரு போல் இரண்டு போல் இருந்தால், அவர்களுக்கு 50 சத விகிதம் முன்னுரிமை கொடுப்பது. அதேபோல், 20, 30 போல் இருந்தால் கூட, 2 பகுதியாகப் பிரித்து அவைகளுக்குப் பிரியாரிட்டி பேசிசில் கொடுப்பது என்று ஒரு திட்டம் இருந்தது. அதை நடைமுறைப்படுத்தினால் பழைய திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், ஓரளவிற்கு நம்முடைய மின்சார வாரியத்திற்கு செலவு கூடக் குறையும். ஆகவே இதையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான சலுகை. அண்மைக்காலத்திலே விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் என்று மின்சார வாரியம் சொல்லியிருக்கிறது. 10 குதிரைத் திறனுக்கு உட்பட்டவர்களுக்கு 75 ரூபாய் ஒரு குதிரைத் திறனுக்கு என்று இருந்தது இன்றைக்கு 50 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். அது 10 ஹார்ஸ் பவருக்குக் கீழே உள்ளவர்களுக்கு என்று சொல்லியிருப்பது வரவேற்கக்கூடியது. இதனால் 10 லட்சம் விவசாயிகள் பலன் பெறுகிறார்கள் என்று புள்ளி விவரம் சொல்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 10 லட்சம் விவசாயிகள் பலன் பெறுகிற போது, இன்னும் விடுபட்டவர்கள் 2 லட்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள். இந்த 2 லட்சம் பேர்களுக்கும் இந்தச் சலுகையை அளித்துவிட்டால், மின்சாரத்தைப் பயன்படுத்துகிற பம்ப் செட்டுகளைப் பயன்படுத்துகிறவர்களுக்கு இந்த 50 ரூபாய் என்ற சலுகையைக் கொடுத்துவிட்டால், இந்த 2 லட்சம் விவசாயிகளும் இதனால் பலன் பெறமுடியும். உணவு உற்பத்தியிலும் அவர்கள் முழுமையாக கவனம் செலுத்துவார்கள் என்ற ஆலோசனையைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டை தொகுதி பெரிய தொகுதி. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை வந்து வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அவர்கள் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்து கொடுத்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அப்படியானால் கிருதமால் நதித் திட்டத்தை இந்த வருடம் நிறுத்திவிடலாமா?

திரு. வே. தங்கபாண்டியன் : ஒரு புதிய வேண்டுகோள். என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதி முழுமையாக 3 ஒன்றியங்கள் அடங்கியது. எந்த நகரமும் இல்லை. இரண்டே இரண்டு பேரூராட்சிகள்தான் இருக்கின்றன. அப்படி பரந்து விரிந்து இருப்பதாலே, பழைய காலத்திலே போடப்பட்ட, வெகு தொலைவிற்குப் போகிற, மின் அழுத்தம் இல்லாத கம்பிகள் இருக்கிற காரணத்தால், கிராமங்களிலே குண்டு பல்புகள் தான் போடப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

1990 மே 11]

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியைப் பற்றி இன்னும் கொஞ்சம் சிறப்பாகக் கூடச் சொல்லலாம். அந்த அருப்புக்கோட்டைத் தொகுதியில், மொத்த தொகுதியிலே ஒரே ஒரு அம்பாசிடர் கார்தான் இருக்கிறது. அதுவும் பாதிநாள் ஒர்க்ஷாப்பிலேதான் இருக்கும். அதுவும் நம்முடைய தங்கபாண்டியன் அவர்களுடைய கார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியைப் பற்றிச் சொன்னார். நான் அமைச்சரானதற்குப் பிறகு என்னுடைய தொகுதிக்குக் கூட போகவில்லை. நான் முதன்முதலாகப் போனது அருப்புக்கோட்டை தொகுதிக்குத்தான். காரணம் ஒரு தனி மனிதன் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கலாம். ஆனால் ஒரு தொகுதியே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறது என்றால், அது அருப்புக்கோட்டை தொகுதிதான். எவ்வளவு பெரியவர்கள் எல்லாம் இருந்த தொகுதி அது. ஆகையினாலே தான் அந்தத் தொகுதியிலே அவர்கள் பார்த்தவுடனே, கிருதமால் நதித் திட்டம் கேட்டார், இந்த ஆண்டு கொடுத்திருக்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிற காரணத்தால், நன்றி சொல்ல வேண்டும் என்று இருக்கிறேன், கடைசியில். ஆனால் நம்முடைய சபாநாயகர் அவர்கள் நன்றி சொல்வது தவிர்க்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே சொன்ன காரணத்தால், தனிப்பட்ட முறையிலே பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த அருப்புக்கோட்டை தொகுதியிலே இப்போது கவனிக்கப்படவேண்டிய காரியம் என்று நான் சொல்வது — பொதுவாக, கிராமப்புறங்களிலே — நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள் — உள்ள நகராட்சிகளில் உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால், மாமன்ற உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்களை அவர்கள் அணுகுகிறார்கள் என்று சொன்னார்கள். எங்களுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் இருக்கிறார். ஆனால் ஊரிலே விளக்கு எரியவில்லை என்று சொன்னால் என்ன சொல்கிறார்கள், எம்.எல்.ஏ. கவனிக்கவில்லை, அரசாங்கம் கவனிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அங்கே ஒரு பனிப்போர் நடக்கிறது. ஊராட்சி மன்றத்திற்கும், மின்சார வாரியத்திற்கும் பனிப்போர், சண்டை நடந்து கொண்டு இருக்கிறது. அங்கே டூயல் சிஸ்டம், இரட்டை ஆட்சி நடக்கிறது. சென்ற முறை கழக ஆட்சிக் காலத்திலே ஒரு முறை இருந்தது. முழுமையாக நம்முடைய மின்சார வாரியமே, பஞ்சாயத்தினுடைய அந்த மின் விளக்கை இணைப்பது, போடுவது, அவர்களுடைய செலவினங்களை ஒட்டு மொத்தமாக ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்து பெற்றுக்கொள்வது என்கிற ஒரு தன்மை இருந்தது.

அதுதான் முறை. அதுதான் இலகுவாக இருக்கும். இன்றைக்குப் புதியதாக பல்புகள் மட்டும் அவர்கள் வாங்குவது, ஒயர்கள் மட்டும் அவர்கள் வாங்குவது,ஆனால் இணைப்பு மட்டும் நாங்கள் கொடுப்பது என்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால்தான் ஊராட்சிமன்றத் தலைவர்கள், நம்முடைய மின்சார வாரியத்தைப் பற்றியும், மின்சார வாரியத்தில் உள்ளவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பற்றியும் சொல்வதற்குரிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை கடுமையான நிலைமை. இதைச் சாதாரணமாக நினைக்கிறீர்கள். கிராமப்புறங்களிலுள்ள இந்த நிலைமையை மாற்றுவதற்கு உடனடியாக இரண்டு துறைகளும் சந்தித்துப் பேசி, ஏதாவது ஒரு துறையின் சார்பில் நடைபெற்றால் நன்றாக இருக்கும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன், சென்னை நகரத்தில் விளக்கு போடுவதற்காக கேபிள்களைத் தேடிய நேரத்தில் மாநகராட்சி வசம் இல்லை. கம்பெனிகளிலும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் பொறுப்பேற்றிருக்கின்ற காரணத்தால்தான் மாநகராட்சிக்கு கேபிள்களைக் கடனாகக் கொடுத்து, இன்றைக்கு சென்னை நகரத்திலே விளக்குகள் எல்லாம் எரிகிறது. எனவே எப்போதும் மின் வாரியமும் ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும், மாநகராட்சிகளும் சேர்ந்துதான் பணியாற்றுகின்றது என்பதை நம்முடைய ஆட்சியிலே நாம் துவக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை ஒட்டுமொத்தமாக எங்கெங்கே மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றதோ, அந்த இடம் எல்லாம் மின்சார இலாக்காவின் கண்ட்ரோலுக்குக் கொண்டுவந்தால் இந்தப் பிரச்சினை வராது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு துணத் தலைவர் அவர்களே, இது அவரவர்களுடைய அனுபவத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். என்னுடைய அனுபவம் டி.டி.சி. மீட்டிங்கில் இதுதான் பிரச்சினை. மாண்புமிகு அமைச்சருக்கும், மின்சார வாரியத்திற்கும் ஒரு வேண்டுகோள். அதாவது ஒரு 'கன்சல்டேடிவ் கமிட்டி' என்ற அளவிற்கு ஒரு ஆலோசனைக் குழு மாவட்ட அளவிலே அல்லது ஒன்றிய அளவிலே கொண்டுவரலாம். சென்ற முறை எல்லாம்'கிரிவென்சஸ் செல்' ஒன்று நடந்தது. ஆகையால் ஒன்றியக் கூட்டங்கள் நடக்கும்போது மின்சார வாரியத்திலுள்ள அதிகாரிகள் அங்கு வந்து பங்கு எடுத்துக் கொள்வார்கள். ஆனால்

இப்போது அந்த முறை இல்லாத காரணத்தால்தான் எல்லா விதமான கம்ப்ளெயின்ட்ஸ், கிரிவன்செஸ் அக்யூமுலேட் ஆகிவிடுகிறது. மின்சார வாரியத்தில் சொல்லும்போது அதற்குப் பரிகாரம் காணுவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் சொல்லியது போல் என்னுடைய தொகுதியிலே நரிக்குடியிலே ஒரு சப் ஸ்டேஷன் உருவாக்கவேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கை. தொழில் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த புதிய தரப்பில், குறைந்த பட்சம் என்னுடைய வேண்டுகோள் அந்தத் தொகுதியிலிருக்கின்ற காரியாபட்டியிலே ஒரு தனிப் பிரிவு, கோட்டப் பிரிவு ஒன்றை பிரிக்கவேண்டுமென்ற வேண்டுகோளை பல்வேறு காலக் கட்டங்களில் அந்தத் தொகுதிக்கு உதவியாக இருந்து, தானே அந்தத் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினர் என்பதைப்போல் காலம் எல்லாம் தாயுள்ளத்தோடு உதவி செய்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனம் கனிந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்து, மின்சார வாரியம் வேகமாக பயன்பட வேண்டும். வேகமாக முன்னேற வேண்டும். அதனுடைய பணி சிறக்க வேண்டுமென்றால், இன்னும் பல்வேறு நிலைகளில் அதிலுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். பழைய காலத்திலுள்ள அந்த அதிகாரிகளையே வைத்திருக்கிறோம்.

கல்பாக்கத்தைப் பற்றிய ஒரு குறைபாடு இருக்கிறது. அதாவது மத்திய அரசாங்கத்திடம் முழுமையாக இருக்கின்ற கல்பாக்கத்திலே இயற்கைக்கு ஒரு விதமான 'ஜெல்லி' என்ற ஒருவகையான மீன் இடர்பாடு உருவாக்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் முழுமையான திறனை நாம் அடைய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதைப் போக்குவதற்கு கல்பாக்கத்தின் மூலமாக கிடைக்கின்ற மின்சாரத்தை நாம் முழு அளவில் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதைப் போல் நெய்வேலியில் இன்று 2-வது, 3-வது சுரங்கத்திலிருந்து கிடைக்கின்ற அந்த முழு அளவு மின்சாரத்தை தமிழகம் முழுவதுமாகப் பெறுவதற்கு மத்திய அரசாங்கத்தோடு நம்முடைய மாநில மின் துறை போராடிப் பெறவேண்டும் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. மின்சாரத் துறை அமைச்சரைப் பொறுத்த அளவில், ஏற்கனவே பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சாரத் துறை இம்மூன்றும் மக்களுக்கு முக்கியமான உணவுப் பொருள் உற்பத்திக்குத் தேவையான நல்ல பொறுப்புகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே

தமிழ்நாட்டில் இதுவரைக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 31-3-1990 வரையில் சுமார் 12,71,501 மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதே நேரத்தில் ஒரு மாதத்திற்கு ரூ. 75 லிருந்து படிப்படியாக 50 ரூபாய்க்குக் குறைத்திருக்கிறார்கள். அதனை நான் மனமார பாராட்டுகிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் தான் இந்த நாட்டின் முக்கிய முதுகெலும்பு.

13-35 மணி

அந்த விவசாயிகளுக்கு நிச்சயமாக முழுமையாக மின்சாரக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். எத்தனையோ இந்த அரசு ஏழைகளுக்கு அரிசி, சேலை இப்படி வழங்குகிற மாதிரி, இந்த நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்தமாக நீங்கள் இனாமாக மின்சரம் வழங்க வேண்டும். அதே நேரத்தில் இதுவரைக்கும் 10,5 இலட்சம் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கியுள்ளீர்கள். இதில் நீங்கள் இனாமாக மின்சாரம் வழங்க வேண்டும். அதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 24 கோடியிலிருந்து 25 கோடி ரூபாய்தான் அரசுக்கு இழப்பு ஏற்படும். ஆகவே, இதை இந்த அரசு உன்னிப்பாக கவனித்து அனைத்து விவசாயிகளுக்கும் இனாமாக வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு பகல் நேரத்தில் முழுமையாக மின்சாரம் வழங்க வேண்டும். ஏனெனில் பகலில் 4 மணிநேரம் கொடுக்கிறீர்கள் அல்லது 6 மணி நேரம் கொடுக்கிறீர்கள். அதே நேரத்திலே சில இடங்களிலே அந்த டிரான்ஸ்பார்மர்ஸ் லோடு கூடுதலாக இருக்கிறதனாலே அடிக்கொருதரம் ப்யூஸ் போய்விடுகிறது. அப்படி ப்யூஸ் போகிற நேரத்திலே இரண்டு நாள் மூன்று நாள் அந்த டிரான்ஸ்பார்மர் 'ப்யூஸ்' மாற்றுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. உடனடியாக மின் இணைப்பு கொடுக்க முடிவதில்லை. மின்சாரம் அந்த விவசாயிகளுக்கு வழங்க முடிவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் சில தலைநகரங்களிலேதான் அந்த ''டிரான்ஸ்பார்மர்'' இருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய கிணறுகளிலே 4 மணி நேரம், 6 மணி நேரம் தான் தண்ணீர் இருக்கிறது. பெரும்பாலும் 60 சதவீதம் கிணற்றுத் தண்ணீரை வைத்துதான் விவசாயிகள் கிராமப்புறங்களில் விவசாயம் செய்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்கு அந்தந்த கோட்டப் பொறியாளர் அலுவலகங்களில் அந்த டிரான்ஸ்பார்மர் ரெடியாக இருக்கவேண்டும், உடனடியாக பழுது ஏற்பட்டால் அந்த ஒரு 6 மணி நேரத்திற்குள்ளே அல்லது மறு நாளாவது அந்த பழுதடைந்த டிரான்ஸ்பார்மரை மாற்றி, விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் கிடைக்க துரிதமான நட-

1990 மே 11] [திரு. ஆர். ஈஸ்வரன்]

வடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்திலே இரவிலே முழுமையாக நீங்கள் மின்சாரம் கொடுக்கிறீர்கள். மில் மற்ற பெரிய தொழிலதிபர்கள் அந்த மின்சாரத்தை உபயோகப் படுத்தலாம். விவசாயிகளுக்கு Correct ஆக பகலிலே 12 மணி நேரம் மின்சாரம் வழங்கவேண்டும். ஏனெனில் அவர்கள் பகலில் விவசாயம் செய்கிற நேரத்திலே அந்த மின்சாரத்தை முழுமையாக பாசனத்திற்கு, கிணற்றிலே உள்ள தண்ணீரை இறைக்க உபயோகப்படுத்த முடியும். இரவு நேரங்களிலே எல்லாம் தூங்கி விடுவார்கள். அதனாலே பல்வேறு கஷ்டங்கள் இருக்கிறது. அதே நேரத்தில் நீங்கள் அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் பெயராலே நிலங்கள் இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நீங்கள் கட்டாயமாக மின்சாரம் வழங்க வேண்டும், ஒரு மாதத்திற்குள்ளோ அல்லது இரண்டு மாதத்திற்குள்ளோ. ஏனெனில் முழுமையாக அரசியலிலே பொறுப்புகள் இருப்பதனாலே அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரிலே நிலங்கள் இருந்தால் அவர்களுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுத்து உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் (குறுக்கீடு).

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பெயரால் நிலமிருந்தால் மின்சாரம் கொடுப்பது போலே சட்டமன்ற உறுப்பினர் பெயரிலே இல்லாமல் அவர்களுடைய மனைவி பெயரால் இருந்தால் கூட அந்த சலுகையை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : திரு. தங்கபாண்டியன் அவர்களுடைய சுயரூபம் இப்பொழுதுதான் தெரிகிறது. (சிரிப்பு)

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மனைவி பெயரிலே இருப்பது பற்றிய பிரச்சினையில், தற்போது மின் வாரியத்திற்குத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திலே தீவிர அக்கறை உள்ளவர். எனவே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (சிரிப்பு).

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். சட்ட மன்ற உறுப்பினர் பெயராலே நிலம் இருந்தால் முன்னுரிமை

கொடுத்து மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவருக்கு நிலமிருக்கிறதா? அப்படி ஏதாவது கேட்டு நிலுவையில் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வீரையன் சொல்வது போலல்ல, நான் சொல்வதெல்லாம் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் பெயரால் நிலங்கள், கிணறுகள் இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து மின்சாரம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேறொன்றுமில்லை. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு என்னுடைய பகுதியில் ஒரு பெரிய அணைத் திட்டமிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தில் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். இந்தப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர் அவ்வாறு ஒரு கருத்தைத் தெரிவித்து விட்டால், மக்கள் பிரதிநிதிகளாக வந்து மக்களுக்காக வாதிடாமல் அவர்கள் சொந்த பிரச்சினைக்காக வாதாடினார்கள் என்ற ஒரு தவறு வந்து விடக் கூடாது என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலம் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

13-40 மணி

திரு. ரா. சொக்கர் : உறுப்பினர் அவர்கள் கூறியதிலே எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு மக்களுக்காக பணியாற்றுகிறார்கள். ஆகவே அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால்தான் அவர்கள் நல்ல முறையிலே பணியாற்ற முடியும். எனக்கு நிலம் இல்லை. எனக்கு பவர் கனெக்‌ஷன் வேண்டும் என்பதற்காக நான் கேட்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதை மக்கள் தவறாக நினைப்பார்கள் என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது ஏகோபித்த கருத்தில் ஒருமித்து கையை உயர்த்தினீர்களே, அது எந்த வகையில் சரியாக இருக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு) ஆகவே தமிழ்நாட்டில் இதுவரைக்கும் மின்சார உற்பத்தியில் 5,473 மெகாவாட்டாக உற்பத்தித் திறன் இருக்கிறது.

ஒரு நாள் ஒன்றுக்கு சுமார் 27,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இந்த மாதிரியான நிலைமைகளை எல்லாம் மாற்றுவதற்கு தமிழ்நாட்டில் மலையடிவாரங்களில் தண்ணீர் தேவைக்கு மேல் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் கூட ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாக பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்த திட்டம் எல்லாம் செய்தால் தான் மின்சாரம் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு 1987—88—லே 45.63 பைசாவிலிருந்து தற்போது 74 பைசாவாகி இருக்கிறது. ஆகவே அணைக்கட்டுகளிலிருந்து மின்சாரம் எடுக்கின்ற போது நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள அந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் நீரிலிருந்து மின்சாரம் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஊராட்சி மன்றங்களில் பல்வேறு பகுதிகளில் பிரச்சினை இருக்கின்றது. நான் அந்தந்தப் பகுதிகளுக்குப் போகும்போது தெருவிளக்கு சரியாக எரியவில்லை. மின்சாரத்தை நீங்கள் ஊராட்சி மன்றத்தில் ஒப்படைத்த காரணத்தினால் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே ஊராட்சி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதை மின்சார வாரியத்திற்கு ஒப்படைத்தால் அதை நிவர்த்தி பண்ணுவதற்கு வாய்ப்பாக இருக்கும். பல பஞ்சாயத்துக்களில் ட்யூப் லைட் அல்லது சோக் வாங்குவதற்கு கூட நிதி பற்றாக் குறை இருக்கிறது. தெரு விளக்கு போடுவதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே முழுவதுமாக மின்சார வாரியம் அதை ஏற்று நடத்தினால் இந்தப் பிரச்சனைகள் சுமுகமான முறையில் முடியும் என்று சொல்லிக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

டாக்டர் க. காஞ்சனா : துணைத் தலைவர் அவர்களே,

''மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிபூவாடையது போர்த்து
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி''
''கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி''

என்று இளங்கோவடிகளால் பாடப்பெற்ற காவேரி ஆற்றுநீர் தமிழகத்திற்கு கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற நிலையை மாற்றி, ''மன்பதைகாக்கும் தென்புலங்காவல் துன்பம் அல்லது தொழுதகவு இல்'' என்ற சிலப்பதிகாரத்தின் சிறப்புப்பாயிர வரிகளை மனதிலே பதிய வைத்துக்கொண்டிருப்பவராக இருக்கின்ற காரணத்தினால், காவேரிப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை குறை சொல்லி, குற்றம் சொல்லி, அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் எத்தனையோ பேர் எள்ளி நகையாடியதை, ஏசியதை விமர்சனம் செய்ததை எல்லாம் தாங்கிக் கொண்ட தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சிகளின் காரணத்தால் கலைஞரின் வளையாத, புகழுக்குரிய, திருந்திய செங்கோல் திறத்தால் இன்று நடுவர் மன்றத் தீர்ப்புக்கு காவிரி நதி நீர் பங்கீடு விடப்பட்டிருக்கின்ற நிலை கண்டு இறும்பூது எய்துகிறது எம் உள்ளம். இட்ட பணியினைச் சிரமேற்கொண்டு, விளையாட்டுத்தனங்களை எல்லாம் விட்டொழித்து, குலோத் துங்க சோழனின் ஆணையேற்று படை நடத்திச் சென்று வாதாபியை வென்ற கருணாகர பல்லவனைப்போல இந்திய துணைக் கண்டத்தின் தலைநகரத்திற்கு நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் சென்று பிரதம அமைச்சரைச் சந்தித்துப் பேசி வினைமுடித்துத் திரும்பிய மாண்புமிகு அமைச்சர் துரைமுரு கனின் அறிவுக்கூர்மையும், ஆற்றலும், வினைத்திட்பமும், வேகமும், விவேகமும், வீரமும் இத்தமிழ்மண்ணின்மேல் அவர் கொண்டுள்ள பற்றும் பாசமும் பரணி பாடுதற்குரியன. (சிரிப்பு) ஜெயங்கொண்டார் இன்றிருந்தால் கலிங்கத்துப் பரணியோடு, இன்று கலைஞரின் அறமும் திறமும், கருணா கரத் தொண்டமான் துரைமுருகனின் தொண்டும் சுறுசுறுப் பும் ''காவிரிப் பரணி'' என்று பாடப்பட்டு எட்டுத் தொகை நூல்கள் ஒன்பதுத் தொகை நூல்களாகியிருக்கும் என்று கருதுகிறேன்.

13-45 மணி

இவ்வளவு சிறப்புகளுக்குரிய மாண்புமிகு அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த மின் துறை விவா தத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதை எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பேறாகக் கருதுகிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : கலிங்கத்துப் பரணி எட்டுத் தொகையிலே சேராது. (சிரிப்பு) (குறுக்கீடு)

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல், கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம், புறம் என இத்திறத்து எட்டுத்தொகை என்று ஒரு சூத்திரமே இருக்கிறது. கலிங்கத்துப் பரணி எட்டுத் தொகை நூல்களிலேதான் அடங்கும். (குறுக்கீடு)

திரு. உ. ரா. வரதராசன் : அது வேறு, கலிங்கத்துப் பரணி அல்ல, எட்டுத்தொகையில் கலித் தொகையை....... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் என்ப தனாலே அவர்களுக்குத் தெரியாது. (குறுக்கீடு) நேராக அவை முன் உள்ள பொருளுக்கு வந்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. (சிரிப்பு)

1990 மே 11]

திரு. என். கணபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கலிங்கத்துப் பரணி எட்டுத் தொகையிலே இருந்தால் என்ன? ஒன்பது தொகையிலே இருந்தால், என்ன? பத்துத் தொகையிலே இருந்தாலென்ன? மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்களுக்கு, எங்கள் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களை, எங்கள் உறுப்பினர் பாராட்டுவது பிடிக்கவில்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய உறுப்பினர் உங்களுடைய அமைச்சரைப் பாராட்டுவது என்பதல்ல. காவிரிப் பிரச்சினையிலே தமிழக அரசு எடுத்துக்கொண்ட அத்தனை நடவடிக்கைகளும் இந்த மன்றத்திலே அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் பாராட்டினுடைய ஒரு பகுதி பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களைச் சாரும் என்பதை நிச்சயமாக நான் எதிர்க்கவில்லை. இருந்தாலும், தமிழ்நாட்டினுடைய சட்டமன்றப் பேரவையிலே தமிழ் குறித்த ஒரு தவறான தகவல் இடம் பெற்று விடக்கூடாது என்பதற்காக நான் தலையிட்டேனே தவிர, வேறல்ல. அம்மையார் பாராட்டுவதை எல்லாம் பாராட்டிவிட்டு, என்ன கோரிக்கையை வைக்கப் போகிறாரோ, தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர்தான் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தங்களுக்கு என்ன நக்கீரன் என்று நினைப்பா? (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கையினை என்னுடைய உரையின் கடைசிப் பகுதியில்தான் வைக்கவேண்டுமென்றிருந்தேன். இத்தனை பிரச்சினைகள் வந்துவிட்டபடியாலும், நேரமின்மை காரணத்தினாலும், 21—2—1990 என்று தேதியிட்டு, மரியாதைக்குரிய என்.எஸ். கோதண்டராமன், அரசுத் துணைச் செயலாளர் அவர்கள் எனக்கு அனுப்பியுள்ள கடிதத்தின்படி, இந்த ஆண்டே கிருஷ்ணகிரிக்குத் தருவதாக வாக்குக் கொடுத்திருக்கின்ற, 110—33-11-கே.வி. உயரழுத்த துணை மின் நிலையம் அமைய நிதி ஒதுக்கி பணி தொடங்க வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 230 கே.வி. துணை மின் நிலையம் கிருஷ்ணகிரிக்கு வந்தது. இடம் வசதியாக இல்லை என்று அதனை ஓசூருக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

இப்போது ஹட்கோவின் நிலம் இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்காகத் தருவதாக ஒப்புதலும் தரப்பட்டு, அனைத்து கடிதப் போக்குவரத்துப் பணிகளும் முடிவு செய்யப்

பட்டு, தயார் நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்களிடத்தில் இந்தத் துறை இருந்தபோது, அவர்கள் கிருஷ்ணகிரிக்கு நேரிலே வருகை தந்திருந்து, இடத்தை எல்லாம் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். எனவே, தாமதமின்றி உடனடியாக கிருஷ்ணகிரிக்கு இந்த உயரழுத்த துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரிய நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், அனைத்துப் பிரச்சினைகளையும், நேரமின்மை காரணத்தினால், வேரோடும், வேரடி மண்ணோடும் எடுத்தியம்ப முடியாத நிலையில் இருக்கிறேன். பிரச்சினைகளைத் தொட்டுக் காட்ட வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கின்றேன். அதனாலேயே நான் நுனிப்புல் மேய்ந்து விடுவதாக அமைச்சர் அவர்கள் கருதி விடக்கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அனலில், புனலில், அசைவில், கதிரொளியில், காற்றசைவில், கடல் அலையில் உற்பத்தியாகி உலகத்தை இயக்கும் பெரும் சக்தியாக உள்ள மின் சக்தியைப் பெருக்குவதில் இந்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டு எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்திட முனைந்துள்ளது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், தொழில்துறை மானியத்திலே நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வரும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு ஒன்றிற்கு 300 மெகாவாட் வீதம் நம்முடைய அரசு மின் உற்பத்தியைப் பெருக்க வழிசெய்யும் என்று இலக்கும் நிர்ணயித்துக் கூறியுள்ளார்கள். இது வரவேற்கத் தகுந்தது. பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அது மட்டுமல்லாமல், வடசென்னை மின் நிலையம், ஏஷியன் டெவலப்மென்ட் பாங்கினுடைய உதவியோடு மூன்றாம் கட்டப் பணியையும் முடித்துவிட்டால் 2050 மெகாவாட் என்ற அளவினை எட்டும் என்ற உண்மை நம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவதாக உள்ளது.

உறவுக்குக் கை கொடுக்கின்ற, ஆனாலும், அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுத்துப் பழக்கப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் எத்தனையோ சிரமங்களுக்கிடையில், துன்பங்களுக்கும், தொல்லைகளுக்குமிடையில் இந்த மின் நிலையங்களை தமிழ்நாட்டிலே அமைப்பதற்காக நாம் ஒப்பு

தல் அளிக்கின்றோம்; ஆகையினாலே 75 சதவீதம் மின் உற்பத்தியைத் தமிழகத்திற்குத் தரவேண்டுமென்று மத்திய அரசினை ஏற்கெனவே வற்புறுத்திக் கேட்டு இருக்கின்றார்கள். இப்போது பைகாரா, மோயார், குந்தா, சர்கார்பதி, ஆளியார், சோலையார், கோடையார், சுருளியார், சேர்வலார், கீழ் மேட்டூர் ஆகிய புனல் மின் திட்டங்கள் மூலம் ஏறத்தாழ 1500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள்.

13-50 மணி

வட சென்னை அனல் மின் நிலையம் 2,050 மெகா வாட் தூத்துக்குடி எக்ஸ்டென்சன் 420 மெகா வாட்;
Gas Turbines at Basin Bridge :—120 MW;
Gas Turbines at Cauvery Basin ;—300 MW; Neyveli Stage II— 1050 MW; Stage I — expand செய்யப்பட்டால் மேற்கொண்டு இன்னொரு 420 மெகா வாட். இதுவன்னியில் 1500 MW in Stage III (with 28 per cent share to Tamil Nadu) ராமகுண்டத்திலிருந்து கிடைக்கின்ற 1,000 மெகா வாட் (with 22 percent share) இவற்றோடு எதிர்பார்க்கப்படுகின்ற Koodankulam Nuclear Station 1000 MW (with 28 per cent share) இதுவும் சேர்ந்தால் கூட 4,000 மெகா வாட் அளவில் தான் மின் உற்பத்தி கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசியதைப் போல தமிழகத்தைப் பொறுத்த வரையில் வளர்ந்து வருகின்ற அடிப்படைத் தேவைகளுக்குத் தேவையான மின்சாரம் அடுத்து வருகின்ற 5 ஆண்டுகளில், 10 ஆண்டுகளில் இருக்கின்ற உற்பத்தியோடு மேலும் 3,000, 4,000 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகத் தேவைப்படும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

2,000 ஏ. டி. என்று வருகின்றபோது இப்போது இருக்கின்ற மின்சாரத்தோடு கிட்டத்தட்ட 6,000 மெகா வாட் அதிகமாக தேவைப்படும் என்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 600 மெகா வாட் மின் உற்பத்தியை அதிகமாக்கினால் தான் நம் தமிழகத்தின் மின் தேவை ஓரளவுக்கு பூர்த்தி செய்யப்படும் என்று ஆகின்றபோது இன்று நம் தமிழக அரசு ஆண்டு ஒன்றுக்கு 300 மெகாவாட் கூடுதலாக மின் உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யும் என்று நிர்ணயித்து இருக்கின்ற இலக்கினை இன்னும் நிதி ஒதுக்கீடு அதிகமாக செய்து புதிய வழிகளில் மின் உற்பத்தியை நாம் மேற்கொள்ளவேண்டும் என்ற என்னுடைய கருத்தை இந்த மாமன்றத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புனல் மின்சாரத்தைப் பொறுத்த வரையில் I think we have exhausted almost all our resources micro hycel கூட முடித்து விட்டோம். கழக அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 1989, 90 ஆம் ஆண்டுகளில் பைகாரா, பவானி சாகர் வைகை, பூனாச்சி, மரவகண்டி ஆகிய மைக்ரோ ஹைடல் மூல மாக ஏறக்குறைய 400-க்கும் மேற்பட்ட மெகா வாட் மின்சாரம் கிடைத்து இருக்கிறது. அனல், புனல் இவைகள் எல்லாம் முடிந்த பிறகு Pressurised Heavy Water Technology அணு மின் நிலையம் உலக அரங்கிலே இப்போது அவுட் டேட்டடு என்று ஆகியிருக்கிறது. நாம் மட்டும் தான், இந்தியாவில் மட்டும் தான் இந்த Pressurised Heavy Water Technology-ஐ நாம் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். நாம் ரஷியா விடமிருந்து கூடங்குளத்திற்கு ஒரு டெக்னாலஜியை வாங்கியிருக்கி றோம். ஆனால் சோவியத் யூனியனில் இந்த டெக்னாலஜியை வெஸ்ட்டு ஜெர்மனியிடமிருந்து 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே பெற்றுக் கொண்டதாகச் சொல்லுகிறார்கள். மிகவும் பாதுகாப் பானது என்று சொல்லப்படுகின்ற இந்த வெஸ்ட்டு ஜெர்மனி டெக்னாலஜி கூட அவ்வளவு பாதுகாப்பானது அல்ல என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் பேசி யிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, வெஸ்ட்டு ஜெர்மனி இப்போது இந்த Nuclear Power Reactors. ஆகியவற்றை உற்பத்தி செய்வது, பில்டு செய்வதை நிறுத்தி இருக்கக்கூடிய சூழ்நிலை வடக்கே இருந்து வருகின்ற அனைத்துப் பத்திரிகைகளிலும், ஜர்னல் களிலும் வெளியாகியிருக்கிறது. Experts may well ask that if fossil fuels and nuclear power are out, how will the ever increasing primary energy demand be met? The answer is obvious. Look to the SUN and look to the WIND. அதைத் தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரை யாற்றியதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இங்கே அச் சடித்துக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற புத்தகத்தில் கொடுத்து இருக்கிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் பேசும்போது சோலார் எனர்ஜியைப் பற்றிச் சொன்னார்கள். சோலார் எனர்ஜியைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் ராஜஸ் தானைப் போல் அல்லது சவுதி அரேபியாவைப் போல் பெரிய பாலைவனங்கள் இல்லை. எனவே சோலார் எனர்ஜி என்பது நம்மைப் பொறுத்த வரையில் மிக மிகக் குறைந்த அளவிலே எடுக்கக் கூடிய வாய்ப்பும் வசதியும் தான் இருக்கிறது.

ஆனால் காற்றாலையிலிருந்து மின் சக்தி எடுப்பது நீண்ட கடற்கரை உடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த 'விண்டு எனர்ஜி' என்பது சாதாரணமான ஒன்றாக இருக்கிறது.

கயத்தாறிலும், முல்லைக்காட்டிலும், முப்பந்தலிலும் விண்டு எனர்ஜி எடுப்பதற்காக காற்று ஆலை பண்ணைகள் நிறுவி இருக்கின்ற மின்சார வாரியத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. Wind energy can be easily exploited wherever there is an average wind velocity of 6 metres per second HS என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த முயற்சியில் நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாக கவனம் செலுத்தி விண்டு எனர்ஜி மூலமாக மின்சாரம் பெறுவதற்குத் தேவையான அத்துணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் மிகுந்த பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவிலே இந்த எனர்ஜி சானலைப் பொறுத்த வரையில் கருத்து சொல்லுவதை நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய மின் துறையில் இருக்கின்ற Transmission and Distribution பற்றி நான் சொல்வதற்கு விருப்பப் படுகிறேன். டிரான்ஸ்மிஷனைப் பொறுத்தவரையில் மின்சார வாரியத்திலே அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த லைன் லாஸ் என்று சொல்லக்கூடியவைகளை எல்லாம், எப்படித் தடுப்பது என்பதைப் பற்றி எல்லாம் அவர்கள் மிகவும் துரிதமாகவும், வேகமாகவும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். டிஸ்ட்ரிபியூஷனைப் பொறுத்தவரையில் சென்னை மாநகரத்தில் தி. நகர், மைலாப்பூர் சைதாப்பேட்டை இன்னும் சில இடங்களில் எல்லாம் ஓவர்ஹெட் கனெக்ஷன் இருக்கின்றன. Where there is a High Power Tension HPT இருக்கின்ற இடங்களில் எல்லாம் ஒன்றும் தொந்தரவு வருவது இல்லை. ஆனால் லோ வோல்டேஜ் இருக்கின்ற இடங்களில் எல்லாம் லைன் பர்ஸ்ட் ஆகிவிடுகிறது; கேபிள் பர்ஸ்ட் ஆகி விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் எந்த இடத்திலே அந்த கேபிள் பர்ஸ்ட் ஆகியிருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பதற்குக் கூட 2 நாட்கள் என்ற அளவிலே ஆகிறது. இதனால் பெரிய தொல்லைகள் ஏற்படுகின்றன.

13-55 மணி

எனவே வருங்காலத்தில் சென்னை நகரம் முழுமைக்கும், ஏன், கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளுக்கும் சேர்த்து கிரௌண்டு கேபிள் சிஸ்டத்தை கொண்டு வருவதற்கு துறை முயலுமா என்பதை என்னுடைய பணிவான கேள்வியாக இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வைக்க விருப்பப்படுகிறேன். இங்கே டொமஸ்டிக் சர்வீஸைப் பற்றியெல்லாம் பேசினார்கள். வீட்டிற்கு சர்வீஸ் கேட்டால் அவர்களாகவே கம்பம் போட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏழையெளியவர்கள் ஒரு கம்பம் போட வேண்டுமானால் 2 ஆயிரம் ரூபாய் வரையிலே செலவு ஆகிறது என்கிறார்கள். இது சாத்தியமானதல்ல.

எனவே இந்த முறையை மாற்ற வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே ஹட் சர்வீஸ் என்று பிரீ சர்வீஸ் கொடுக்கிறார்கள். இதிலே டி. வி. ரேடியோ என்றெல்லாம் வைத்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். அப்படி யாராவது வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் உடனடியாக அவர்களுடைய அந்த பிரீ சர்வீஸ் பெசிலிட்டியை ரத்துச் செய்து அவர்களை ரெகுலர் சர்வீஸில் சேர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

டி.என்.இ.பி.-ல் சிங்கிள் ஃபேஸ் மீட்டருக்கு அதிகமாக ஷார்ட்டேஜ் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் சப்ளை கொடுப்பது கொஞ்சம் தாமதமாகிறது. 31—3—1990 வரையிலே கன்ஸ்யூமரே மீட்டர் வாங்கிக் கொடுக்கலாம் என்று இருந்தது. அது இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, கொஞ்சம் டைம் எக்ஸ்டென்ஷன் கொடுத்து, இன்னொரு ஆறு மாதத்திற்கு கன்ஸ்யூமரே வாங்கிக் கொடுக்கலாம் என்ற அளவிலே சலுகை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, extension of time for installation of capacitors wth a connected load of more than 25 HP may be given upto 30th September 1990 என்று நீட்டிப்பு கொடுக்கலாம், இது 30—4—1990 உடன் முடிவடைந்துவிட்டபடியால், செப்டம்பர் வரையிலாவது காலக்கெடு நீட்டித்துக் கொடுக்கவேண்டுமென்று வேண்டுகிறோம்.

அடுத்து, இ.பி.-ல் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் இலவச மின்சாரம் தரப்பட வேண்டுமென்று கோரிக்கை ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. இன்னொன்றையும் இந்த இடத்திலே நான் ஒரு தகவலுக்காக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். I believe there is a tariff payable to the Electricity Board by all those who use the generators. இது எந்த அளவுக்கு நியாயமானது என்று தெரியவில்லை. பப்ளிக் நெட்வொர்க்கிலே இருந்து எடுத்துக் கொள்ளாமல் தாங்களாகவே மின் உற்பத்தியை ஜெனரேட்டர்கள் மூலம் செய்து கொள்ளும் நிறுவனங்களுக்கு இந்த டாரிஃபை கேன்சல் செய்து சலுகைகள் அளிக்க போர்டு முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த லோக்கல் எலக்ட்ரிசிட்டி சிஸ்டங்களுக்கு ஒரு வேண்டுகோள், மின் வெட்டு இருக்கிறது. மின்வெட்டு வருவது பிரெடிக்டபிளாக இருக்க வேண்டும். இது ரெகுலராக இருக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் தடைபட்டு விட்டால், தொலைபேசியை எடுத்து அந்த போர்டுக்கு நாம் போன் செய்து கேட்டால் ரெஸ்பான்ஸ் வருவதில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்

கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். டெலிபோனிலே இந்தப் பகுதியிலேயிருந்து, ஏன் மின்சாரம் தடைபட்டு விட்டது என்று கேட்பவர் ஒரு கன்ஸ்யூமர், இந்த நாட்டினுடைய பிரஜை, மின் கட்டணம் செலுத்துபவர் என்கின்ற ஒரு கருணையோடு, அந்தப் பகுதியிலேயிருந்து பதில் சொல்பவர்கள் நடந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ளவேண்டுமென்று நான் விருப்பப் படுகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நாம் தொலை பேசிமூலம் ஏதாவது கேட்டால் அவர்கள்நீ யார் கேட்பதற்கு, ஏன் கேட்கிறாய்? கேட்டு என்ன பண்ணப் போகிறாய் என்றெல்லாம் கேட்கிறார்கள். நானே கேட்டிருக்கிறேன். I have experienced such dialogues over the phone ஏன் கரண்ட் போய்விட்டது, எப் போது வரும் என்று கேட்டால், Being a Doctor when I am running a Nursing Home and when I ask for certain clarifications the same answer had been repeated to me. This should not be the case and I am requesting the Board. அந்தப் பக்கத்திலேயிருந்து கன்ஸ்யூமர் கேட்கிறார் என்கின்ற அளவிற்கு அவர்களிடம் ஒரு ரெஸ்பான்ஸிபிலிட்டி இருக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, தகவலுக்காக, சொல்கிறேன். ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிலிட்டி, கன்ஸ்யூமருக்கும் போர்டுக்கும்ஒரு ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிலிட்டி, மின் துறையைப் பொறுத்த வரையிலே இருக்கவேண்டுமென்று நான் சொன்னால், அதற்கு மாறுபட்ட கருத்து இருக்காது என்று நம்புகிறேன். 1990–91-ல் வருவாய்க் கும் செலவுக்குமான இடைவெளி ஏறத்தாழ 476 கோடியாக அமையும் என்று குறிப்பிலே அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். போர்டு சில சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டு மென்பதை என்னுடைய பணிவான கருத்தாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே நான் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடத்திலே பேசி இருக்கிறேன் உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும், Comptroller and Auditor General of India Report கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரிப் போர்ட்டிலே தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டைப் பொறுத்த வரையில் கடந்த காலத்தில், 1983-ஆம் ஆண்டு, ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டு கொடுத்து இருக்கிறார்கள். அதிலே, The Board considered a proposal for procuring 2000 peak-hour energy metres (PHEMs) and finally approved it in February 1984. In all, the Board procured 2060 PHEMs against the above proposal during March 1984 —April 1987 at a cost of Rs. 59.74 lakhs from 3 suppliers. The Government's decision to levy the diffierential tariff during peak-hours, was, thus, hasty and was not based on adequate data and information as to the ability of the Board to implement the scheme immediately. என்று இருக்கிறது

14.00 மணி

அவர்கள் அதற்கான உதாரணங்களையெல்லாம் இங்கே தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, அவர் விடை அளிக்கின்றபோது, இதனைச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதுமட்டுமல்லாமல், Apart from the cost of 2060 PHEMs (Rs. 52.74 lakhs) the Board also incurred an estimated expenditure of Rs. 81.20 lakhs on the installation etc. of the PHEMs and the Board has thus incurred in all Rs. 1.41 crores on this scheme (excluding an interest barden of Rs. 14.33 lakhs on this investment for the period from April 1987 to July 1988 என்று இருக்கிறது. மேலும், The entire investment on this scheme has becom unproductive என்று தெளிவாகவே இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு தகவல் அதே புத்தகத்தில் இருந்து Extra avoidable expenditure due to rejection of lower/lowest tender. என்று இருக்கிறது. இதிலேயும்கூட, Rejection of the loweft tenders without proper justification by the Board led to the available expenditure of Rs. 10.37 lakhs in two cases என்று விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே கடந்த காலத்திலே நடைபெற்ற, துறைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த லாஸை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை. நீங்கள் நிறைய கருத்துக்களைச் சொல்லிவிட்டீர்கள்.

டாக்டர் க. காஞ்சனா : பெண்களுக்காக மட்டும் 30 சதவீதம் வேலை வாய்ப்பு வேண்டும் என்று பேசுவதற்கு 'டைம்' கொஞ்சம் ஜாஸ்தியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் 15 பெண்கள் மின்சாரத் துறையில் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப் பட்டு, வீட்டு மின் சாதனங்களான மின் விசிறி, மின்கலப் பெட்டி போன்றவைகளைப் பழுதுபார்ப்பதோடு, மின் கம்பத்தில் ஏறி பழுதுபார்க்கின்ற அளவுக்கு திறமையும் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு 'தமிழரசு' பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. இந்தத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் பெண்களை ' லைன் விமென் ' என்று கொண்டுவந்து, வேலை வாய்ப்பிலே அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை மற்றும் பல பகுதிகளிலிருந்து நிறைய விண்ணப்பங்கள்—கோரிக்கைகள் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். கடந்த காலத்தில்,

'அஸெஸர்' என்ற பெயரிலே 1,500 பேர் பெண்கள் அதிகமாக ஒரு 15 நாட்கள் போய் மீட்டர் ரீட் பண்ணுவார்கள்: அப்புறம், 15 நாட்கள் ஆபீஸிலே உட்கார்ந்து, பில் போடுவார்கள் என்ற அளவிலே அவர்களெல்லாம் கடந்த கால ஆட்சியிலே தேர்வு செய்யப்பட்டார்கள். வீட்டிற்கு வந்து மின் அளவு பார்ப்பது என்பது மிகவும் கொடுமையான காரியம். முக்கால்வாசி பெண்கள்தான், அவர்களுக்கு சிரமம் இருக்கிறது, உள்ளே போய்க் கதவைத் தட்டி, ரூமில் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பது பெண்கள் என்ற வகையிலே, சில practical difficulties for ladies to go alone to read the meters. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, அவர்களையெல்லாம் ஜூனியர் அஸிஸ்டெண்ட்-ஆக மாற்றுவதற்கு, துறை முன்வரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். கிருஷ்ணகிரி துணை மின் நிலையத்தை மறந்துவிடவேண்டாம். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (12—5—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14.03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

98. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் அரசு தலைமையிட மருத்துவமனையில், 6—9—1989 அன்று இறந்த விசாரணைக் கைதி திரு. கோபி (திரு. இராகவனின் மகன்) யின் இறப்பு குறித்து நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.

'அஸெஸர்' என்ற பெயரிலே 1,500 பேர் பெண்கள் அதிகமாக ஒரு 15 நாட்கள் போய் மீட்டர் ரீட் பண்ணு வார்கள்: அப்புறம், 15 நாட்கள் ஆபீஸிலே உட்கார்ந்து, பில் போடுவார்கள் என்ற அளவிலே அவர்களெல்லாம் கடந்த கால ஆட்சியிலே தேர்வு செய்யப்பட்டார்கள். வீட்டிற்கு வந்து மின் அளவு பார்ப்பது என்பது மிகவும் கொடுமையான காரியம். முக்கால்வாசி பெண்கள்தான், அவர்களுக்கு சிரமம் இருக்கிறது, உள்ளே போய்க் கதவைத் தட்டி, ரூமில் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பது பெண்கள் என்ற வகையிலே, சில practical difficulties for ladies to go alone to read the meters. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, அவர்களையெல்லாம் ஜூனியர் அஸிஸ்டெண்ட்-ஆக மாற்று வதற்கு, துறை முன்வரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். கிருஷ்ணகிரி துணை மின் நிலையத்தை மறந்துவிடவேண்டாம். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (12—5—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14.03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. லதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

98. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் அரசு தலைமையிட மருத்துவமனையில், 6—9—1989 அன்று இறந்த விசாரணைக் கைதி திரு. கோபி (திரு. இராகவனின் மகன்) யின் இறப்பு குறித்து நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.

1990 மே 11] [டாக்டர் க. காஞ்சனா]

'அஸெஸர்' என்ற பெயரிலே 1,500 பேர் பெண்கள் அதிகமாக ஒரு 15 நாட்கள் போய் மீட்டர் ரீட் பண்ணு வார்கள்: அப்புறம், 15 நாட்கள் ஆபீஸிலே உட்கார்ந்து, பில் போடுவார்கள் என்ற அளவிலே அவர்களெல்லாம் கடந்த கால ஆட்சியிலே தேர்வு செய்யப்பட்டார்கள். வீட்டிற்கு வந்து மின் அளவு பார்ப்பது என்பது மிகவும் கொடுமையான காரியம். முக்கால்வாசி பெண்கள்தான், அவர்களுக்கு சிரமம் இருக்கிறது, உள்ளே போய்க் கதவைத் தட்டி, ரூமில் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பது பெண்கள் என்ற வகையிலே, சில practical difficulties for ladies to go alone to read the meters. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, அவர்களையெல்லாம் ஜூனியர் அஸிஸ்டெண்ட்-ஆக மாற்று வதற்கு, துறை முன்வரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். கிருஷ்ணகிரி துணை மின் நிலையத்தை மறந்துவிடவேண்டாம். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (12—5—1990) காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14.03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

98. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் அரசு தலைமையிட மருத்துவமனையில், 6—9—1989 அன்று இறந்த விசாரணைக் கைதி திரு. கோபி (திரு. இராகவனின் மகன்) யின் இறப்பு குறித்து நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.

இணைப்புகள்.

(....... ..120ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

அவையின் முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியத்தின் 1988–89, 1989–90, 1990–91 ஆகிய ஆண்டுகளுக்கான நிதி நிலை அறிக்கைகளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, 1948ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61ஆம் பிரிவிற்கிணங்க, தமிழ்நாடு மின் வாரியம் இந்த நிதி நிலை அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. வாரியத்தின் செயல் முறை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின் வாரியமும் கருத்தில் கொள்ளும்.

3. மின்சாரம் ஒரு பலதிறன் கொண்ட சக்தி ஆதாரமாகும். அது பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையாகும். அது மனித வாழ்க்கைக்கு ஓர் அடிப்படைத் தேவை ஆகிவிட்டது. இந்த அதிசயமிக்க சக்தி ஆதாரம், சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றப் பயன்படுத்தப்படல் வேண்டும். 1948ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியம், மாநிலத்தில் மிகவும் திறமையாகவும் சிக்கனமாகவும் மின்சாரத்தை உற்பத்தி செய்து, எடுத்துச் சென்று பகிர்ந்தளிக்கும் கடமைக்குப் பொறுப்பேற்றுள்ளது. மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான கொள்கைகளை விரிவாக விவாதிக்கவும், கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தெளிவாக்கவும், மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீதான இந்த விவாதம், ஒரு வாய்ப்பினை அளிக்கும் என நான் நம்புகிறேன். நமக்கு முன்னுள்ள பணிகளையும், வருங்காலத் திட்டங்களையும் விளக்கும் முன்னர், மாநிலத்தின் தற்போதைய மின் வழங்கல் நிலையையும் வாரியத்தின் செயற்பாட்டினையும் குறித்து ஓர் சுருக்கமான ஆய்வுரை வழங்க விழைகிறேன்.

மின் வழங்கல் நிலை.

4. சென்ற ஆண்டு இதே கால கட்டத்தில் இருந்த மின் நிலையை விட, மாநிலத்தில் மின் வழங்கல் நிலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1—2—1985-ல் துவங்கி ஏறத்தாழ 5

1990 மே 11]

ஆண்டு காலத்திற்குப் பின்னர், மாநிலத்தில் மின் சக்தி உபயோகத்தின் மீதான வெட்டு 12—1—1990 முதல் நீக்கப்பட்டது. தற்போது ஏறத்தாழ 1,100 உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகட்கு மட்டும், தேவையில் 10 சதவிகிதம் மின் வெட்டு உள்ளது. சென்ற வருடம், இதே காலத்தில் உயர் அழுத்தம் மற்றும் குறைந்த அழுத்தத் தொழிற்சாலைகட்கு 60 சதவிகிதம் மின் வெட்டு இருந்தது. 1989 ஏப்ரலில், மின் வாரியம், உச்சக் கட்டத் தேவையான 2,500 மெ.வா. திறனைச் சமாளித்து நாளொன்றுக்குச் சராசரியாக 45.5 மில்லியன் யூனிட்டுகள் மட்டுமே வழங்க முடிந்தது. விவசாயப் பம்பு செட்டுகளுக்கும் ஊரகத் தொழிற்சாலைகட்கும், பகலில் நான்கு மணி நேரமும், இரவில் ஆறு மணி நேரமும் மட்டுமே என, மின் வழங்கல் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு மின் வாரியம் உச்சக் கட்டத் தேவையான 3,000 மெ. வாட் திறனுடன் நாளொன்றுக்குச் சராசரியாக 60.5 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்கும் நிலையிலுள்ளது. விவசாயப் பம்பு செட்டுகளுக்கும் ஊரகத் தொழிற்சாலைகட்கும் தற்போது, பகலில் ஆறு மணி நேரமும், இரவில் எட்டு மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

5. கல்பாக்கம் மற்றும் இராமகுண்டத்திலுள்ள மத்திய அரசின் மின் நிலையங்களின் உற்பத்திக் குறைபாடும், நெய்வேலி இரண்டாவது மின் நிலையத்தின் உற்பத்தியில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் 10–10–1988 அன்று மின் நிலையத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக இரண்டு பிரிவுகளும் மற்றும் 25–1–1989 அன்று ஜெனரேட்டர் பழுதடைந்ததால் ஒன்றுமாக 110 மெ.வாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகள் வேலை செய்யாததன் காரணமாக எண்ணூர் அனல்மின்நிலையத்தில் குறைவான மின் உற்பத்தி ஆகியவையே சென்ற வருடம் கோடை மாதங்களில் நிலவிய கடுமையான மின் தட்டுப்பாட்டுக்கான மூல காரணங்களாகும். இராமகுண்டம் பெரும் பேரனல் நிலையத்திலிருந்தும், நெய்வேலி மின் நிலையத்திலிருந்தும் கிடைக்கும் மின்சாரத்தைப் பெறுவதற்கான ஸ்ரீபெரும்புதூர், 400 கே. வீ. துணை மின் நிலையத்தின் 315 எம்.வி.ஏ. 400 கே. வி. மின் அழுத்த மாற்றி 20–1–1989 அன்று பழுதுபட்டதனால், சென்னையிலும், சுற்றுப்புறங்களிலும் ஒரே சீரான மின் அழுத்தத்தில் இடர்பாடு ஏற்பட்டது. மாநிலத்தில் மின் வழங்கல் நிலை மிகவும் மோசமாக இருந்த அதே நேரத்தில், தேசிய அனல் மின் கழகத்திற்குச் சொந்தமான கடப்பை ஸ்ரீபெரும்புதூர் 400 கே. வி. மின் தொடர் கோபுரங்களில் ஏற்பட்ட இடையூறு, நிலைமையை மேலும் மோசமாக்கியது. இந்த இடையூறுகளின் காரணமாக நாளொன்றுக்குக் கட்டுபாடற்ற தேவையான 56 மில்லியன் யூனிட்டுகளுக்குப் பதிலாக மார்ச் 1989 மற்றும் ஜூன் 1989-க்கு இடையே, சராசரியாக நாளொன்றுக்கு 45.5 மி.யூ. மின்சாரம்

மட்டுமே கிடைத்தது. கோடை மாதங்களில் ஏற்பட்ட கடுமையான மின்சாரக் குறைவினைச் சமாளிக்க மின்வெட்டை 1—3—1989 முதல் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும் 24—4—1989 முதல் 60 சதவீதமாகவும் அதிகரிப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழி இல்லை.

6. எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மூன்று 110 மெ.வாட் பிரிவுகளும் சீர் செய்யப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன. பழுதடைந்த 315 கே. வி. ஏ. மின் அழுத்த மாற்றி, மிகக் குறைந்த காலத்தில், அந்த இடத்திலேயே சரி செய்யப்பட்டுவிட்டது. பொதுவாக, இவ்வாறான கோளாறுகள், உற்பத்தியாளரின் பணிமனைகளிலேயே சரி செய்யப்படும். அவ்வாறு செய்திருந்தால், கருவியைப் பணிமனைக்கு எடுத்துச் சென்று, சீர்செய்து, மீண்டும் கொணர்ந்து பயன்படுத்த ஏறத்தாழ ஒரு வருடம் ஆகியிருக்கும். நாட்டிலேயே முதன் முறையாக சுமார் 260 டன் எடையுள்ள இந்த வகை மின் அழுத்த மாற்றி, வழங்கிய நிறுவனத்தின் உதவியுடன் மின்சார வாரியத்தால் 92 நாட்களிலேயே சரி செய்யப்பட்டு விட்டது. கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் மின் உற்பத்தி மீண்டும் துவங்கி விட்டது. எனினும் குறைந்த சுமை அடிப்படையிலேயே, நிலையம் பணி செய்கிறது. நெய்வேலி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது பகுதி சீராக மின்சாரம் வழங்குகிறது.

7. தென்மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவ மழை நன்கு இருந்ததால், நமது புனல் மின் நீர்த்தேக்கங்களில் நீர் வரவு சிறப்பாக அமைந்தது. இதன் காரணமாக 1—5—1990 அன்று நீரளவு 868 மில்லியன் யூனிட்டுகளுக்குச் சமமாகும். சென்ற வருட நீர் அளவு 83 மி. யூனிட்டுகள் மட்டுமே, கையிருப்பு நீரின் அளவில் முன்னேற்றம் காரணமாக மின் வெட்டு 60 சதவிகிதத்திலிருந்து படிப்படியாகக் குறைக்கப்பட்டு, ஏற்கனவே குறிப்பிட்டவாறு, 12—1—1990 முதல் முழுவதுமாக நீக்கப்பட்டது. 1989இல் கூடுதலாக அமைக்கப்பட்ட மேட்டூர் அனல் மின் நிலையத்தின் இரண்டு 210 மெ. வா. பிரிவுகளின் கூடுதல் மின் உற்பத்தியினையும் கொண்டு, இந்த ஆண்டு இறுதி வரை மின்சார வாரியம் மின் வெட்டு இல்லாமல் மின்சாரம் வழங்க இயலும்.

தூத்துக்குடி அனல் மின்நிலையத்தின் செயல்பாடு.

8. நமது மாநிலத்தின் அனல் மின் நிலையங்கள் மிகவும் திறமையாகச் செயல்படுவதனைக் கேள்வியுற்று மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்ளுவர். தூத்துக்குடி அனல் மின் நிலையம்

1990 மே 11]

நாட்டிலுள்ள தலைசிறந்த மின் நிலையங்களில் ஒன்றாகும். இந்நிலையம் தொடர்ந்து மூன்றாவது முறையாக 1988ல் மத்திய அரசின் சிறப்பு மிகு விருதினை பெற்றது. 1989ல் இந்நிலையம் 83.1 சதவிகிதம் மின் சுமைக் காரணியை எட்டியது. உற்பத்திக்கான சிறப்புமிகு விருதினைப் பெறத் தொடர்ந்து நான்காவது முறையாகத் தகுதி பெற்றுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஆய்வு.

9. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985-90), மின் உற்பத்திப் பெருக்குதலில், மின்சார வாரியம் பாராட்டத் தக்க முன்னேற்றம் பெற்றுள்ளது. மாநில அளவில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்தித் திறனை 1416 மெ.வா. அதிகரிக்கத் திட்டமிடப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1428 மெ. வா. உற்பத்தியை அதிகரித்து மின் வாரியம்; இந்த இலக்கைத் தாண்டி விட்டது. சேர்வலாறு புனல் மின் திட்டத்திலிருந்து 20 மெ. வா. காடம்பாறை விசையேற்ற நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து 400 மெ. வாட் கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திலிருந்து 120 மெ வாட் ஐந்தாவது குந்தா மின் நிலையத்தின் கூடுதல் பிரிவிலிருந்து 20 மெ. வாட். மேட்டூர் அனல் மின் நிலையத்தின் இரண்டு கட்டங்களிலிருந்து 840 மெ. வாட் பைக்காரா சிறு புனல் மின் திட்டத்திலிருந்து 2 மெ. வாட். வைகை சிறு புனல் மின் திட்டத்திலிருந்து 6 மெ. வா. கீழ்பவானி சிறு புனல் மின் திட்டத்திலிருந்து 6 மெ. வாட் மற்றும் காற்றலைகளிலிருந்து 14 மெ. வாட் கூடுதல் மின்சாரம் கிடைத்தது. இவற்றில், 1989-90இல் 235 மெ. வாட் மின் திறன் அதிகரித்தது.

காற்றின் உதவியுடன் மின்சாரம்.

10. இந்த இடத்தில், மாநிலத்தில், காற்றின் சக்தியினைப் பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும், மத்திய அரசின் வழக்கத்துக்கு மாறான சக்தி ஆதாரங்களின் துறை மற்றும் டென்மார்க் அரசின் உதவியினையும், நன்றியுடன் நான் பாராட்ட வேண்டும். நாட்டில், வேகமான காற்று வீசும் மாநிலங்களில், தமிழ்நாடு ஒன்றாகும். மின் உற்பத்திக்கான சக்தி ஆதாரங்கள் மிகக் குறைவாக உள்ள சூழ்நிலையில், தொடர்ந்து கிடைக்கும் இந்தச் சக்தியினை முழுவதுமாகப் பயன்படுத்துதல் அறிவு பூர்வமான செயலாகும். காற்றுச் சக்தித் திட்டங்களை வலியுறுத்தும் வகையில், மத்திய அரசின் வழக்கத்துக்கு மாறான சக்தி ஆதாரங்களின் துறை காற்றிலிருந்து மின் உற்பத்தி செய்வதற்குத் தேவையான கருவிகளை இலவசமாக வழங்க முன் வந்தது. இத்திட்டத்தின் வாய்ப்பினை பயன்படுத்தி, தமிழ்நாடு மின் சக்தி முன்னேற்ற முகமைக் கழகத்தின் உதவியுடன், தூத்துக்குடிக்கு அருகிலுள்ள முல்லைக் காட்டில் 55 கி. வா. திறன் கொண்ட 20 காற்றாலைகளையும்,

சிதம்பரனார் மாவட்டம் கயத்தாறில் 200 கி. வா. திறன் கொண்ட 6 மற்றும் 90 கி.வா. திறன் கொண்ட 15 காற்றாலைகளையும் மின்சார வாரியம் நிறுவியுள்ளது. டென்மார்க் அரசு வழங்கும் இதுபோன்ற உதவியுடன், தமிழ்நாடு மின் சக்தி முன்னேற்ற முகமைக் கழகத்தின் உதவியுடன், கயத்தாறில் 6 மெகாவாட் திறன் கொண்ட ஒன்றும், கன்னியாகுமரி மாவட்டம் முப்பந்தலில் 4 மெ. வாட் திறன் கொண்ட ஒன்றுமாக இரண்டு காற்றாலைப் பண்ணைகளை மின்வாரியம் அமைத்துள்ளது. ஒவ்வொன்றும் 90 கி.வா. திறன் கொண்ட காற்றுச் சக்தி மின் உற்பத்தி ஜெனரேட்டர்களுடன், சுல்தான்பேட்டையில் ஒன்றும் புளியங்குளத்தில் ஒன்றுமாக இரண்டு செயல் முறை விளக்கத் திட்டங்களை மின் வாரியம் நிறைவேற்றியுள்ளது. பாரத் கனரக மின் நிறுவனமும், தன்னால் உற்பத்தி செய்யப்பட்ட 55 கி.வா. திறன் கொண்ட ஒரு இயந்திரத்தை முல்லைக் காட்டில் நிறுவியுள்ளது. மாநிலத்தில் சுமார் 4 வருடங்களில் 14 மெ. வாட். காற்றாலை மின் உற்பத்தித்திறன் நிறுவப்பட்டது பாராட்டுதற்குரியது. இந்த சக்தியைப் பெருமளவில் பயன் படுத்தலாம் என்ற நம்பிக்கையினை இதுவரை கிடைத்த அனுபவம் நமக்குத் தந்துள்ளது. இச்செயல்பாட்டினால் ஊக்குவிக்கப்பட்டு 3 தனியார் தொழில் நிறுவனங்கள் 250 கி.வா. திறன் கொண்ட 6 காற்றுச் சக்தி மின் உற்பத்தி ஜெனரேட்டர்களை நிறுவியுள்ளன. மேலும், சில நிறுவனங்கள் இத்துறையில் ஆர்வம் காட்டியுள்ளன.

11. அனுப்புகைத் திட்டத்தின் கீழ், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 100 புதிய துணைமின் நிலையங்களும், 2,725 கி.மீட்டர் கூடுதல் உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும் அமைக்கப்பட்டன. இவற்றில், 21 புதிய துணைமின் நிலையங்களும், 4.61 கி.மீ. மின்கம்பித் தொடர்களும், 1989-90-ல் அமைக்கப்பட்டன.

12. விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. 31—3—1990 நிலவரப்படி 12,77,501 விவசாய மின் இணைப்புகள் உள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கான 2,00,000 பம்புசெட்டுகளுக்கு எதிராக 2,43,945 மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. 1989–90-ல் இலக்கான 40,000 பம்புசெட்டுகளுக்கு எதிராக , 41,560 பம்பு செட்டுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டன.

13. ‘‘குடிசைக்கோர் மின் விளக்குத் திட்டத்தின்கீழ், கிராமபுறங்களிலுள்ள சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கும் மின்சாரத்தின் நன்மைகளை வழங்கும் நோக்குடன், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைக்கான 2,00,000 இணைப்புகளுக்கு எதிராக 2,51,429 இணைப்புகள் தரப்பட்டன. 1989–90-ல்

1990 மே 11]

இலக்கான 40,000 இணைப்புகளுக்கு எதிராக 42,284 இணைப்புகள் தரப்பட்டன. 31—3—1990 நிலவரப்படி, மின் இணைப்புப் பெற்ற குடிசைகளின் மொத்த எண்ணிக்கை 8,87,200 ஆகும்.

விவசாயிகளுக்கான சலுகைகள்.

14. விவசாய மின் பயனீட்டாளரின் நீண்டகாலக் குறைகளைக் களைவதில் நாம் உறுதியாக உள்ளோம். சிறு விவசாயிகட்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. ஏனையச் விவசாய மின் பயனீட்டாளருக்கான கட்டணம், ஒரு குதிரைச் சக்திக்கு ஆண்டுக்கு ரூ. 75 ஆக இருந்தது. 1989 ஆம் ஆண்டு அக்டோபரில், 5 குதிரைச்சக்தி அதற்குக் குறைவான குதிரைச் சக்தியுடைய பம்பு செட்டுகளுக்கு மேற்கண்ட கட்டணம், ஆண்டுக்கு ரூ. 50 ஆகக் குறைக்கப்பட்டது. சமீபத்தில், இச்சலுகை 10 குதிரைச் சக்தி அதற்குக் குறைவான சக்திகொண்ட பம்பு செட்டுகளுக்கும், நீட்டிக்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு, ரூ.13 கோடி அளவில், சுமார், 10.5 இலட்சம் விவசாயிகள், மேற்கண்ட கட்டணக் குறைப்பினால், பயன்பெறுவர்.

15. 1+1 வழிமுறையின் கீழ் 1—4—1979 வரைத் தங்களது நிலுவைத் தொகையைச் செலுத்தாத விவசாயப் பயனீட்டாளரைப் பொறுத்தவரை, 1—4—1979 அன்று நிலுவை ஏதும் இல்லாது, அதற்குப் பின்னரே நிலுவை உள்ளவர்கள், 1—4—1979 வரை உள்ள நிலுவைத் தொகையையும் பின்னர் உள்ள நிலுவைத் தொகையையும், மொத்தமாகவோ, அல்லது தவணைகளிலோ, 31—12—1989 க்கு முன்னர் செலுத்திவிட்டால் அவர்களுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. வட்டியினைத் தள்ளுபடி செய்ததன் மூலம் ஏற்பட்ட வருவாய் இழப்பு சுமார் ரூ. 10 கோடி ஆகும்.

16. 1—4—1979 அன்றோ, அதற்குப் பின்னரோ, பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மற்றும் மின் இணைப்புக் கம்பித் தொடர்கள் துண்டிக்கப்பட்ட அல்லது துண்டிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட விவசாயிகட்குப் பயன்தரும் வகையில், அவற்றைப் புது இணைப்புகளாகக் கருதி, அந்த விவசாயிகள் 31-3-1990 க்குள் வாரியத்துக்கு விண்ணப்பித்து, மொத்த நிலுவைத் தொகையையும் செலுத்தினால் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் மீண்டும் மின் இணைப்பு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

17. விவசாயிகள் தற்போதுள்ள இடத்திலிருந்து தங்கள் பம்புசெட்டுகளைத் தங்களுக்குச் சொந்தமான வேறொரு நிலத்தில், மின்வாரியத்திடம் தெரிவித்துவிட்டு, இடம் மாற்றி அமைக்க அனுமதிக்கப்பட்டனர். மின் வழங்கலுக்கான நிபந்தனைகளின் படி இவ்வாறான இடமாற்றம் தவறாகக் கருதப்படமாட்டாது.

[1990 மே 11

18. விவசாய மின் இணைப்புகளுக்குத் தவறான நடவடிக்கைகளுக்கான அபராதத்தின் கடுமை தளர்த்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட நிபந்தனைகளின்படி, அபராதம் ஒரு குதிரைச் சக்திக்கு ரூ. 500 மட்டுமே. இது தவறான நடவடிக்கையின் கால அளவைச் சாராது மேலும் இத்திருத்தம் பின் தேதியிடப்பட்டு 15—9—1984 முதல் அமல் செய்யப்படுகிறது.

19. மின்சார வாரியத்தின் செயற்பொறியாளருக்கு விண்ணப்பம் செய்து விவசாயப் பயனீட்டாளர்கள் இணைப்புச் சுமைக்கு இணையாகத் தங்கள் பயனீட்டுச் சுமையைக் குறைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இச்சலுகையின் காரணமாக விவசாயப் பயனீட்டாளர்கள் பயன்படுத்தாத சுமைக்கும் சேர்த்து ஒட்டுமொத்தக் கட்டணம் செலுத்த வேண்டிய நிர்பந்தத்திலிருந்து விடுதலை பெறுகின்றனர்.

1989—90 ஆம் வருடத் திட்டம்.

20. மத்திய திட்டக் குழுவினால் ஏற்பளிக்கப்பட்ட 1989—90 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடான ரூ. 389 கோடிக்கு எதிராக, உண்மையான செலவு, இறுதித் திருத்திய நிதி ஒதுக்கீட்டின்படி ரூ. 445.59 கோடி ஆகும் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மின் சக்தி நிதி உதவிக் கழகம் வழங்கிய நிதி உதவியின் காரணமாக இக்கூடுதல் நிதி ஒதுக்கீடு சாத்தியம் ஆயிற்று. திட்டத்தொகைப் பின் கீழான மேற்சொன்ன நிதி ஒதுக்கீடு தவிர ஊரக மின் வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன், திட்டத்துக்குப் புறம்பே, விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை மின்வாரியம் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், 1989—90 ஆம் ஆண்டில் ரூ. 45.78 கோடி செலவிடப்பட்டது. மத்திய நிதி உதவியுடன் அனல்மின் நிலையங்களைப் புனரமைத்து நவீனமாக்கும் திட்டத்தையும், மேற்குத் தொடர்ச்சி மலை முன்னேற்றத் திட்டத்தின் கீழ் பூனாச்சி சிறு புனல் மின் திட்டத்தையும், மலைப்பகுதி முன்னேற்றத் திட்டத்தின் கீழ் மரவகண்டி சிறுபுனல் மின் திட்டத்தையும் மின்வாரியம் செயல்படுத்தி வருகின்றது. 1989—90 ஆம் ஆண்டில், மின்வாரியத்தின் மூலதனச் செலவினங்களின் மொத்தம் ரூ. 495.69 கோடி ஆகும்.

வருவாய் மற்றும் செலவினம்.

21. இப்போது நான், மின்வாரியத்தின் நிதிநிலை குறித்தும் பயனீட்டாளரின் ஒரு பகுதியினருக்கான கட்டணம் திருத்தப்பட வேண்டிய கட்டாய சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டது குறித்தும்

1990 மே 11]

கூற விரும்புகிறேன். 1988-89 ஆம் ஆண்டில் வருவாய்ச் செல வினமான ரூ. 1,200.55 கோடிக்கு எதிராக வருவாய் வரவினம் ரூ. 873.36 கோடியாக மட்டுமே இருந்தது. 1989-90 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டின்படி செலவு ரூ. 1,551.18 கோடி எனவும், வரவு ரூ. 1,045.88 கோடி எனவும் அமையும். 1990–91 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டின்படி, வருவாய்ச் செலவினம் ரூ. 1,899.56 கோடியாகவும், 1989–90 ஆம் ஆண்டிற்கான கட்டண விகிதப்படி, வரவு ரூ. 1,183.40 கோடி யாகவும் அமையும், செலவுக்கும் வரவுக்குமான இடைவெளி, 1987-88 ஆம் ஆண்டில் இருந்த ரூ. 223.42 கோடியிலிருந்து, 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 327.19 கோடியாகவும். 1989-90 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 505.30 கோடியாகவும். 1990-91 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின்படி ரூ. 716.16 கோடி ஆகவும் உயர்ந்துள்ளது கவலைதருகிறது. அதிகரித்துவரும் இந்த இடைவெளி மின்வாரியத்தின் செயல்பாட்டின் திறமைக் குறைவினால் ஏற்படாமல், வேறு பல காரணங்களினால் ஏற்படு கிறது. உற்பத்தியில் அனல் மின்சாரம் அளவில் விகிதம் கூடுவதும் நிலக்கரி, எண்ணெய் போன்ற இடு பொருட்கள் மற்றும் வாங்கப்படும் மின்சாரத்தின் விலை, மின்வாரியத்தினால் பெறப் பட்ட கடன்களுக்கான வட்டிவிகிதம், ஆகியவை கூடுவதும், சிறு விவசாயிகட்கும், குடிசை வாழ்வோருக்கும் இலவசமாகவும் ஏனைய விவசாயப் பயனீட்டாளருக்குக் குறைந்த விலையிலும், மேலும், பல பகுதியினருக்கு உற்பத்திச் செலவைவிடக் குறைந்த விலையிலும் மின்சாரம் வழங்குவதே வருவாய்க்கும் செலவுக்கும் இடையே ஆன அதிகரித்து வரும் இந்த இடைவெளிக்கான முக்கிய காரணங்களாகும்.

22. 1990-91 ஆம் ஆண்டில், மின் வாரியம் ரூ. 761.13கோடி அனல் மின் நிலையங்களில் பயன்படும் எரிபொருட்களுக்காகவும், ரூ. 403.43 கோடி மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்துக்கெனவும், ரூ. 45.64 கோடி இயக்கம் மற்றும் பராமரிப்புக்கெனவும் ரூ. 291.75 கோடி பணி யாளர் ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவாகவும், ரூ. 95.72 கோடி தேய்மானமாகவும், ரூ. 301.89 கோடி அரசு மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வட்டியாகவும் செலவிட வேண்டியுள்ளது. 1990-91ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டுள்ள வரவான ரூ. 1,183.40 கோடியானது, நிலக்கரி எண்ணெய் மற்றும் மின்சாரம் வாங்கத் தேவையென மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 1,164.56 கோடி செலவினத்துக்கு ஈடு கட்ட மட்டுமே போதுமானது. இவ்வித நிதி நெருக்கடியில் மின் வாரியம் திறமையாகச் செயல்பட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்ளுவர் என நான் நம்புகிறேன். எனவே, நிதிநிலையை மேம்படுத்தும் வழி முறைகளைக் கண்டறிய வேண்டும்.

[1990 மே 1[1]

நிலக்கரி வழங்கலில் பிரச்சினைகள்.

23. இந்த இடத்தில், நமது அனல் மின் நிலையங்களுக்கான நிலக்கரி பெறுவதிலான பிரச்சினைகட்கும், அதனால் மின்வாரியத்தின் நிதிநிலையில் ஏற்படும் விளைவுகட்கும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நமது மாநிலத்தில், 3 அனல் மின்நிலையங்கள் உள்ளன. 450 மெ.வா. திறன்கொண்ட எண்ணூர் நிலையத்தின் தேவை நாளொன்றுக்கு 6,000 டன்களாகும். 630 மெ.வா. திறன்கொண்ட தூத்துக்குடி நிலையத்தின் தேவை நாளொன்றுக்கு 9,000 டன்களாகும். 840 மெ.வா. திறன்கொண்ட மேட்டூர் நிலையத்தின் தேவை நாளொன்றுக்கு 12,000 டன்களாகும். ஆக, நாளொன்றுக்கான மொத்தத் தேவை 27,000 டன்களாகும். தமிழ்நாட்டில் நிலக்கரி கிடைக்காததால், இந்த நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி, ஆந்திரப் பிரதேசம் அல்லது வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸ்ஸா மாநிலங்களிலிருந்து பெறப்பட வேண்டும். எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் கருத்தில் கொள்ளப்பட்டபோது தேவையான நிலக்கரி முழுவதும் இரயில் மார்க்கமாகப் பெறப்படும் வகையில், அவை ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களுடன் இணைக்கப்பட்டன. தூத்துக்குடி, வங்காளம் மற்றும் பீஹார் பகுதியுடன் கடல் மற்றும் இரயில் மார்க்கமாக இணைக்கப்பட்டது. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களின் உற்பத்தி குறைவினால், எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல்மின் நிலையங்களின் தேவையை அது சமாளிக்க முடியவில்லை. சிறிது காலத்துக்கு முன்னர், எண்ணூர்-சிங்கரேணி நிலக்கரி சுரங்கங்களுக்கிடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டது. தற்போது, மேட்டூரும் சிங்கரேணிச் சுரங்கங்களிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டது. தற்போது மின்வாரியம், இவ்விரண்டு நிலையங்களுக்கான நிலக்கரியை, வட மாநிலங்களிலிருந்து கடல் மற்றும் இரயில் மார்க்கமாக பெற வேண்டிய கட்டாயத்திலுள்ளது. இத் தொடர்பிலான மாற்றம் இரண்டு வகைகளில் நம்மைப் பாதித்துள்ளது. முதலாவதாகக் கடல் மற்றும் இரயில் மார்க்கமாக நிலக்கரியைக் கொண்டுவர நாம் கூடுதலாகச் செலவிட வேண்டியுள்ளது. இரண்டாவதாக, வட மாநிலங்களின் நிலக்கரியின் தரக்குறைவினால், நமது அனல் மின்நிலையங்களில் நாம் அதே அளவு மின் உற்பத்திக்கென கூடுதல் அளவில் நிலக்கரியை எரிக்க வேண்டியுள்ளது. சிங்கரேணியிலிருந்து எண்ணூருக்குப் பெறப்படும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 625 மட்டுமே. ஆனால் வட மாநிலங்களிலிருந்து நிலக்கரி பெற, நாம் தற்போது டன் ஒன்றுக்கு ரூ. 887 செலவிட வேண்டியுள்ளது. இதேபோன்று, மேட்டூரிலும், சிங்ரேணி நிலக்கரியின் இறக்க விலையான டன்னுக்கு ரூ. 738-க்கு மாறாக, வட மாநிலங்களின் நிலக்கரிக்கு டன் ஒன்றுக்கு ரூ. 994 செலவிட வேண்டியுள்ளது. வட மாநிலங்கள் வழங்கும் நிலக்கரியால், இந்த நிலையங்களில் ஒவ்வொரு யூனிட் மின் உற்பத்திக்கென 25 சதவீதம் அதிக அளவு நிலக்கரி தேவைப்படுகிறது.

1990 மே 11]

1989–90இல் இந்த மாறிய இணைப்பினால் மின்வாரியம், எண்ணூர் மற்றும் மேட்டூருக்கு வழங்கப்பட்ட நிலக்கரிக் கெனக் கூடுதலாக, ரூ. 100 கோடிக்கும் அதிகமாகச் செலவு செய் திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு யூனிட் மின் உற்பத் திக்கான செலவு 1987–88-ல் இருந்த 45.63 பைசாவிலிருந்து, 74 பைசாவாகத் தற்போது உயர்ந்துள்ளது.

24. இந்தப் பிரச்சினை குறித்து, நாம் மத்திய அரசிடம் எடுத்துக் கூறி, எண்ணூர் மற்றும் மேட்டூர் நிலையங்கட்குச் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வழங்குவதற் கான தேவையை வலியுறுத்தியுள்ளோம். மாண்புமிகு முதலமைச் சர் சமீபத்தில் மாண்புமிகு மத்திய எரிசக்தித்துறை அமைச்சரைச் சந்தித்து, தமிழ்நாட்டின் மின் நிலையங்கட்கு சிங்கரேணி நிலக்கரி மறுக்கப்படுவது நியாயமற்றது எனவும், சிங்கரேணிச் சுரங்கங்களுடன் இணைக்கப்பட்ட எல்லா அனல் மின் நிலையங் கட்கும், சிங்கரேணியின் உற்பத்தி விகிதாச்சார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு நிலைமை சீர் செய்யப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார். வட மாநிலங்களிலிருந்து அதிக விலையில் பெறப் படும் நிலக்கரியால் ஏற்படும் மின்வாரியத்தின் நிதி இழப்பினை ஈடுசெய்ய வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார். மேற்கண்ட வேண்டுகோ ளைக் கனிவுடன் கருத்தில் கொண்டு, பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண, மத்திய அமைச்சர் இசைந்துள்ளார்.

25. வருவாய் தலைப்பின்கீழ் கூடுதல் செலவினை எதிர் நோக்கிய மின்வாரியம், தனது மூலதனச் செலவுத் திட்டங்களை செயல் படுத்துவதற்கென, மாநில அரசின் நிதி உதவியான ரூ. 400 கோடியைத் தவிர, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கோரும் நிலை ஏற்பட்டது. வருவாய்ச் செலவினத்தின் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், மூலதனத் திட்டங்கட் கெனவும் நிலுவையிலுள்ள கடன்களை அடைக்கவும் மின் வாரியம் 1989–90 இல் வெளிச்சந்தை, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஊரக மின் வளர்ச்சிக் கழகம், மின்சார நிதி உதவிக் கழகம், இந்திய தொழில் முன்னேற்ற வங்கி ஆகியவற்றிடமிருந்து ரூ. 490 கோடி கடன் பெற வேண்டியதாயிற்று. இதனால் வட்டிச்சுமை பெருமளவு கூடியுள்ளது. அரசு நீங்கலாக, ஏனைய நிதி நிறுவனங்கட்கு 1988–89 இல் செலுத்தப் பட்ட வட்டியான ரூ. 81.11 கோடிக்கு மாறாக 1990-91-ல் செலுத்தப்படும் வட்டி ரூ. 206.32 கோடியாக உயரும்.

கட்டண திருத்தத்துக்கான தேவை.

26. இயக்கச் செலவினம் வெகுவாக உயர்ந்துள்ளதன் கார ணத்தால், குறைந்த அழுத்த மின் உற்பத்திச் செலவு 1987–88-க் கான 92.45 பைசாவிலிருந்து 1990–91 இல் 130 பைசா வாக உயர்ந்துள்ளது. வருவாய்க்கும் செலவுக்கும் உள்ள

இடைவெளியைச் சரிக்கட்ட விவசாயப் பயனீட்டாளர், குறைந்த வருமானம் உள்ள குடியிருப்புப் பயனீட்டாளர் மற்றும் குடிசை வாழ்வோரைப் பாதிக்காத வண்ணம், பயனீட்டாளரின் சில சாராருக்கான கட்டணத்தைத் திருத்துவதைத் தவிர, அரசுக்கு வேறு வழி இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டவாறு விவசாயிகட்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்க நாம் உறுதி கொண்டுள்ளோம். இந்த அடிப்படையில்தான், இணைக்கப்பட்ட மின் சுமை 10 குதிரைச் சக்திக்கும், அதற்குக் குறைவாகவும் உள்ள விவசாயிகட்கான கட்டணம் ஒரு குதிரைச் சக்திக்கு ரூ. 75-லிருந்து ரூ. 50 ஆக மேலும் குறைக்கப்பட்டது. கிராமப்புறங்களிலுள்ள குடிசை வாசிகள் ''குடிசைக்கோர் மின் விளக்குத் திட்டத்தின்'' கீழ் தொடர்ந்து இலவச மின்சாரம் பெறுவர். மாதம் ஒன்றுக்கு 25 யூனிட்டுகளுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் குடியிருப்புகளுக்கான கட்டணம் தொடர்ந்து யூனிட் ஒன்றுக்கு 55 பைசாவாக இருக்கும். சுருங்கச் சொன்னால் ஏறத்தாழ 50 சதவிகிதம் பயனீட்டாளர்கள், கட்டணத் திருத்தத்துக்கு உட்படமாட்டார்கள். கட்டணத் திருத்தத்துக்குப்பின்னரும் 1990-91 இல் வருவாய்க்கும் செலவுக்குமான இடைவெளி, ஏறத்தாழ ரூ. 476 கோடியாக அமையும். மேற்சொன்ன கட்டண உயர்வுக்குப் பின்னரும், தமிழ்நாட்டின் கட்டண விகிதங்கள், தமிழ்நாட்டைப்போலவே பெருமளவில் அனல் மின்சாரம் உற்பத்தி செய்யும் குஜராத், மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளத்திலுள்ள கட்டண விகிதங்களைவிடக் குறைவே ஆகும். இடுபொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் சூழ்நிலையில், தற்போதைய கட்டண திருத்தம் தவிர்க்க இயலாதது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்பார்கள்.

வருங்காலத் திட்டங்கள்.

27. வருங்காலத் திட்டங்களை இப்போது விவரிக்கிறேன். மாநில வாரியாக, வருங்கால மின் தேவையைக் கணக்கிடும் பொறுப்பிலுள்ள மத்திய அரசின் 13-வது மின் ஆய்வுக் குழு, 1994-95-ல் மாநிலத்தின் தேவை, 5,792 மெ. வாட் ஆகவும், மின் அளவின் தேவை 30,614 மி.யூ. ஆகவும் உயரும் என முன் கணக்கிட்டுள்ளது. தற்போதுள்ள அளவு 3,000 மெ. வாட் மற்றும் 21,089 மி.யூ. மட்டுமே. இந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க மின் உற்பத்தித்திறனைக் குறைந்தது 2,000 மெ.வாட் ஆக அதிகரிக்க வேண்டும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்தி முன்னேற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க மாநிலம் தீர்மானித்துள்ளது. ரூ. 605.55 கோடி செலவில் 420 மெ. வாட் தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் ரூ. 763.87 கோடி செலவில் 630 மெ.வாட் வட சென்னை அனல் மின் திட்டம், ரூ. 123 கோடி செலவில், 120 மெ.வாட் பேசின் பிரிட்ஜ் எரிவாயு மின் திட்டம், ரூ. 22.77 கோடி செலவில், 10 மெ.வா.

1990 மே 11]

நரிமணம் எரிவாயு மின் திட்டம் மற்றும் 4.75 மெ.வாட் திறன் கொண்ட சிறு புனல் மின் திட்டங்கள் ஆகியவை, தற்போது நடைபெற்று எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிக்கப் பெறும் திட்டங்களாகும். இவற்றில், தூத்துக்குடியில் 210 மெ.வாட் ஒரு பகுதியும், நரிமணத்தில் 10 மெ.வாட். எரிவாயு மின் நிலையமும், கீழ்பவானி சிறு புனல் மின் திட்டத்தில் 2 மெ.வாட் திறன் கொண்ட ஒரு பகுதியும் 1991 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்கு முன்னர் செயல்படும். மேற்சொன்னவை தவிர, உற்பத்தியை 300 மெ.வாட். அதிகரிப்பதற்கென, எரிவாயு மின் நிலையங்களும், 100 மெ.வாட் கட்டுவதற்கெனக் காற்றாலை களும் அமைக்க, மாநில அரசு திட்டமிட்டுள்ளது. மாநில அளவில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உற்பத்தித்திறன் 1,584.75 மெ. வாட் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய அரசின் நிலையங்களிலிருந்து தமிழ்நாடு, 700 மெ.வாட். மின்சாரத்தைப் பங்காகப் பெறக்கூடும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மின் சக்திக்கான தேவைகள் ஏறத்தாழ நிறைவு செய்யப்படும். எனினும், உச்சக்கட்ட தேவையினைச் சமாளிப்பதில் பற்றாக் குறை என்ற நிலையே அமையும். கிராமப்புறங்களிலுள்ள விவசாயி கட்கு மின்சாரம் வழங்குவதில் பிரிவுக் கட்டுப்பாடுகளைத் தொடர்வதன் மூலம் நிலைமையைச் சமாளிக்கலாம்.

வட சென்னை அனல் மின் நிலையம்.

28. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு 1986 ஆம் ஆண்டிலேயே ஏற்பு அளிக்கப்பட்டும், ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாகப் பணி மேற்கொள்ளப்படவில்லை. இறுதியான விரிவாக்கமான 2,050 மெ.வாட் என்பதைக் கணக்கில் கொண்டு இந்த நிலையத்தை அமைப்பதற்கும், ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள கலிங்கா சுரங்கத்திலிருந்து இந்த நிலையத்துக்கு நிலக்கரி கொண்டு வர ஒரு துறைமுகம் அமைப்பதற்கும், செங்கை-அண்ணா மாவட்டம் பொன்னேரி தாலுக்கா, எண்ணூர் மற்றும் புழுதிவாக்கம் கிராமங்களில், 2,180 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த மின்வாரியம் திட்டமிட்டது. நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்துச் சில நில உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். ஆனால் இந்த வழக்குகள், 1987 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த மனுதாரர்களால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுவினால் 1988ஆம் ஆண்டில் பிப்ரவரியில் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு மனு தாக்கல் செய்தனர். வழக்கு நிலுவையில் உள்ளது. சுற்றுப்புறச் சூழல் அடிப்படையில் டெல்லியிலுள்ள சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குழு அமைப்பும்

வடசென்னை நல வாழ்வுச் சங்கமும், அனல் மின் நிலையம் அமைப்பதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சரின் முயற்சியால் பெரும் பரப்புள்ள நிலங்கட்கு உரிமையாளரான ஒரு பகுதி மனுதாரர்கள் நிபந்தனை ஏதும் இன்றி, உச்சநீதிமன்றத்திலுள்ள தங்கள் மனுக்களைத் திரும்பப் பெற்றுவிட்டனர். இது, திட்டத்துக்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கு வழிவகுத்தது. மாண்புமிகு குடியரசுத் தலைவர், 1—7—1989 அன்று பணியினைத் துவங்கிவைத்தார் என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மற்ற மனுதாரர்களின் வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையாக உள்ளன. உச்ச நீதி மன்றத்தில் இவற்றின் மீது விரைவில் தீர்ப்புப்பெற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கையகப்படுத்தும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவோரை வேறு இடங்களில் குடியமர்த்த வாரியம் ஒரு திட்டம் வகுத்துள்ளது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 செண்ட் நிலமும், குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலையும் மேலும் புது இடத்தில் குடியேற நிதி உதவியும் வழங்குதல், இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தினை ஏற்றுக்கொண்டு பெரும்பாலான குடிபெயர்க்கப்பட்ட குடும்பங்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட புது இடங்களில் குடியேறி வருகின்றனர். இத்திட்டத்தின் 210 மெ.வாட். முதல் பகுதி 1993 ஆம் ஆண்டு மார்ச்சில் பணி துவங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, மேலும் இரண்டு 210 மெ.வாட். பிரிவுகள் 6 மாத இடைவெளியில் ஒவ்வொன்றாகப் பணி துவங்கும். ஆசிய நாடுகளின் முன்னேற்ற வங்கி இத்திட்டத்துக்கென, 150 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் உதவி வழங்கியுள்ளது. இரண்டாவது கடன் வழங்கும் கருத்துருவும் ஆய்வில் உள்ளது.

பேசின் பிரிட்ஜ் எரிவாயு மின் திட்டம்.

29. ரூ. 123 கோடி மதிப்பீட்டில், ஒவ்வொன்றும் 30 மெ. வாட். திறன்கொண்ட, 4 பகுதிகள் கொண்ட ஒரு எரிவாயு மின் நிலையத்தை பேசின் பிரிட்ஜ் இல் அமைக்க திட்டக்குழு சமீபத்தில் இசைந்துள்ளது. இத்திட்டத்துக்கென, ஜப்பான் நாட்டு அரசு 11,450 மில்லியன் யென் கடன் வழங்க இசைந்துள்ளது. இத்திட்டத்துக்கான பணி விரைவில் துவங்கும், 1992-93 ஆம் ஆண்டு முடிவுக்குள், நான்கு பகுதிகளும் நிறுவப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நரிமணம் எரிவாயு மின் திட்டம்.

30. தஞ்சை மாவட்டம் கோவில் கலப்பல் கிராமத்தில் 5 மெ. வாட். எரிவாயு மின் நிலையமும், தென்னாற்காடு மாவட்டத்தில் புவனகிரியில் 5 மெ. வாட் எரிவாயு மின் நிலையமும் அமைக்க மின் வாரியம் கருதியது. துரதிர்ஷ்டவசமாக, கோவில்

1990 மே 11]

கலப்பல் கிராமத்திலுள்ள எரிவாயுவில், ஹைட்ரஜன் சல்பைட் இருப்பதால் உறுதி அளித்தவாறு எண்ணை மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம், எரிவாயு வழங்க முடியவில்லை. புவனகிரியில் உற்பத்தி மேற்படி கழகத்தால் நிலைப்படுத்தப்படவில்லை. தற்போது, எண்ணை மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம், நரிமணம் கிராமத்தில், நாளொன்றுக்கு 70,000 கன மீட்டர் எரிவாயு வழங்க இசைந்துள்ளது. தமிழ்நாடு மின் வாரியம் இந்தக்கிராமத்தில் 5 மெகாவாட் திறனுடன் இரண்டு பகுதிகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இந்த இரண்டு பகுதிகளும் 1991 மார்ச் திங்களுக்குள் நிறுவப்பட்டுவிடும் என எதிர் பார்க்கப் படுகிறது.

31. 150 மெ. வாட். திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டத்துக்கும் 15 மெ.வா. திறன் கொண்ட சாத்தனூர் புனல் மின் திட்டத்துக்கும், 8 மெ.வாட். திறன் கொண்ட கீழ்பவானி வலதுகரைக் கால்வாய் புனல் மின் திட்டத்துக்கும் திட்டக் குழு ஏற்பு அளித்துள்ளது. மின்வாரியம் இந்த எல்லாத் திட்டங்களையும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. ஆனால், பயன்கள் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தான் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

32. மாநிலம், செலவில் குறைந்த நீர் மின் வாய்ப்புக்களை முழுவதுமாகப் பயன்படுத்திவிட்டது. மற்ற நீர் மின் வாய்ப் புக்கள் பல மாநிலங்களுடன் தொடர்புடையவை ஆகவோ அல்லது வனப்பகுதி மற்றும் சரணாலயங்களில் அமைந்தவை ஆகவோ இருப்பதால் முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை, எனவே, பெரிய அளவில் நீர் மின் திட்டங்கள் அமைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு. அணுமின் உற்பத்தி மத்திய அரசைச் சார்ந்தது. மாநிலத்தில், இரண்டாவது அணுமின் நிலையத்தை ஒவ்வொன்றும் 1,000 மெ.வாட் திறனுடன் 2 பகுதிகள் கொண்டதாகக் கூடங்குளத்தில் அமைக்க ஏற்கனவே திட்டமிடப் பட்டுள்ளது. ஆனால், இந்த நிலையம் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில்தான் செயலுக்கு வரும். மாநிலத்தில் நிலக்கரிப் படிவங்கள் இல்லை. மாநிலத்தின் அனல் மின் நிலையங்கள், தமது நிலக்கரித் தேவைக்கென, ஆந்திரா, வங்காளம், பீகார் மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா மாநிலங்களைச் சார்ந்து இருக்கின்றன. எனவே, இனிவரும் அனல் மின் நிலையங்கட்கு நிலக்கரி கிடைப்பதில் சிரமம் ஏற்படும். காவிரிப் படுகையில் எண்ணெய் மற்றும் எரிவாயு பெற எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகள் உற்சாகமூட்டுபவையாக அமைந்துள்ளன. மின் உற்பத்திக்கென இயற்கை எரிபொருள் தட்டுப்பாடு உள்ள நிலையில், இயற்கை எரிவாயுவைக் கொண்டு விரைவில் மின் உற்பத்தித்திறனை உருவாக்கலாம் என்பதால் நிலத்தடியிலும் கடலுக்கடியிலுள்ள எண்ணெய் கிணறுகளிலும் கிடைக்கும் எரிவாயு முழுவதும் மாநிலத்தின் மின் உற்பத்திக்

கென ஒதுக்கப்பட வேண்டும். மாநிலத்தில் கிடைக்கும் ஒரே படிவம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி மட்டுமே. இதனையும் மின் உற்பத்திச்கென சாமர்த்தியமாகப் பயன் படுத்தவேண்டும்.

வருங்கால எரிவாயு மின் திட்டங்கள்.

33. காவிரிப் படுகையில் தரையில் எரிவாயு எடுப்பதுடன் தஞ்சாவூர் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கருகில், கடலுக்கடியில், எண்ணெயும், எரிவாயுவும் எடுக்க எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் திட்டமிட்டுள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் தஞ்சை மாவட்டம் திருமுல்லை வாசலுக்கு அருகில், நாளொன்றுக்கு, 0.35 மி.க. மீ. எரிவாயு வழங்க இயலும் என மேற்படிக் கழகம் கூறியுள்ளது. எனினும், உற்பத்தித் திட்டம் இன்னும் உறுதியாகவில்லை. எனினும் அந்தக் கால கட்டத்தில் எரிவாயு வழங்கும் மேற்படி கழகத்தின் திட்டத்துடன் இணக்கம் பெறவும், எரிவாயு வீணாக எரிந்து போவதைத் தடுக்கவும், தமிழ்நாடு மின் வாரியம், திருமுல்லை வாசலில் ஒரு 90 மெ. வாட் இணைந்த எரிவாயு மின் நிலையம் அமைக்கத் திட்ட அறிக்கை தயாரித்துள்ளது. போர்ட்டோ நோவோவுக்கு 25 கி. மீட்டர் கிழக்கில், ஒரு கிணற்றிலிருந்து எரி வாயு உற்பத்தி செய்யும் திட்டம் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்திடம் உள்ளது. இதைக் கொண்டு 196 மெ.வாட். மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும். தமிழ் நாடு மின்வாரியம், இதற்கென ஒரு முன்னோடி சாத்தியக் கூறு அறிக்கை தயாரித்துள்ளது. இக்கிணற்றிலிருந்து கிடைக்கும் எரிவாயுவை மாநிலத்தேவைக்கென ஒதுக்குமாறு, மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில், இயற்கை எரிவாயுவைப் பயன் படுத்தி, இணைந்த சுற்றுமுறையில், ஏறத்தாழ 300 மெ.வாட். கூடுதல் மின் உற்பத்தித்திறனை உருவாக்கலாம் என மின் வாரியம் எதிர்பார்க்கிறது.

பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் மாநிலத் திட்டங்கள்.

34. தற்போது மத்திய அரசுக்குச் சொந்தமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், மாநிலத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி வருகிறது. நெய்வேலியில் ஏற்கனவே, இரண்டு அனல் மின் நிலையங்களை அக்கழகம் அமைத்துள்ளது. 600 மெ. வாட். திறன் கொண்ட முதல் நிலையத்தின் உற்பத்தி முழுவதும் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த போதிலும், மத்திய மின் நிலையங்களின் உற்பத்தியைப் பங்கிடும் முறையின் அடிப்படையில், இரண்டாவது நிலையத்தின் உற்பத்தியில் 28 சதவீதம் மட்டுமே, மாநிலத்தின்

1990 மே 11]

பங்காகக் கிடைக்கிறது. வருங்காலத்தில் பழுப்பு நிலக்கரியை சார்ந்த அனல்மின் நிலையங்களை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் அமைத்தால், அதன் மின் உற்பத்தியை, நம் மாநிலம், இம்மண்டலத்தில் அண்டை மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம் பகுதியில் பெரும் அளவில் பழுப்பு நிலக்கரி இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நிலக்கரியை, மின் உற்பத்தி செய்வதற்கென மாநிலமே பயன்படுத்த முடியுமா என்பது பற்றி மாநில அரசு ஆராய்ந்து வருகிறது. எனினும், இந்த முயற்சி ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தான் வெற்றி பெறும். ஒவ்வொன்றும், 210 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு பகுதிகளை முதல் மின் நிலையத்திலும், 210 மெகா வாட் திறன் கொண்ட ஒரு பகுதியை இரண்டாவது மின் நிலையத்திலும் கூடுதலாக நிறுவ, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்களிலிருந்து பெரும் பங்கு மின் சக்தியை நாம் பெறும் வகையில், இத்திட்டங்களின், முதலீட்டில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களை நாம் ஆராய்ந்து வருகிறோம்.

தனியார் துறையில் மின்உற்பத்தி.

35. ஏற்கெனவே, நான் குறிப்பிட்டவாறு, மின் உற்பத்திக்கு பெருமளவில் நிதி முதலீடு தேவை. மின் உற்பத்திக்கான தேவை விரைவாக அதிகரித்து வரும் நிலையில் தேவையான மின் உற்பத்தித் திறனை அமைப்பதற்குப் போதுமான நிதி கிடைப்பது சாத்தியமில்லை. மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் உதவியைத் தவிர, புது மின் உற்பத்தி நிலையங்களைத் தாமே தனியாகவோ, அல்லது அரசின் கூட்டுடனோ அமைப்பதில் தனியார் துறையினை ஊக்குவிப்பது தேவையாகிறது. தொழில் நிறுவனங்கள், சிறுபுனல் மின் நிலையங்களை அமைக்க, அவற்றை ஊக்குவிப்பதற்கென சில நிபந்தனைகட்குட்பட்டு, தனியார் துறையில் சிறு நுண் புனல் மின் நிலையங்களை அமைக்க அனுமதி வழங்கி அரசு சமீபத்தில் ஓர் ஆணை பிறப்பித்துள்ளது. இயற்கை எரிவாயு அல்லது பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின் நிலையங்களை அமைக்கத் தனியார் யாரேனும் முன்வந்தால் அவர்களையும் அரசு ஊக்குவிக்கும்.

36. உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியை விநியோகம் செய்வதற்கு, ஒரு சிறந்த அனுப்புகை மற்றும் பகிர்வுத் தொடர் அமைப்பு தேவை என்றால் மிகையாகாது. மின் உற்பத்தி நிலையங்கள், மாநிலம் முழுவதும் பரவலாக அமைந்துள்ளது ஒரு வசதியாகும். புனல் மின் நிலையங்கள் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளன. அனல் மின் நிலையங்கள் மாநிலத்தின் வடக்கு, தெற்கு மற்றும் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளன. இந்த வசதி இருந்தபோதிலும், அனுப்புகை அமைப்புக்கென

கடந்த திட்ட காலங்களில் செய்த நிதி முதலீடு போதுமானதாக இல்லை. ஒரு நல்ல அமைப்பில், உற்பத்தி மற்றும் அனுப்புகை, பகிர்வு மற்றும் ஊரக மின் இணைப்புக்களுக்கு இடையே ஆன நிதி முதலீடு 60 : 40 என்ற விகிதத்தில் அமைய வேண்டும். தற்போதுள்ள ஏற்பாட்டிலுள்ள குறைபாடுகளைக் களையும் வகையில், எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அனுப்புகை மற்றும் பகிர்வுக்கான நிதி முதலீட்டைப் போதுமான அளவு அதிகரிக்க, அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள 18.5 சதவீதம் என்ற நிலையிலிருந்து, இடைவழி இழப்பினை, மேலும் குறைப்பதற்கு, இது வழிகோலும். எனினும் நாட்டின் சராசரி இடைவழி இழப்பு நிலையான 20.3 சதவீதத்தைவிட தற்போதுள்ள நிலை குறைவே ஆகும்.

சென்னை நகர் பகிர்வுக்கென பெருந் திட்டம்.

37. சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதிலும் அனுப்புகை மற்றும் பகிர்வு அமைப்பினை மேம்படுத்த, தமிழ்நாடு மின்சார வாரியம், பத்து ஆண்டுக்கான பெரும் திட்டத்தைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையில், ரூ. 178 கோடி செலவில், ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுத் திட்டக் குழுவின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. ஆசிய நாடுகள் முன்னேற்ற வங்கியின் நிதி உதவிக்கென, இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

38. விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டி, மின் வாரியத்திடம், ஏறத்தாழ 4.75 இலட்சம் விண்ணப்பங்கள், தற்போது நிலுவையில் உள்ளன. எல்லா விண்ணப்பதாரர்கட்கும் மின் இணைப்பு வழங்க வேண்டுமாயின், இதற்கென மட்டும், சுமார் ரூ. 1,500 கோடி முதலீடு தேவைப்படும். இப்பெரும் அளவில் நிதி கிடைப்பது கடினம். இவ்வாறு பெரும் அளவில் நிலத்தடி நீரை வெளியேற்றுவதால் சில பகுதிகளில் நிலத்தடி நீர் அளவு மிகவும் குறைந்துவிட்டது. எனவே, நிலத்தடி நீரை முழு அளவில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான ஒரு கொள்கை வகுப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

1990–91 ஆண்டுத் திட்டம்.

39. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் உறுதியாக்கப்படவில்லை. 1990–91ல் மின் உற்பத்தி மேம்பாட்டுக்கென திட்டக் குழு ரூ. 455 கோடி முதலீட்டுக்கு ஏற்பு அளித்துள்ளது. இந்த முதலீட்டில், ரூ. 288.50 கோடி மின் உற்பத்திக்கெனவும், ரூ. 155 கோடி அனுப்புகை மற்றும் பகிர்வுக்கெனவும், ரூ. 10 கோடி ஊரக மின் இணைப்புக்கெனவும், ரூ. 1.50 கோடி வேறு பணிகளுக்கெனவும் செலவிடப்படும். மேலும் திட்டச் செலவின் கீழ், 1990–91-ல் மின் வாரியம், காற்றாலைத் திட்டங்

1990 மே 11]

களுக்கென ரூ. 1.50 கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது. இவை தவிர, 1990–91 ஆம் ஆண்டில், மின்சாரத்துக்கென மொத்த முதலீடு ரூ. 516.69 கோடியாக அமையும் வகையில் ஊரக மின் வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க ரூ. 57.60 கோடியும், மத்திய நிதி உதவித் திட்டங்களுக்கென ரூ. 2.59 கோடியும் செலவிட தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளது.

1990-91-க்கான இலக்குகள்.

40. மேற்கண்ட முதலீட்டுடன், 1990–91 இல் 222 மெ. வா. கூடுதல் மின் உற்பத்தியும், 40,000 கூடுதலான பம்பு செட்டு களுக்கு மின் இணைப்பும், 40,000 கூடுதல் குடிசைகட்கு மின் இணைப்பும் கிடைக்கப் பெறும்.

41. இப்போது நான் இவற்றுடன் தொடர்புடைய ஏனைய விபரங்களைக் கூறுகிறேன். மின்சார வாரியம், தனது பணியா ளர்களுடன் சுமுகமான தொழில் ரீதியான உறவு கொண்டுள்ளது என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மின்சார வாரியம் தனது பணியாளருக்கான ஊதியம் மற்றும் ஏனைய படிகளுக் கான விகிதங்களை 1-12-1988 முதல் திருத்தி அமைத்துள்ளது. குறைந்தபட்ச ஊதிய உயர்வு ரூ. 200 ஆகும். இந்த ஊதியத் திருத்தத்தினால், சுமார் 95,000 பணியாளர்கள் பயன் அடைந் தனர். 14–12-1987 அன்றும், அதற்குப் பின்னரும் ஓய்வு பெறுவோர் அல்லது பணிக் காலத்திலேயே இறப்போருக்கான இறப்பு மற்றும் ஓய்வுக்கான கருணைத் தொகையின் உச்ச வரம்பு ரூ. 60,000-லிருந்து ரூ. 1,00,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 19–5–1988 முதல், மின் வாரியத்தின் பணியாளர்களுக்கு மாநிலத்தின் எல்லைக்குள், விடுமுறைப் பயணச் சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

42. தகுதி பெற்ற எல்லாப் பணியாளர்களுக்கும், 1988–89 ஆம் ஆண்டுக்கென ஊதியத்தில் 8.33 சதவீதம் அல்லது ரூபாய் 100 இவற்றில் கூடுதலான தொகையை போனசாகவும், ஊதியத் தில் 4.17 சதவீதம் அல்லது ரூ. 500 இவற்றில் கூடுதலான தொகையைக் கருணைக் கொடையாகவும் மின் வாரியம் வழங்கி யுள்ளது.

43. மேட்டூர் அனல் மின் நிலையத் திட்டத்திலும், நிலையத் திலும் ஒரு ஆண்டும், அதற்கு அதிகமாகவும், பணியாற்றியுள்ள பணியாளர்கட்கு அவர்களது திறமையான பணியைப் பாராட்டி, ஒரு மாத ஊதியம் மற்றும் அகவிலைப்படியை ஊக்குவிப்புத் தொகையாக வழங்க மின் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

44. 1-4-1989-க்குப் பின்னர், 200 மின் பொறியாளரும், 40 இயந்திரப் பொறியாளரும் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 563 பட்டயப் பொறியாளர்கள் II நிலை தொழில் நுட்ப உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 166 பேர், ஆதி திராவிடர்/பழங்குடியினர். இறந்து போன பணியாளர்களைச் சார்ந்துள்ள 322 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. மின் வாரியத்தில், உதவிப் பொறியாளர்களாகத் தேர்வு செய்யப்பட, முதல் வகுப்புப் பொறியியல் பட்டதாரிகள் மட்டுமே தகுதி பெறுவர் என்ற விதி விலக்கப்பட்டு விட்டது.

பெறப்பட்ட விருதுகள்.

45. எண்ணூர் அனல் மின் நிலைய தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், 1987-88-ல், மாநிலத்தில், சிறப்பாகப் பணிபுரியும் சங்கங்களில் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் பணிமனை, 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளுக்கான, சிறந்த பாதுகாப்புக்கான மாநில விருதைப் பெற்றுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் சிறந்த நிறுவனத்துக்கான விருது பெற, 1988-89 ஆம் வருடத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் தமிழ்நாடு மின் வாரியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் கல்வியில் சிறந்த சேவைக்கென, தொழிலாளர் கல்வி மண்டல ஆலோசனைக் குழு தமிழ்நாடு மின் வாரியத்துக்குத் திறமைச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

46. மின்சார வாரியம் என்பது, பல்வேறு பிரச்சினைகள் நிறைந்த ஒரு சிக்கலான நிறுவனம் ஆகும். எனவே, அதன் செயல் திறனை மேம்படுத்த எப்போதும் வாய்ப்புண்டு. தமிழ்நாடு மின் வாரியத்தின் செயல் முறையைப் பற்றியும், குறிப்பாகத் தேவையையும், கையிருப்பையும் இணைப்பதிலும், வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதிலும் மின் வாரியத்துக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விவரிக்க முனைந்தேன். மின் வாரியத்தின் செயல்பாட்டினை மேம்படுத்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை வரவேற்கிறேன்.

துரைமுருகன்,
பொதுப் பணித் துறை அமைச்சர்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1.

தமிழ்நாட்டில் திட்டவாரியான மின்வளர்ச்சி.

தொடர் எண்ணும் விளக்கமும்.	திட்டத் துக்கு முன்பு. 31-3-1951.	1-ஆம் திட்டம் 1951-1956.	2-ஆம் திட்டம் 1956-1961.	3-ஆம் திட்டம் 1961-1966.	ஆண்டுத் திட்டங்கள் 1966-1969.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
(அ) மின் உற்பத்தி.					
1 நிறுவுத் திறன் (மெ.வா.) மின் வாரியம்.	156	256	571	1,070	1,070
நெய்வேலி (பங்கு) ..	..	..	..	300	400
கல்பாக்கம் (பங்கு) ..	..	..	..	..	..
இராமகுண்டம் (பங்கு) ..	..	..	..	..	..
மொத்தம் ..	156	256	571	1,370	1,470
2 உச்சத் தேவை (மெ.வா.) ..	110	172	381	717	997
3 மொத்த மின் உற்பத்தி மற்றும் கொள்முதல் (மி.யூ.).	630	1,053	2,243	4,041	5,260

பு2 53-141—22

இணைப்பு 1—தொடர்ச்சி.

தமிழ்நாட்டில் திட்டவாரியான மின்வளர்ச்சி—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
(ஆ) மின் அனுப்புகை மற்றும் மின் பங்கீடு.					
1 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.).	6,936	11,479	24,194	39,806	48,336
2 குறைவு அழுத்த மின் கம்பித் தொடர்கள்.	5,728	13,055	35,352	73,198	1,04,977
3 கூடுதல் உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை.	31	48	70	98	119
4 உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை.	25	41	73	103	114
5 மின் பங்கீட்டுத் துணை நிலையங்களின் எண்ணிக்கை.	1,591	3,773	10,004	17,360	22,842
6 பயனீட்டாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்.)	2.5	4.3	7.7	13.6	18.22
7 நபர்வாரியான பயன்பாடு (யூனிட்டுகள்).	12	21	60	92	116

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1—தொடர்ச்சி

தமிழ்நாட்டில் திட்டவாரியான மின்வளர்ச்சி—தொடர்ச்சி

(இ) கிராம மின் வசதி.

1 மின் இணைப்பு செய்யப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் (எண்ணிக்கை).	1,813	3,543	10,760	22,137	31,727
2 ஹரிஜன் காலனிகள் மின் இணைப்பு வழங்கப்பட்டவை.	—	—	939	3,548	7,282
3 மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளாண்மைப் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை.	14,373	33,440	1,17,695	2,56,594	4,18,119
4 மின் இணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்.)	—	..	..	..	..

(ஈ) மூலதனச் செலவு/வருவாய் (ரூபாய் கோடியில்.)

1 கால முடிவில் மூலதனச் செலவு.	23.82	54.01	133.21	253.28	356.07
2 மொத்த வருவாய்	3.18	5.94	15.82	34.67	50.22

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1—தொடர்ச்சி.

தமிழ்நாட்டில் திட்டவாரியான மின் வளர்ச்சி—தொடர்ச்சி.

தொடர் எண்ணும் விளக்கமும்.	4 ஆம் திட்டம் 1969–1974.	5 ஆம் திட்டம் 1974–1978.	ஆண்டுத் திட்டங்கள் 1978–1980.	6 ஆம் திட்டம் 1980–1985.	7 ஆம் திட்டம் 1985–1990.
(1)	(7)	(8)	(9)	(10)	(11)
(அ) மின் உற்பத்தி—					
1 நிறுவுத் திறன் (மெ. வா.) மின் வாரியம்.	1,654	1,824	2,119	2,509	3,877
நெய்வேலி (பங்கு) ..	600	600	600	600	776
கல்பாக்கம் (பங்கு) ..	..	..	..	235	350
இராமகுண்டம் (பங்கு) ..	..	..	..	..	470
மொத்தம் ..	2,254	2,424	2,719	3,344	5,473
2 உச்சத் தேவை (மெ.வா.) ..	1,287	1,641	1,710	2,154	2,929
3 மொத்த மின் உற்பத்தி மற்றும் கொள் முதல் (மி.யூ.)	6,948	9,453	10,414	13,731	18,672

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	(ஆ) மின் அனுப்புகை மற்றும் மின் பங்கீடு—					
1	கூடுதல் உயர் மின் அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.).	68,737	72,689	77,126	87,250	99,797
2	குறைவு அழுத்த மின் கம்பித் தொடர்கள்.	1,97,017	2,22,659	2,49,226	2,78,515	3,21,673
3	கூடுதல் உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை.	146	174	192	231	300
4	உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை.	125	150	164	169	200
5	மின் பங்கீட்டுத் துணை நிலையங்களின் எண்ணிக்கை.	37,453	43,666	48,575	63,667	80,619
6	பயனீட்டாளரின் எண்ணிக்கை (இலட்சத்தில்.)	27.07	34.00	39.97	58.27	80.05
7	நபர்வாரியான பயன்பாடு (யூனிட்டுகள்).	127	157	183	195	282
	(இ) கிராம மின் வசதி—					
1	மின் இணைப்பு செய்யப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் (எண்ணிக்கை).	61,072	63,339	63,428	63,648	63,956

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
2	ஹரிஜன் காலனிகள் மின் இணைப்பு வழங்கப்பட்டவை.	23,768	24,797	25,653	26,137	26,431
3	மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளாண்மைப் பம்பு செட்டு களின் எண்ணிக்கை.	6,81,205	8,05,616	8,87,227	10,33,556	12,77,501
4	மின் இணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்.)	..	..	1.67	6.36	8.87
(ஈ)	மூலதனச் செலவு/வருவாய் ரூபாய் கோடியில்.)—					
1	கால முடிவில் மூலதனச் செலவு.	552.20	799.09	1,042.90	1,881.81	4,153.37
2	மொத்த வருவாய்	114.28	223.14	284.19	705.00	1,561.98

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985 —1990).

சுருக்கம்.

(ரூபாய் கோடியில்)

தொடர் எண்ணும், திட்டமும்.	7 ஆவது திட்ட முதலீடு.	செலவு. 1985-86.	1986-87.	1987-88.
(1)	(2)	(3)	(4)	(5)
1 நில அளவை மற்றும் ஆய்வு ..	10.00	1.11	1.03	1.46
2 உற்பத்தித் திட்டங்கள்	12,58.82	2,20.51	2,36.06	2,52.21
3 அனுப்புகை/பகிர்வு	6,50.00	70.48	1,02.13	1,02.76
4 ஊரக மின் இணைப்பு	81.18	23.60	32.44	24.06
மொத்தம் ..	20,00.00	3,15.70	3,71.66	3,80.49

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
5 அனல் மின் நிலையங்களின் புனரமைப்புக்கான மத்திய உதவித் திட்டம்.	21.43	8.68	10.78	3.62
6 திட்டத்துக்கு புறம்பாக ஊரக மின் இணைப்பு.	1,35.00	11.44	28.93	49.15
7 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் பூனாச்சி சிறு புனல் திட்டம்.	..	..	..	..
8 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மரவகண்டி).	..	..	..	..
பெரு மொத்தம் ..	21,56.43	3,35.82	4,11.37	4,33.26

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II—தொடர்ச்சி.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985—1990)—தொடர்ச்சி.

சுருக்கம்.

தொடர் எண்ணும் திட்டமும்.	செலவு. 1988–89	1989–90	மொத்தம்.
(1)	(6)	(7)	(8)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1 நில அளவை மற்றும் ஆய்வு	1.88	2.57	8.05
2 உற்பத்தித் திட்டங்கள்	198.22	290.79	1,197.79
3 அனுப்புகை/பகிர்வு	138.68	143.45	557.50
4 ஊரக மின் இணைப்பு	12.00	8.78	100.88
மொத்தம் ..	350.78	445.59	1,864.22
5 அனல் மின் நிலையங்களின் புனரமைப்புக்கான மத்திய உதவித் திட்டம்.	5.66	3.45	32.19
6 திட்டத்துக்குப் புறம்பாக ஊரக மின் இணைப்பு.	45.43	45.78	180.73

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(6)	(7)	(8)
7 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் பூனாச்சி சிறு புனல் திட்டம்.	0.10	0.66	0.76
8 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மரவகண்டி).	0.10	0.21	0.31
பெரு மொத்தம் ..	402.07	495.69	2,078.21

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—III.

ஆண்டுத் திட்டங்கள் 1988-89, 1989–90.

நிதி இலக்குகளும், சாதனைகளும் (ரூபாய் கோடியில்).

தொடர் எண்ணும் திட்டமும்.	மதிப்பீடு.	7 ஆவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு.	செலவு 1988-89.	செலவு 31-3-1989 வரை.	செலவு 1989-90 இ.இ.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1990-91.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. நில அளவை மற்றும் ஆயவு முதலியவை.	..	10.00	1.88	..	2.57	1.50
11. உற்பத்தித் திட்டங்கள் :						
(அ) முடிந்தவை	..	0.50	•	..		..
(ஆ) நடப்பவை	..	..	..		..	..

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
புனல் திட்டங்கள் :						
1 சேர்வலாறு	46.00	2.75	1.25	45.19	1.40	0.50
2 காடம்பாறை	180.50	35.77	5.16	176.37	1.80	..
3 கீழ் மேட்டூர்	165.38	43.23	7.33	162.67	5.92	1.56
4 குந்தா கட்டம் V. கூடுதல் பிரிவு	13.32	5.96	0.98	13.27	0.52	..
5 பார்ஸன் பள்ளத்தாக்கு ..	23.53	13.63	..	0.10	..	..
6 பைக்காரா அணை	6.86	2.05	2.11	4.85	1.96	..
7 கீழ்பவானி	20.75	7.74	3.50	14.39	5.15	1.21
8 வைகை அணை	14.01	4.87	2.80	9.65	3.45	0.90
அனல் மின் திட்டங்கள் ;						
9 மேட்டூர் கட்டம் I	384.32	214.35	1.07	384.20	0.09	..
10 மேட்டூர் கட்டம் II	361.70	240.00	75.00	280.09	51.61	15.00
(இ) புதுத் திட்டங்கள் :						
புனல் திட்டங்கள் :						
1 சந்திநல்லா-மேல் கொடுமுடு தடமாற்றம்.	1.84	..	0.49	1.18	0.09	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அனல் மின் திட்டங்கள் :						
2 சாத்தனூர்	16.42	..	0.05	0.05	..	..
3 கீழ்பவானி அணை வ.க. கால்வாய்	11.56	..	0.05	0.05	..	..
4 பைக்காரா இறுதி கட்டம்	114.78	..	2.00	2.00	3.02	4.10
5 தூத்துக்குடி கட்டம் III	605.55	..	80.31	163.04	140.00	135.00
6 வட சென்னை கட்டம் I	763.87	..	6.96	38.99	42.10	100.00
7 நரிமணம் எரிவாயு திட்டம்	22.77	..	..	..	0.91	8.00
8 பேசின்பிரிட்ஜ் எரிவாயு திட்டம்	123.00	..	..	..	..	10.50
9 காற்றாலைகள்	— ..	..	..	..	3.48	1.50
(ஈ) புனரமைத்தலும், நவீனப்படுத்தலும் :						
1 எண்ணூர் மேம்பாடு கட்டம் I	49.84	4.80	0.54	41.35	0.70	..
2 எண்ணூர் மேம்பாடு கட்டம் II	69.82	30.35	5.24	34.30	18.88	14.84
3 தூத்துக்குடி மேம்பாடு	2.25	0.90	0.01	1.84	..	..
4 எண்ணூர் கூடுதல் பணிகள்	13.45	..	3.19	5.80	1.82	..
5 தூத்துக்குடி கூடுதல் பணிகள் —	1.50	..	0.18	0.18	0.29	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
(ஈ) புனரமைத்தலும் நவீனப்படுத்தலும்—தொடர்ச்சி :						
6 எண்ணூர் பகுதி மற்றும் III, IV பழுது பார்த்தல்.	..	..	..	..	7.60	..
மொத்த உற்பத்தி	..	1,258.82	198.22	..	290.79	290.00
III. அனுப்புகை/பகிர்வு கையகப் படுத்துதல் உட்பட	..	650.00	138.68	..	143.45	155.00
IV ஊரக மின் இணைப்பு ..	..	81.18	12.00	..	8.78	10.00
மொத்தம் I–IV	..	2,000.00	350.78	..	445.59	456.50
V. அனல் மின் நிலையங்கள் புனரமைப்பு மத்திய உதவித் திட்டம் :						
1 எண்ணூர் கட்டம் I	11.92	6.57	0.39	11.49	0.26	..
2 எண்ணூர் கட்டம் II	18.21	8.19	4.89	13.45	3.18	0.78
3 தூத்துக்குடி அனல் மின் நிலையம்	6.47	6.67	0.38	6.51	..	...
துணை மொத்தம் V.	..	21.43	5.66	..	3.45	..
VI திட்டத்துக்குப் புறம்பாக ஊரக மின் இணைப்புத் திட்டம்.	..	135.00	45.43	..	45.78	57.60

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
VII. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம். ..						
பூனாச்சி சிறுபுனல்	3.67	2.50	0.10	0.10	0.66	1.23
VIII. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மரவகண்டி).	1.43	0.77	0.10	0.10	0.21	0.59
பெரு மொத்தம்	..	2,159.70	402.07	..	495,69	516.69

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV.

31—3—1990 அன்று கிராம மின் இணைப்பு நிலவரம் :

தொடர் எண்ணும் மற்றும் இனமும்.	தற்போது உள்ளவை.	மின் இணைப்பு செய்யப்பட்டவை. 31-3-1989-ல் உள்ளபடி	1988-89	31-3-1990 நிலவரம்.	சத விகிதம்.	1-4-1990 இல் மின் இணைப்பு பெற வேண்டியவை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		(எண்ணிக்கையில்.)				
1 நகரங்கள்	439	439	..	439	100	..
2 கிராமங்கள்	15,831*	15,813		15,813	99.94	10
3 சிற்றூர்கள்	47,838	47,659	45	47,704	99.72	134
மொத்தம்	64,108*	63,911	45	63,956	99.78	144
4 வேளாண்மை விசையேற்றங்கள்	12,35,941	41,560	12,77,501	..	..	..
5 குடிமசைகள்	8,44,916	42,284	8,87,200	..	..	..

* குடியிருப்பு இல்லாத 8 கிராமங்களையும் சேர்த்து.